**திருவருள் சக்தி - குருவருள் ஜோதிடம்**

**இணைந்து வழங்கும்**

# 12 இராசிகளுக்கும்

# சனிப்பெயர்ச்சி

# பலன்கள் - பரிகாரங்கள்

**திருக்கணித பஞ்சாங்கம்**
**02.11.2014 - 25.01.2017**

**வாக்கிய பஞ்சாங்கம்**
**16.12.2014 - 20.11.2017**

**( திருக்கணிதப்படி கணிக்கப்பட்டது )**



திருக்கணித ரீதியாக சனிப்பெயர்ச்சி பலன்கள் கணிக்கப்பட்ட போதிலும், இது '**திருநள்ளாறு**' வாக்கிய சனிப்பெயர்ச்சி பலன்களுக்கும் பொருந்தும். அதிக வித்தியாசம் இருக்காது. இப்பலன்கள் 'வாக்கியம்' மற்றும் 'திருக்கணிதம்' இரண்டு முறைகளுக்கும் பொருந்தும் வண்ணம் மிகத்துல்லியமாகக் கணித்துக் கொடுக்கப்பட்டுள்ளது


பலன்களை கணித்து வழங்குபவர்
**உலகப்புகழ் ஜோதிட மேதை**
**பண்டிட் காழியூர் நாராயணன்**



பதிப்புரிமை பெற்ற
வெளியீட்டாளர்:

**அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்**

நெ.18/67, பிரசன்ன விநாயகர் கோவில் முதல் தெரு,
புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.
**Ph : 044 2811 6770 | Cell: 72999 21880/ 72990 21880**
**E mail : apsarapublications@gmail.com**




## பண்டிட் காழியூர் நாராயணன்

**கௌரவ ஆசிரியர்: திருவருள் சக்தி**
**சிறப்பு ஆசிரியர்: குருவருள் ஜோதிடம்**

ப.எண்: 37A, பு.எண்: 52, மோதிலால் தெரு,
தி.நகர், சென்னை- 600 017.

செல்: **98405 76302.**
**Email:astrokaliyur@yahoo.com**




**அன்பான வாசகர்களுக்கு வணக்கம்,**

*சனிப்பெயர்ச்சி பலன்கள் மூலமாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. வருகின்ற 2.11.2014ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் நாள் சதயம் நட்சத்திரத்தில், மிதுன இலக்கினத்தில், கும்ப இராசியில், இராகு திசை ஆரம்பத்தில் இரவு 8.54 மணிக்கு இதுவரை துலாம் இராசியில் உச்ச வீட்டில் சஞ்சரித்து வந்த சனி பகவான் செவ்வாயின் வீடான விருச்சிக இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். இது திருக்கணிதப்படி நடக்கிறது. வாக்கியப்படி 16.12.2014 அன்று சனி பெயர்ச்சி வருகிறது. இங்கு கொடுக்கப்பட்டுள்ள பலன்கள் திருக்கணிதம் மற்றும் வாக்கியம் ஆகிய இரண்டு பஞ் சாங்கங்களுக்கும் பொருந்தும்படி கணித்து கொடுக்கப்பட்டு உள்ளது.*

*அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்த சனிப்பெயர்ச்சி பலருக்கு ஏற்றத்தையும், சிலருக்கு ஏமாற்றத்தையும் தரத் தயாராக உள்ள நிலையில் சனியினால் தீமை வரும் என்று அஞ்சும்படியான பலன்கள் அடைபவர்கள் அந்தந்த இராசியில் சொல்லப்பட்டுள்ள எளிய பரிகாரங்களைக் கடைபிடித்து பக்குவம் பெறலாம். அதே போல் சனி பெயர்ச்சி என்பது கோட்சார பலன் தானே தவிர ஜெனன ஜாதகத்தையும் உரிய ஜோதிடரிடம் காட்டி உற்ற பரிகாரங்கள் தேடிக் கொள்வதும் அவசியம். 7½ சனிச் அஷ்டமச் சனி, அர்த்தாஷ்டம சனி, கண்டகச் சனி நடப்பவர்களுக்கு ஜாதகத்திலும் தீய தசா புத்தி நடந்தால் விபரீத பலன்கள் ஏற்பட்டு விரும்பத்தகாத விளைவுகள் வந்து விடும். என்பதால் ஜெனன ஜாதகத்தைப் பார்த்துக் கொள்வது அவசியம் சனியின் சஞ்சாரம் சரியில்லை என்றாலும் ஜெனன ஜாதகத்தில் நல்ல திசா, புத்தி நடந்தால் நல்ல பலன்களும், நாடறிய புகழும் ஏற்படும் என்பதால் அச்சமோ ஆதங்கமோ படத் தேவையில்லை.*

*சனி பெயர்ச்சியால் தீமை பெறும் இராசிகள் எனப் பார்க்கும் போது மேஷம், ரிஷபம், சிம்மம், துலாம், விருச்சிகம், தனுசு ஆகிய இராசிகளைச் சொல்லலாம். இந்த இராசியினர் உற்ற பரிகாரத்தை உரியபடி செய்து உயர்வான உன்னத வாழ்வை அடைய முடியும் என்பது திண்ணம்.*

| | | | |
|---|---|---|---|
| கேது | | | லக் / மா |
| சந் | சதயம் 2.11.2014 காலை 8.54 PM | | குரு |
| | | | |
| செவ் | சனி | சூரியன் சுக் | புத ராகு |



*மிகத்துல்லியமாக சனிப்பெயர்ச்சியாகும் நேரத்தில் அமைகின்ற கிரகநிலை இது. மிதுன இலக்கினம் இலக்கினாதிபதி புதன் 4இல் ஆட்சி/உச்சமாகி இராகுவைக் கூடி இருப்பதால் அதிக காற்றும், குறைந்த மழைப் பொழிவும் ஏற்பட்டு விவசாயத்துறை சற்று தடுமாற்றம் அடையும். 2இல் உச்ச குரு இருப்பதும் 2க்குடைய சந்திரன் 9இல் இருப்பதும் பணத் தட்டுப்பாடு நீங்கும். எல்லா தொழில்களும் ஏற்றம் பெறும் நிதி நிலை சீராகும் 7இல் செவ்வாய் புதிய போர் வரும் தீவிரவாதிகளால் அச்சுறுத்தல் ஏற்படும். கட்டிடம், நிலநடுக்கம் தொடர்பான விபத்துக்கள் ஏற்படும். சனி 6இல் விபரீத இராஜயோகம் நாட்டிற்கு உண்டு எனினும் ஆன்மிகவாதிகள் மீது அவப்பெயர் சுமத்தப்படும். இந்த சனிப்பெயர்ச்சியால் போர் பயம், மழைகுறைவு, விவசாயத்தில் பின்னடைவு இயற்கைச் சீற்றங்கள் ஆகியவை அரசுக்கு பெரிய சவாலாக இருக்கும். அன்னதானம் மூலம் அனைத்து பிரச்சினைகளையும் வெல்ல முடியும். இறையருள் காக்கட்டும் இன்பநிலை பூக்கட்டும். சுபீட்சத்தை பெறுவோம்*

பண்டிட் காழியூர் நாராயணன்

உ
மகா குரு சரணம்

# மகிழ்வித்து மகிழ் தெய்வீக மையம்

( உங்கள் பிரச்சனைகளுக்கு முழுமையான தீர்வு )

மகிழ்வித்து மகிழ்

No. 7, லைட் ஹவுஸ் காம்பளக்ஸ்,
4 ரோடு, சேலம் – 636 009.

No. 3-A, சன்னிதானம்,
P. 54 விஷாகா, 6th- அவன்யூ,
அண்ணாநகர், சென்னை–40.



**Cell : 98427-10545, 93677-10545** Web : mahaguru.co.in

சொர்ணாகர்சன சித்தர், பாம்பாட்டி சித்தர், போகர் வழி நடத்தும் பிரபஞ்ச சித்தர் குருஜி ஐயா, **S. ராஜகுமார்**

**இதுவரை எங்கு பார்திருப்பினும், எவ்வளவு பரிகாரம் செய்தும் பலன் இல்லையா?**
**குருஜி ஐயாவிடம் வாருங்கள் உங்கள் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்க...**
**உங்கள் வாழ்வில் வசந்தம் மலர்ந்திட...**

## உங்கள் பிரச்சனைக்கு சித்தரின் ஆலோசனை

- கணவன் மனைவி பிரச்சனை
- வட்டிகட்டட கடன் வாங்கும் நிலையில் பணக்கஷ்டம்
- வேலை செய்யும் இடத்தில் அதிகாரிகல் தொல்லை
- செய்வினை, ஏவல், பில்லி, சூன்யம் போன்ற உங்கள் கண்களுக்கு தெரியாத துர்சக்திகளால் உங்கள் வாழ்வில் பிரச்சனை
- விரும்பியவரை திருமணம் செய்ய இயலாத நிலை
- கலைதுறையில் பிரகாசிக்க
- கல்லியில் மேம்பட்டு அதிக ஞாபக சக்தி பெற / நல்லமதிப்பெண்பெற
- மாமியார் / மருமகள் இராசி ஆகிட
- செய்வினையால் வீட்டில் தரித்திரம், சண்டை, நிம்மதியின்மை
- தொழில் சரியில்லாமை / கடன் தொல்லை நீங்க
- எவ்வளவு பரிகாரம் செய்தும் திருமணம் நடைபெறாமல் இருந்தல்
- உங்கள் மணத்திற்கு பிடித்தவர் உங்களை விரும்பிட
- அரசியலில் பிரகாசிக்க / ரியல் எஸ்டேட் துறையில் வெற்றி பெற
- இடு மருந்து எடுக்க

**இப்படி எந்த கஷ்டங்கள் இருந்தாலும் சித்தர்களின் அருளினால் முழுமையான தீர்வுபெற சித்தரை சந்தியுங்கள்.**

## சித்தரின் மகா யந்திரங்கள்

| | |
|---|---|
| ஐஸ்வர்ய யந்திரம் | - 2,700/- |
| செய்வினை பில்லி சூன்ய நீக்கிடயந்திரம் | -3,700/- |
| கணவன் மனைவி வஸ்ய யந்திரம் | - 3,700/- |
| காதலர் திருணம் ஆக வஸ்ய யந்திரம் | - 7,700/- |
| காரிய சித்தி யந்திரம் | - 2,700/- |
| இராஜ குபேரயந்திரம் | - 47,700/- |
| செல்வ கஜயோகயந்திரம் | - 37,700/- |
| பில்லி சூன்ய செய்வினை கட்டும் யந்திரம் | - 27,700/- |
| இராஜவஸ்ய யந்திரம் | - 17,700/- |
| சத்ருநாசி யந்திரம் | - 3,700/- |

## சித்தரின் தாந்ரீக அஞ்ஞணம்

| | |
|---|---|
| மகாலட்சுமி அஞ்ஞணம் | - 1,700/- |
| சத்ரு நாசி அஞ்ஞணம் | - 1,700/- |
| கணவன் மனைவி சேர அஞ்ஞணம் | - 2,700/- |
| சரஸ்வதி அஞ்ஞணம் | - 1,700/- |
| இராஜவஸ்ய அஞ்ஞணம் | - 5,700/- |
| நவ கிரஹ தோஷ நிவர்த் அஞ்ஞணம் | - 2,700/- |
| நீண்டபோக ஆலிங்க அஞ்ஞணம் | - 1,700/- |
| வீர்யவிருத்தி சம்போக அஞ்ஞணம் | - 1,700/- |
| மாமியார் மருமகள் வஸ்ய அஞ்ஞணம் | - 2,700/- |
| வியாபார விருத்தி அஞ்ஞணம் | - 1,700/- |
| வழக்கு வெற்றி பெற அஞ்ஞணம் | - 5,700/- |
| ஜன வஸ்ய அஞ்ஞணம் | - 2,700/- |

**ரூபாய். 1000/- அனுப்பி 5 கேள்விகளுக்கு தபால் / Online மூலம் பதில் பெறலாம்.**

## சித்தரின் ஒழுக்கம் கலந்த கண்டிப்பான பயிற்சிகள் (ஆண்/பெண்) நேரிடைபயிற்சி (அ) தபால் மூலம் பயிற்சி

- கர்ணா யட்சிணி வாக்கு வஸ்யம்
- லித்திகா யட்சிணி வாக்கு வஸ்யம்
- நருத்ரா யட்சிணி வாக்கு வஸ்யம்
- மஹா காளி அன்னை வாக்கு வஸ்யம்
- மோஹினி வஸ்யம்
- ஜின் வஸ்யம்
- எகிப்து கடவுள் வஸ்யம்
- எகிப்து தேவதை வஸ்யம்
- மலையாள மாந்ரீகம்
- ருத்ரா மாந்ரீகம்
- பகவதி மாந்ரீகம்
- முஸ்லீம் மாந்ரீகம்
- அரபிக் மாந்ரீகம்
- ஆஞ்நேயர் வாக்கு வஸ்யம்
- முனீஸ்வரர் வாக்கு வஸ்யம்
- யந்திர விபூதி வஸ்யம்
- ரைடர் ட்ராட் பயிற்சி
- காஸ்மிக் ரெய்கி (up to master level)
- வஸ்ய வாஸ்து
- வளமான எண் கணிதம்
- நெற்றிகண் திறந்திட – ஆஸ்ட்ரோ ட்ராவல்
- சித்தர்கள் தரிசனம் – ஜோதி தீட்சை

கடன் தொல்லை தீர
செல்வம் நிலையாக
இருக்க வீட்டில்,
தொழில் ஸ்தாபணத்தில்,
அலுவலகத்தில்
வைக்க ஸ்ரீஸ்வர்ணஆகர்ஷன
மூலிகை வேர்
ரூ 1700/– மட்டும் அனுப்பி
ஐஸ்வர்யத்தை பெற்றிடுங்கள்

**இங்கு தேவையற்ற ஆசைவார்த்தகைள் / இலவச பொருட்கள் கிடையாது.**
**ஒழுக்கத்திற்கும், கண்டிப்புக்கும் உட்பட்டவர்களுக்கு மட்டும் பயிற்சி. பலர் வாழ்க்கையில் ஒளி விளக்கு ஏற்றியவர்.**

வெளிநாட்டினர் தபால் மூலம் கலைகள் கற்கலாம் / ஆலோசனை பெறலாம். செல் : 0091-93677-10545
**கலைகள், யந்திரம், அஞ்ஞனம் விபரங்கள் பெற ரூ. 320/- M.O** செய்யவும்.

**ஒவ்வொரு வாரமும் சென்னை, பெங்களூர், சேலம், மலேசியா, சிங்கப்பூரில் சந்திக்கலாம்.**

**சித்தரை தரிசிக்க முன்பதிவு மிகவும் அவசியம்**

**E Mail : gurusaranam5@gmail.com**

# சனிப்பெயர்ச்சி

## சோதனைகளைக் கொடுத்து சாதிக்க வைத்திடும் சூட்சும இரகசியங்கள்




ஸ்ரீ ஸ்கந்த உபாசகர்

**P.D. ஜெகதீஸ்வரன்**

துணை ஆசிரியர்,

திருவருள் சக்தி

செல்: 96596 90395


வேதத்தின் அங்கமாகக் கருதப்படும் ஜோதிடம் ஒரு வழிகாட்டும் கலையாகும். இதனுடன் ஆன்மிகம் சேரும்போது, அது மேலும் பொலிவு பெற்று, பலவிதங்களிலும் மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளது. ஆதலால்தான் ஆய கலைகள் அறுபத்து நான்கில், ஜோதிடமும் சேர்க்கப்பட்டுள்ளது. கிரகங்களின் பெயர்ச்சி பலன்களை அதிக முக்கியத்துவம் கொடுத்து பலன் பார்ப்பதில் மக்கள் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். அதிலும் குறிப்பாக சனிப்பெயர்ச்சி என்றவுடன் ஒரு பயம் வரவே செய்கிறது. சனி பகவானைப் பற்றியும் அதன் பரிகாரங்கள் பற்றியும் சனிப் பெயர்ச்சியால் சரியான நலனை அடையும் சூட்சும இரகசியங்கள் பற்றியும் இங்கு பார்ப்போம்.

நவக்கிரகங்களில் பிரதானமாக இருப்பது சனி கிரகமாகும். இவர் ஆயுள், ஆரோக்கியம், ஐஸ்வர்யத்தை அளிப்பவராக இருக்கிறார். ஜோதிட சாஸ்திரத்தில் ஈஸ்வரன் பட்டம் பெற்ற ஒரே கிரகம் சனீஸ்வரர்தான். நீண்ட ஆயுள், உயர்ந்த உதவி, நிறைந்த சொத்து, ஆள்பலம், இலட்சுமி கடாட்சம் ஆகிய அனைத்து செல்வங்களையும் தரக்கூடியவர். உழைப்புக்கு ஆதாரமாக விளங்கக்கூடிய சனீஸ்வரர். கடும் உழைப்பாளிகளுக்கு என்றும் துணையாக இருப்பார். சாதாரண தொழிலாளியைக்கூட மிகப் பெரிய தொழிலதிபராக ஆக்கும் சக்தி சனீஸ்வரருக்கு உண்டு. அதேபோல் சர்வ அதிகாரம் படைத்தவராக இருந்தாலும், கர்ம வினைப்படி அவர்களை சொல்லொணாத துன்பத்திற்கு ஆளாக்கக்கூடியவரும் இவர்தான். நம் ஜாதகத்தில் சனிபகவான் நல்ல பலம் பொருந்தி இருந்தால் ஆயுள், ஆரோக்கியம், அஷ்ட ஐஸ்வர்யம், பட்டம், பதவி தானாக தேடி வரும். தன்னுடைய திசா புக்தி காலங்களில் பல ஏற்றங்களை வழங்குவதில் சனிக்கு நிகர் சனிதான். அதேபோல் கோச்சார பலன்கள் தருவதிலும் வலிமை மிக்கவர். 7இல் சனி, 4இல் சனி, 8இல் சனி என்று ஒவ்வொருவருக்கும் 30 ஆண்டுகளுக்குள் இந்த மூன்று விதமான கோச்சார பலன்களைத் தருகிறார்.

சனி பகவான் திருக்கணிதப்படி 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8:54 மணிக்கு துலாம் இராசியில் இருந்து விருச்சிக இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். வாக்கியப்படி 16—12—2014 அன்று பெயர்ச்சி ஆகிறார்( திருநள்ளாறு விஷேசம்).

சனி இராசி மண்டலத்தை சுற்றிவர 30 ஆண்டுகள் ஆகும் இந்த 30 ஆண்டுகளில் சனி 3,6,11, இடங்களில் மட்டும் நன்மை செய்வார், அப்படியானால் 30 ஆண்டுகளில் 7½ ஆண்டு காலம் மட்டும்தான் ஒருவனுக்கு கோட்சார ரீதியாக நலம் நல்குவார். 2½ ஆண்டுகள் சுகசனி,அர்தாஷ்ட, அஷ்டம,7½ ஆண்டு சனி என கெடு பலன்களை அளிப்பார் என ஜோதிடம் கூறுகிறது. சனிக்கிரகம் பூமியில் இருந்து 97 கோடியே 90 லட்சம் மைல்கள் தொலைவில் உள்ளது. இதனைச் சுற்றி 3 வளையங்கள் உள்ளன. இதன் நடுவில் இருள் படலம் உள்ளது. 75000 மைல் விட்டமும் 700 பங்கு கன பரிமானம் உள்ளது. பூமியைப் போல் 100 மடங்கு எடையுள்ளது. இது இராசி மண்டலத்தைச் சுற்றிவர 30 வருடம் ஆகிறது.

நவகோள்களிலும் ஈஸ்வரப்பட்டம் சனியைத் தவிர வேறு எந்தக் கிரகத்திற்கும் கிடையாது.. ஒருவரது ஜென்மஇராசிக்கு 1, 2, 12 ஆகிய இராசி வீடுகளில் தலா 2½ வருட வீதம் சஞ்சரிக்கும் காலம் 7½ சனி காலமாகும். ஒருவரின் இராசிக்கு 4ஆம் இடத்தில் சஞ்சரிக்கும்போது அர்த்தாஸ்டமச்சனி

என சொல்லப்படும். 8ஆம் இடத்தில் சஞ்சரிக்கும்போது அட்டமத்துச் சனி எனக் கூறப்படும்.ஒருவரது இராசிக்கு 3, 6, 11ஆம் வீடுகளில் சனிக்கிரக சஞ்சாரம் இடம்பெறும் காலம் நற்பலன்களைக் கூட்டி வழங்குவார். சனியின் சம்மந்தம் இல்லாமல் எந்த ஒரு ஜீவனும் உலகத்தில் எதையுமே செய்யமுடியாது ஏன், உலகமே கூட இயங்காது. சனியை நாம் கர்மக்காரகன் என்று சொல்கிறோம். கர்மம் என்றால் வினை என்று அர்த்தம்

ஓர் இராசிக்கு முன்னும், இராசிக்குள்ளும், அடுத்துள்ள இராசியிலும் சனி சஞ்சரிக்கும் காலத்தையே ஏழரைச் சனி என்கிறோம். ஒவ்வொரு மனிதனுக்கும் மூன்று அல்லது 4 முறை ஏழரைச் சனி வரும். பிறந்த உடனேயே 15, 20 வருடங்களுக்குள் வரும் சனியை மங்கு சனி என்பார்கள். முதல் சுற்றுச் சனி. அதாவது முதல் தடவையாக ஏழரைச் சனி வருவதை மங்கு சனி என்று சொல்வார்கள். 2வது முறையாக வருவதை பொங்கு சனி என்று சொல்வார்கள். இது 2வது சுற்று.

அதற்கடுத்து 3வது முறையாக வருவதை மரணச் சனி என்று சொல்வார்கள். மங்கு, பொங்கு, மரணம் என்று சொல்வார்கள். ஆனால் அது அப்படி கிடையாது. பிறக்கும் போது சனி பகவான் யோகாதிபதியாக இருந்தார் என்றால், சிலர் 4வது சனியையும் கடந்திருப்பவர்களாக இருக்கிறார்கள்.

அதனால் 3வது சனியை மரணச் சனி என்று சொல்ல முடியாது. 3வது சில இடையூறுகளைக் கொடுக்கும். சின்னச் சின்ன பொருள் இழப்புகள், சிறிய அளவில் மரண பயம் போன்றெல்லாம் இந்த போக்கு சனி கொடுக்கும். மற்றபடி, விரயச் சனி என்பது ஏழரைச் சனியின் 3 பாகங்கள் ஒன்று. முதல் இரண்டரை விரயச் சனி.

2வது இரண்டரை ஜென்மச் சனி., 3வது இரண்டரை பாதச் சனி. இதெல்லாம் இல்லாமல் கண்டகச் சனி, அர்த்தாஷ்டமச் சனி, அட்டமத்துச் சனி என்றெல்லாம் நிறைய உண்டு. பறந்துக் கொண்டிருப்பவர்களை ஒரு தட்டு தட்டி அவர்களின் ஈகோவை குறைப்பதுதான் இவருடைய வேலையே. இதுபோல சனி பகவான் மாறி மாறி தனது வேலையைச் செய்துக் கொண்டிருப்பார்.

சனீஸ்வரன் கிரகங்களிலே பாபக்கிரகமாகக் கருதப்படுகின்றது. அக்கிரகத்திலிருந்து வீசப்படுகின்ற தீய கதிர்வீச்சானது, உடலிலே பல தீய தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. இதனாலேயே பயபக்தியுடன் சனிக்கிரகத்தை






சனீஸ்வரன் என்று அழைக்கின்றோம். இக்கதிர்கள் மூளைநரம்புகளைப் பாதிக்கின்றது. எண்ணங்களை மாற்றிவிடுகின்றது. இதனாலேயே சனிக்கிழமைகளில் (எள்எண்ணெய்) நல்லெண்ணெய் தேய்த்து சூரிய உதயத்தில் அரைமணி நேரம் நின்று குளிக்க வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. ஜாதகத்தில் சந்திரஇராசிக்கு 1,2,4,8,12 ஆகிய இடங்களில் சனிபகவான் சஞ்சாரம் செய்கின்ற போது அந்தச் சனி பகவானுடைய கதிர்வீச்சு அதிகரிக்கும். இதனால், எள்எண்ணெயில் ஊறிய உடம்பு இக்கதிர்களைத்தாக்கவிடாது.

சனி மெதுவாக நகருபவராதலால் ,இவர் கொடுக்கும் பலன்களைத் தாமதமாகவே கொடுப்பார்.இவர் கொடுக்கும் பலன்கள் வெகுநாட்கள் நீடித்திருக்கும்,சூரியனிடமிருந்து, வெகுதூரத்திற் பயணிப்பதால்,இவர் மீது விழும் ஒளி குறைவாகவேயிருப்பதால் ,ஒளியின்றிக் கருப்பாகவே இருப்பார்,ஆகைால் இவர் நிறம் கறுப்பு.

**சனி பகவான் பயோடேட்டா.**

- நிறம் — கறுப்பு,
- குணம் — குரூரன்,
- மலர் — கருங்குவளை,
- இரத்தினம் — நீலக்கல்,

- சமித்து — வன்னி,
- தேசம் — சௌராஷ்டிரம்,
- தேவதை — யமன்,
- பிரத்யதிதேவதை — பிரஜாபதி,
- திக்கு — மேற்கு,
- ஆசனவடிவம் — வில்வடிவம்,
- வாகனம் — காகம்,
- தானியம் — எள்,
- உலோகம் — இரும்பு,
- பிணி — வாதம்,
- சுவை — கைப்பு,
- நட்பு — புதன், சுக்கிரன், இராகு, கேது,
- சமம் — குரு
- காரகம் — ஆயுள்,இரவில்தந்தை,
- ஆட்சி — மகரம்,கும்பம்.
- பகை — சூரியன், சந்திரன், செவ்வாய்
- மூல திரிகோணம்— கும்பம்,
- உச்சம் — துலாம்,
- நீசம் — மேஷம்,
- உறுப்பு — தொடை,
- தசா ஆண்டுகள் — 19 ,
- பாலினம் — திருநங்கை,
- உருவம் — குள்ளம்,
- நட்சத்திரங்கள் — பூசம், அனுஷம், உத்திரட்டாதி,
- உபகிரகம் — குளிகன்,
- க்ஷேத்திரம் — திருநள்ளாறு,
- இராசியில் சஞ்சரிக்கும் காலம் — இரண்டரையாண்டுகள்.

## ஸ்ரீசனி பகவான் வழிபாடுகள்

சனியின் ஸ்தலம் திருநள்ளாறு. சமீபத்தில் வெளிவந்த செய்தி இது. எந்த ஒரு செயற்கைகோளும் பூமியில் இந்தியாவின்— தமிழ்நாடு அருகில் உள்ள புதுச்சேரி — திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பநேஷ்வரர் கோவிலுக்கு மேல் நேர் உள்ள வான்பகுதியை கடக்கும் 3 வினாடிகள் மட்டும் ஸ்தம்பித்துவிடுகின்றன. அப்படி நிகழ்வதற்கு என்ன காரணம்.?

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வினாடியும் கண்ணுக்கு தெரியாத கருநீலக்கதிர்கள் அந்த கோவிலின் மீது விழுந்துக்கொண்டே இருக்கிறது. இரண்டரை வருடங்களுக்கு ஒரு முறை நடக்கும் சனி பெயர்ச்சியின் பொது இந்த கருநீலகதிர்களின் அடர்த்தி மிகவும் அதிகமாக இருக்கும். விண்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் செயற்கைகோள்கள் இந்த கருநீலக்கதிர்கள் பாயும் பகுதிக்குள் நுழையும்போது ஸ்தம்பித்து விடுகின்றன. அதே நேரத்தில் செயற்கைகோள்களுக்கு



எந்த விதபாதிப்பும் ஏற்படுவதில்லை. இதில் குறிபிடத்தக்க அம்சம் என்னவென்றால் இந்த கோவில்தான் இந்துக்களால் ‘சனிபகவான்’ தலம் என்று போற்றப்படுகிறது. இந்த சம்பவத்திற்கு பிறகு நாசாவிலிருந்து பல முறை திருநள்ளாறு வந்து ஆராய்ச்சி செய்து விட்டனர். மனிதனை மீறிய சக்தி உண்டு என்பதை உணர்ந்தனர்.அவர்களும் சனிபகவானை கையெடுத்து கும்பிட்டு உணர்ந்தனர். இன்று வரை விண்ணில் செயற்கைகோள்கள் திருநள்ளாறு பகுதியை கடக்கும் பொது ஸ்தம்பித்துக் கொண்டே இருக்கிறது.”

### சனிக்குரிய சில பரிகாரங்களைப் பார்ப்போம்.

1. உடல் ஊனமுற்றவர்களுக்கு அல்லது அதை சார்ந்த பள்ளிகளுக்கு உதவி செய்தல்.
2. சனிக்கிழமை விரதமிருந்து பெருமாளை வழிபட்டு காக்கைக்கு உணவு படைத்தல்.
3. அருகில் உள்ள சிவ ஆலயங்களில் சிவ வழிபாடு செய்தல்.
4. சங்கடஹர சதுர்த்தி அன்று மோதகம் வைத்து அருகம்புல் சாற்றி வழிபடுதல்.

5. ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு வடை மாலை அல்லது வெற்றிலை மலை சாற்றி வழிபடுதல்

6. இந்தியாவில் திருநள்ளாறில் தனி ஆலயமாக சனீஸ்வரன் மிகப் பிரசித்தம் பெற்று விளங்குகின்றார். இலங்கையில் திருக்கோணமலையில் மரத்தடியில் சனீஸ்வரனுக்கு தனி ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

7. சங்கடங்கள் தீர்க்கும் சனிபகவானை சனிக்கிழமைகளில் விசேஷமாக புரட்டாசி மாதம் வரும் சனிக்கிழமைகளில் விரதமிருந்து எள்ளு எரித்து சனிபகவானின் கெடுபலனிலிருந்து விடுபடுவதால் நற்பலனைப் பெறலாம்.

8. சனீஸ்வரரின் அருளை வேண்டி வழிபடுபவர்கள் அவசியம் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவையும் வேண்டுதல் செய்வது நல்லது.

9. சாம்பல் நிற ஆடைகளைப் பயன்படுத்தினால் சனி பாதிப்புகள் நீங்கி சனியின் அருள் பெறலாம்.

10. உணவு வகைகளில் இரும்பு சத்துள்ள பழ வகைகள் சாப்பிடலாம். பேரிச்சம் பழம், பலாப்பழம், நாவல் பழம், காய்கறி வகைகளில் சுண்டைக்காய், பீட்ரூட், வெள்ளை பூசணி, கிழங்கு வகைகளில் கருணைக் கிழங்கு, அனைத்து கீரை வகைகள் குறிப்பாக முருங்கைக் கீரை சாப்பிடலாம்.

11. திருக்கொள்ளிக்காடு— திருவாரூர் மாவட்டத்தில் திருத்துறைப் பூண்டி வட்டத்தில், திருவாரூர் — திருத்துறைப்பூண்டி நெடுஞ்சாலையில் உள்ள திருநெல்லிக்காவிலிருந்து தெங்கூர், கீராலத்தூர் வழியாக இத்தலத்தை அடையலாம். சனி பகவானின் தோஷம் நீக்கும் தலங்கள் வரிசையில் இது தலையாயது.

12. சனீஸ்வரனுக்குரிய தானியமாகிய எள்ளைச் சிறிதளவில் எடுத்து, சனீஸ்வரனுக்குரிய நிறமாகிய கறுப்புத்துணியில் ஒரு பொட்டலமாகக் கட்டி, ஒரு மண்சட்டியில் நல்லெண்ணை விட்டு அதற்குள் இந்த பொட்டலத்தை வைத்து எரித்தல் வேண்டும். எள் உணவை சனீஸ்வரன் வாகனமாகிய காகத்திற்குக் கொடுக்க வேண்டும்.

13. ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் விரதம் இருந்து காகத்திற்கும், ஏழைகளுக்கும் அன்னதானம் செய்யலாம். அல்லது, ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒரு வேலை உணவோடு விரதம் இருந்து சனிபகவானை வழிபடலாம்.

14. சிறிது எள்ளை பொட்டலமாக கட்டி தினசரி இரவு படுக்கும்போது, அதை


# தனாகர்ஷண யந்திரம்



செலவுகளைக் குறைத்து, வருமானத்தைப் பெருக்கி, செல்வச்செழிப்பை உண்டாக்க, கடன் தொல்லைகளிலிருந்து விடுபட, வியாபாரத்தில் அதிக இலாபம் பெற இந்த யந்திரம் உதவும். செல்வத்துக்கு அதிதேவதையான மகாலட்சுமியின் பீஜ மந்திரள்கள் பொறிக்கப்பட்டு, பூஜைகள் நடத்தப்பட்டு, ஆவாகனம் செய்யப்பட்டது.

| 108 உரு ஜெபித்தது 5 வருட யந்திரம் ரூ.1800/- | 1008 உரு ஜெபித்தது 15 வருட யந்திரம் ரூ.3600/- | 100008 உரு ஜெபித்தது 5 வருட யந்திரம் ரூ.7000/- |
|---|---|---|



## பண்டிட் காழியூர் நாராயணன்

கௌரவ ஆசிரியர்: திருவருள் சக்தி, சிறப்பு ஆசிரியர்: குருவருள் ஜோதிடம்

ப.எண்: 37A, பு.எண்: 52, மோதிலால் தெரு, தி.நகர், சென்னை- 17

செல்: 98405 76302. Email:astrokaliyur@yahoo.com



தலைக்கு அடியில் வைத்து படுத்து, காலையில் அதனை அன்னத்தில் கலந்து காகத்திற்கு அன்னமிடலாம். 9 நாள் அல்லது 48 நாள் அல்லது 108 நாள் என்று இந்தப் பரிகார முறையை பின்பற்றலாம்.

15. ஒரு முழு தேங்காயை சனி பகவான் சன்னதியில் சனிக்கிழமைகளில் இரண்டு பகுதியாக்கி அதில் நல்லெண்ணெய் விட்டு எள் முடிச்சிட்டு தீபமாக ஏற்றலாம்.

16. சனிபகவானுக்கு நல்லெண்ணெய் அபிஷேகம் செய்து, கரும்பு அல்லது எள் சாதம், வடை மாலை செய்து வழிபட்டு, அனைத்தையும் ஏழைகளுக்கு விநியோகம் செய்யலாம்.

17. சனிபகவானுக்கு நவக்கிரக சாந்தி ஓமங்கள் செய்து வழிபடலாம். எள்ளை சுத்தம் செய்து வறுத்து வெல்லம், ஏலக்காய் பொடியுடன் சேர்த்து இடித்து திலசூரணம் செய்து வெங்கடேச பெருமாளுக்கும், சனிபகவானுக்கும் படைத்து விநியோகம் செய்யலாம்.

18. அவரவர் பிறந்த ஜென்ம நட்சத்திர தினத்தன்றோ அல்லது சனிபாகவனின் பிறந்த நட்சத்திரமான ரோகிணி நட்சத்திரம் அன்றோ ஒவ்வொரு மாதமும் அல்லது ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் அர்ச்சனைகள் செய்வது நன்மையான பலன்களைத் தரும்.

19. சனிக்கிழமை தோறும் நல்லெண்ணெய் தேய்த்து நீராடி, சனி பகவானுக்கு ஒரு சிறு துணியில் எள் முடித்து, அதை விளக்கில் வைத்து நல்லெண்ணெய் விட்டு விளக்கேற்றி கருங்குவளை மலரால் சனி பகவானை அர்சிப்பதோடு, எள் சாதம் நெய்வேத்தியம் செய்வதும் நல்லது.

20. சனி கவசம் அல்லது காயத்திரி ஜெபம் செய்யலாம். நெய்வேத்தியம் செய்யும் எள் சாதத்தில் சிறிது காக்கைக்கு வைத்து விட்டு, பின் அனைவருக்கும் அளித்து சாப்பிடலாம்.

21. குச்சானூர் சனி பகவானை தரிசனம் செய்தால், ஏழரை ஆண்டு சனி பாதிப்பு ஏழரை நொடியில் தீர்ந்துவிடும் என்பார்கள். அந்த அளவுக்கு விஷேஷமான கோயில் இது. இந்தக் கோயிலின் அபூர்வமான அம்சம் சனி பகவான் சுயம்புவாய்க் காட்சியளிப்பது. இதுபோல் வேறெங்கும் காண்பதரிது.

22. திருவாரூர், திருநெல்வேலி, திருக்கொள்ளிக்காடு, திருவானைக்காவல், திருச்சி உறையூர் வெக்காளியம்மன், திருவாதவூர், திருப்பரங்குன்றம், திருச்செங்கோடு, திருவையாறு, ஓமாம்புலியூர், ஸ்ரீவைகுண்டம், சோழவந்தான், ஆலங்குடி, கொடுமுடி ஆகிய ஸ்தலங்களில் சனீஸ்வரன் தனியாக வீற்றிருப்பது சிறப்பு.

23. திருக்கோயிலூரில், பாடல் பெற்ற ஸ்தலமாகிய அறையணிநாதர் கோயிலின் பிரகாரத்தில் சனிபகவான் காகத்தின் மீது ஒரு காலை வைத்து ஊன்றிய கோலத்தில் காணப்படுகிறார். இதுபோன்ற கோலத்தில் வேறு எங்கும் சனிபகவான் இருப்பதாகத் தெரியவில்லை.

## சனீஸ்வர தீபம்:

முக்கூட்டு எண்ணெய் நல்லெண்ணை, நெய், இலுப்பை எண்ணெய்)யினால் ஓர் இரும்புச் சட்டியில் வெள்ளை, கறுப்பு, சிவப்பு வண்ண நூல்களைத் திரியாக இட்டு மேற்கு திக்கில் தீபம் ஏற்றி வர வேண்டும். இதற்கு சனீஸ்வர தீபம் என்று சித்தர்கள் கூறுவர். இந்தத் தீபத்தைச் சனி பகவான் சன்னதியிலும் ஏற்றலாம். இந்த தீபத்தை ஏற்றி நீலோற்பல மலர் — நீலசங்கு புஷ்பம், வன்னி இலை, வில்வ இலைகளால் தீபத்தைப் பூஜித்து சனி பகவானைச் சாந்தி பரிகாரம் செய்யலாம். இந்த தீபப் பரிகாரம் தாங்க முடியாத சனி பகவானின் இன்னலிருந்து விடுவித்து சாந்தியையும் மகிழ்ச்சியையும் அளிக்கும்.

**ஞானஸ்கந்தர் ஜீவ நாடி: 'ஜீவன்' என்றால் உயிர். அப்படி உயிரோட்டமாக இருக்கக்கூடிய ஒரு விஷயம். ஓலையிலே, வருகின்ற அன்பர்களின் தன்மைக்கு ஏற்ப சித்தர் பெருமக்கள் உயிரோட்டமாக வந்து அந்தத் தருணத்தில் ஓலை வாசிப்பவர் கண்களுக்கு எழுத்து வடிவமாகவும், சில சமயம் உள் உணர்வாகவும் அருள்வாக்கை கூறுகிறார்கள். இது தொடர்பான ஓலைக்கு 'ஜீவ நாடி' என்று பெயர்.குறிப்பாக இந்த சுவடியிலே சித்தர்கள் கூறுகின்ற அருள்வாக்கின் தன்மைக்கு,சித்தர்களே இட்ட பெயர்தான் 'ஜீவ நாடி' என்பது. என்னிடம் இருக்கின்ற ஸ்ரீ ஞானஸ்கந்தர் ஜீவ நாடியில் எந்த இராசியினராக இருந்தாலும் சனியின் பிரீதியைப் பெற கும்பகோணம் நாச்சியார் கோவில் அருகில் உள்ள திருநரையூர் மங்கள சனீஸ்வரனை தரினம் செய்வது மிக நல்லது என குறிப்பிடப்பட்டுள்ளது. ஜீவ நாடியில் வாக்கு வழங்கியது அகத்தியரும் அவரது குரு முருகப்பெருமானும் என்பதால் இந்த ஆலய தரிசனம் ஸர்வ பாவ விமோசனம் ஆகும் என்பதை அனுபவத்தில் 100% உணர்ந்துக் கொள்ளலாம்.** ■



உ
ஓம்
எல்லாம் வல்ல இறைவனடி போற்றி, அன்னை ஆதிபராசக்தி திருவடிகள் போற்றி
ஆதிமுதல் 18 சித்தர்கள் திருவடிகள் போற்றி, குருநாதர் சுப்பிரமணியம் சுவாமிகள் திருவடிகள் போற்றி



# ஸ்ரீ சர்வேஸ்வர சக்தி மையம் வழங்கும்

## மகா மாந்திரீக, மந்திர,எந்திர, தந்திர, தாந்திரீக, ஆன்மீக சூட்சம ரகசிய பிரயோக பயிற்சி

தொட்டதெல்லாம் துலங்கும் ஸ்ரீ சர்வேஸ்வர சக்தி மையம் வழங்கும் "தொழில்முறை மாந்திரீக கல்வியின் இளநிலை மாந்திரீக பயிற்சி வகுப்பு." அடுத்தடுத்து தொடர்ந்து பயிற்சியில் கலந்து கொள்ளாதவர்களின் வேண்டுகோளுக்காக மீண்டும் ஒரு முறை இந்த முறையான மாந்திரீக பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது. மாந்திரீகத்தை தொழிலாக செய்ய நினைப்பவர்களும், மாந்திரீகத்தில் நல்ல ஈடுபாடு உள்ளவர்களும், ஜோதிடர்களும், பூசாரிகளும், குறிசொல்பவர்களும், மாந்திரீகத்தை மேலும் மேலும் கற்று முன்னேற துடிப்பவர்களும் முன் அனுபவம் இல்லாத இயல்பானவர்களும் இப்பயிற்சியில் கலந்து மிக நல்ல பலனை அடையலாம். ஒன்றுமே தெரியாதவர்களுக்கும் முறையான மாந்திரீக வித்தையை கற்றுக்கொடுத்து மாந்திரீக சக்கரவர்த்தி ஆக்கியுள்ளார் மாந்திரீக இரத்தின சிந்தாமணி சித்தர் அடியார் சுவாமிகள். எளிமையை எளிமையால் வெல்லக்கூடிய அஷ்டகர்ம பிரயோகம் முதல் பலத்தை பலத்தால் அடிக்கக்கூடிய அனுபவ அஷ்டகர்ம பிரயோக முறை வரை கற்றுத்தரப்பட இருக்கிறது. ஆகையால் இம்முறையான மாந்திரீக பயிற்சியை தாங்களும் கற்றுப் பயனடையலாம். இப்பயிற்சியில் தொடர்ந்து கலந்து மாந்திரீக வித்தையைக் கற்றுக்கொண்டால் இதன் மூலம் இக்கலையில் மிகப்பெரிய உயர்வான நிலையை அடையலாம். மாந்திரீக வித்தையில் கைதேர்ந்தவர்களாக மாறலாம். முறையான மாந்திரீக வித்தையைக் கற்று, மக்களின் குறைகளை நீக்கி அனைவரும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் எங்களைப்போல் குறைந்த சேவைக் கட்டணத்தில் முறையான மாந்திரீக வித்தையை கற்றுத்தருபவர்கள் யாரும் இல்லை. இம்மையத்தின் நோக்கமே இக்கலை அனைத்து மக்களின் துயர் நீக்கி நலமோடு வாழவேண்டும் என்பதே. வாய்ப்புள்ளவர்கள் பயன்படுத்திக்கொள்ளுங்கள். ஆண்/பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம். முன் அனுபவம் தேவையில்லை. பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம்.

மாந்திரீகத்தின் தலையாய விதியான மந்திர, எந்திரங்கள் உடனே சித்தியாக செய்யவேண்டிய **1.** இயமம், நியமங்கள் **2.** ரிஷிசந்தஷ் **3.** அங்க நியாசம் **4.** அஷ்டதிக்கு தேவர்கள் பூஜை **5.** உடல்கட்டு **6.** பஞ்சபூத பூஜை **7.** கணபதி பிராண பிரதிஷ்டை **8.** கலச பிராண பிரதிஷ்டை **9.** எந்திர சாப நிவர்த்தி **10.** எந்திரத்திற்கு உயிர்கொடுத்தல் **11.** எந்திர தசா மகா மந்திர பூஜை **12.** எந்திர பீட சக்தி தேவதா பூஜை **13.** குலதெய்வ சித்திமுறை **14.** குருவருள் சித்தி முறை. **15.** உடலில் உள்ள 51 அட்சர தேவதைகள் உயிர்பெற சுகப்பிராணாயாமம் **16.** இரண்டே நாள் சித்தியில் பேய்-பிசாசு பில்லி சூனியம் என அனைத்தையும் வந்த வழித் தெரியாமல் ஓட்டி செய்வினையால் பாதிக்கப்பட்டவரை மிகமிக எளிய செலவில் குணமாக்கக்கூடிய எந்திர தாயத்து முறை **17.** தேவதா கட்டு விபூதி பிரயோக முறை **18.** எண்ணிய வேலை தேடிவர **19.** வேலை கிடைக்காதவர்களுக்கு நல்ல வேலை கிடைக்க **20.** கடைகளில் கூட்டம் குவிய **21.** தன ஆகர்ஷனம் மற்றும் சர்வ ஜன ஆகர்ஷன முறை **22.** தூப பிரயோக முறை **23.** வசிய எண்ணெய் பிரயோக முறை **24.** துரதிஷ்டங்கள் விலகி தொழில் நஷ்டத்தை விலக்கி கடன் தொல்லைகளை விலக்கி குடிசையில் உள்ளவரையும் கோபுரத்திற்கு கொண்டு வரக்கூடிய ரகசிய எந்திர மந்திர லட்சுமி பூஜை முறை **25.** கணவன் மனைவி சண்டைகள் விலகி ஒற்றுமையாய் இருக்க அதிசக்தி வாய்ந்த ஆனால் எளிய முறையில் எவரும் செய்ய வல்ல கணவன்-மனைவிக்கான ரகசிய வசிய ஈடுமருந்து ரகசியம் **26.** ஈடு மருந்து (வசிய மருந்து) பாதிப்பு வயிற்றில் உண்டா ? **27.** ஈடு மருந்து பாதிப்பில் இருந்து விடுபடுவது எப்படி ? **28.** மூலிகை சாப நிவர்த்தி, மூலிகைக்கு காப்புகட்டி உயிர்கொடுத்தல் நேரடி பயிற்சி **29.** எளிமையான மூலிகைகளைக் கொண்டு மிகப்பெரிய அதிரகசிய சூட்சம பிரயோக முறை, மஞ்சள் கரிசலாங்கன்னி மகிமையால் மாந்திரீகத்தை வெல்லும் அதிரகசிய சூட்சம பிரயோகம் மற்றும் **30.** சத்ருவை வெல்லும் பிரயோகம் மற்றும் **31.** குலதெய்வ வசிய முறை **32.** மார்ஜால மோகினி என்னும் குப்பைமேனி மூலிகையால் எதிரியை வசப்படுத்தும் முறை மற்றும் **33.** எதிரி பிரயோகம் மற்றும் **34.** சத்ரு உச்சாடனம் **35.** சர்வகாரிய சித்திக்கான மகா சக்திவாய்ந்த வெள்ளருக்கன் மை முறை **36.** நன்மைக்காக செய்வினை செய்வது எப்படி **37.** செய்வினையை சரிசெய்வது எப்படி **38.** செய்வினை வைத்துள்ளார்களா ? **39.** செய்வினை வைத்திருப்பதை நீங்களே தெரிந்து கொள்ள முறையான வழிமுறைகள் **40.** தொல்லை கொடுக்கும் எதிரியை முடக்க முட்டை மந்திரித்து வைத்தல் **41.** எதிரியின் செயல்களை முடக்க எலுமிச்சம் பழம் மந்திரித்தல் **42.** தகாத உறவுகளை பிரிக்க **43.** இருந்த இடத்தில் இருந்தே எதிரியின் செயல், புத்தி பிரயோகம் இவையனைத்தையும் முடக்க மகா அதிரகசிய அட்சர பிரயோக முறை **44.** அதிகமாக தொல்லைகொடுக்கும் எதிரிகளை நன்மைக்காக இருந்த இடமே தெரியாமல் ஆக்க சத்ரு நாச சண்டாலக்கரு எட்டிக்குச்சி முலைசீவி பிரயோகம் செய்யும் முறை **45.** எப்பேற்பட்ட பேய் பிசாசு பில்லி-சூனியம் விலகாத முனியையும் விரட்டி குணமாக்கும் வழிமுறை **46.** எதிரிகளின் பொறாமை, கண் திருஷ்டி, எதிரியின் மாந்திரீக செயல்கள் இவைகள் நம் வீட்டிற்கு வராமல் தடுக்கும் வழிமுறைகள் **47.** தங்களது பூஜை அறையில் பூஜை செய்வது எப்படி ? **48.** வீட்டில் பூஜை அறை இல்லாதவர்கள் பூஜை செய்வது எப்படி ? **49.** தங்களை நாடி வரும் மக்களின் நடைமுறை வாழ்விலுள்ள பிரச்சனைகள் தீர பலதாயத்து பிரயோக முறை மற்றும் **50.** இன்னும் எண்ணிலடங்கா பல அரிய மாந்திரீக பிரயோக ரகசியங்களை நேரில் வருபவர்களுக்கு வெளிப்படையாக கற்றுத்தருகிறார் மாந்திரீக ஆசான் சித்தர் அடியார் சுவாமிகள்.

**இப்பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு இலவசமாக அளிக்கப்படும் பொருட்கள் :-**

1. ரூபாய். **3000/-** மதிப்புள்ள தேவதா வசியமும், காரியசித்தியும் தரக் கூடிய மிக அரிய புல்லுருவிகளைக் கொண்டு சைவ ஜங்கோலத் தைலம் சேர்த்து அரைத்த அஞ்சன மை இலவசம். 2. ரூபாய். **1500/-** மதிப்புள்ள செய்யும் வேலை சிறப்படைய தொழிலில் லாபம் வர திடீர் அதிர்ஷ்டத்தை உண்டாக்கக் கூடிய தன ஆகர்ஷன மூலிகை ரட்சை இலவசம். 3. இருவேளைத் தேனீர், மதிய உணவு, பயிற்சி கையேடு உட்பட இவையனைத்தும் இலவசம்.

**பயிற்சி அளிப்பவர் மற்றும் தலைமை பொறுப்பாளர் :** 102 நகார, மகார, மந்திர பீஜாட்சரம் மற்றும் வாலை மனோன்மணி உபாசகர் மாந்திரீக ரத்தின சிந்தாமணி மாந்திரீக ஆசான். **சித்தர் அடியார் சுவாமிகள்.**

பயிற்சி நாள் : **17-08-2014 ஞாயிற்றுக்கிழமை நேரம் : காலை 9-00 மணிமுதல் மாலை 6-00 மணிவரை**

பயிற்சி நடைபெறும் இடம் : **நாகலட்சுமி கல்யாண மகால்**

(ராம் ஆட்டோ பெட்ரோல் பங்க் அருகில் உள்ள சந்து) கண்ணா பால் பண்ணை அருகில், பழனி ரோடு, திண்டுக்கல்.

## பயிற்சி சேவைக் கட்டணம் ரூ. 1000/- மட்டும்.

முன்பதிவு அவசியம், தங்களது விவரங்களை முன்பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். **250 நபர்களுக்கு மட்டுமே அனுமதி.** பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் தங்களது பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் ஒன்று அவசியம் கொண்டு வரவும்.

நிகழ்ச்சி ஏற்பாடு : **I.C.V. பாஸ்கரன்,** (ஜோதிட, மாந்திரீக, தாந்திரீக நுண்ணியல், நுட்பவியல் வல்லுநர்.)

கிரீன்பார்க் நகர் பிளாட், G.V.G. மில் எதிர்புறம், செம்மடைப்பட்டி, ஒட்டன்சத்திரம் வழி, பழக்கனூத்து போஸ்ட், திண்டுக்கல்–624 619.

## முன்பதிவிற்கு : 94898 68978, 99445 51378




உங்கள் இராசிநாதன் செவ்வாய் என்பதால் செயலில் வேகம் இருக்கும். தைரியத்தோடும், தன்னம்பிக்கையோடும் செயலாற்றி வெற்றிக்கனியை விரைவில் எட்டிப்பிடிக்க விரும்புவீர்கள். தவறு நடந்தால் தட்டிக் கேட்பதற்கும் தயங்க மாட்டீர்கள். மேஷம் என்பது இராசி மண்டலத்தில் முதல் இராசி ஆகும். இது காண்பதற்கு ஆடு போல தோற்றமளிப்பதால் ஆடு எனும்பொருள் தரும் "மேஷம்" எனும் பெயர் வந்தது.

விடா முயற்சியோடு படாதபாடு பட்டேனும் எடுக்கின்ற காரியத்தை எண்ணியது எண்ணியபடி முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தால் ஏற்றமுடன் செயல்படும் உங்களுக்கு செவ்வாய் பகவான் இராசி நாதன் ஆகின்றார். சூரியன் உச்சம் பெறும் இராசி என்பதால் சுறுசுறுப்பிற்கும், சூழுகின்ற நலத்திற்கும், சுந்தரமான வாழ்விற்கும், சூழ்ந்து வரும் வெற்றிக்கும், அடி கோலுவதே உங்கள் பணியாக செயல்படுவீர்கள். அஞ்சா நெஞ்சமும் ஆர்பரிக்கும் குணமும் அதே சமயத்தில் அரவணைத்து அன்பு காட்டுவதில் அலாதி பிரியமும் உடைய உங்களுக்கு தன்னம்பிக்கை ஒன்றே உறுதுணை என்பதை கைகொள்வீர்கள். அதட்ட வேண்டிய விஷயத்தில் அதட்டியும் ஆர்பரிக்கும் விஷயத்தில் ஆர்பரித்தும் அன்புடன் காரியத்தை கச்சிதமாக முடித்துக் கொள்வீர்கள்.




சனி பகவான் திருக்கணிதப்படி 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8:54 மணிக்கு துலாம் இராசியில் இருந்து விருச்சிக ராசிக்குப் பெயர்ச்சியாகிறார். வாக்கியப்படி 16—12—2014 அன்று பெயர்ச்சி ஆகிறார்( திருநள்ளாறு விஷேசம்).


உங்கள் இராசிக்கு 10 ,11ஆம் இட அதிபதியான 8இல் சஞ்சரித்து அஷ்டம சனியாக மாறுவதால் இன்னும் இரண்டரை வருடத்திற்கு நீங்கள் நல்லதே சொன்னாலும் தவறாகவே புரிந்துக் கொள்ளப்படும். தேவையற்ற கருத்து வேறுபாடுகள் குழப்பங்கள் யாவும் காணப்படும். குடும்பத்தில் அமைதி நிலவ பொறுமையைக் கடைபிடிக்கவும். கணவன்—மனைவியிடையே சுமூகமான உறவு நிலவாது. மறைமுக எதிரிகளால் தொந்தரவு உண்டாகும். நெருங்கிய உறவினர்கள் கூட பகைமை பாராட்டுவர். தன விரயம் உண்டாகும். தொழிலில் மந்தம்,குடும்பத்தில் மாறி மாறி மருத்துவ செலவுகள்,பணக்கஷ்டம்,அலைச்சல் போன்றவையால் மன உளைச்சல். வர வேண்டிய பணம்,கொடுத்த பணம் வராமை போன்ற பலன்கள் உண்டாக இருக்கின்றன.எனவே தெய்வ வழிபாட்டுடன் நிதான போக்குடன்,கடுமையாக உழைத்தால் மட்டுமே இவற்றை சமாளிக்க முடியும்.

அன்பான பேச்சும்,சிரித்த முகமும் நம்மை என்றும் பிறரிடம் நட்பு கொள்ள வைக்கும்.நண்பர்கள்,உறவினர்களுக்காக தேவையில்லாத பிரச்சனையில் துணிந்து இறங்கினால் கோர்ட்,வழக்குகளை சந்திக்கவும் வாய்ப்பு அதிகம் இருக்கிறது. சொந்தத் தொழில் செய்பவர்கள் கடன் வாங்கி முதலீடு,தொழில் விரிவாக்கம் போன்றவை இக்காலங்களில் ஆபத்தானவை. எடுத்த காரியத்தில் தோல்வியை தரக்கூடியவர். கொஞ்சம் சுயநலவாதிகளான நீங்கள் சந்தர்ப்பத்தால் பிறர் வலையில் விழக்கூடும். பயணம் போகும் பாதை சரி இல்லை. இப்போது ஆசை—அபிலாசை போன்றவற்றிக்கு இடம் இல்லை. பொறுப்புடன் செயல்பட்டால் இந்த அஷ்டமச் சனியை வெல்லலாம். அஷ்டமத்துச்சனியின் ஆதிக்கத்தில் அடிக்கடி ஆரோக்யத்தில் அச்சுறுத்தல் ஏற்படும். எனவே, நோய்க்கான அறிகுறி தெரியும் முன்பே அதற்குரிய மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. நீங்கள் திட்டமிடாது செய்யும் காரியங்கள் வெற்றி பெற்று மகிழ்ச்சியைக் கொடுக்கும். நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்.

### சனிப்பெயர்ச்சி பார்வைப் பலன்கள்:

விருச்சிக இராசியில் இருந்துக் கொண்டு சனி பகவான் உங்கள் ஜென்ம இராசிக்கு 2ஆம் இடமான ரிஷப இராசியையும், 5ஆம் இடமான சிம்ம இராசியையும், 10ஆம் இடமான மகர இராசியையும் தனது 3,7,10ஆம் பார்வையாகப் பார்த்து பல மாற்றங்களைத் தரப்போகிறார்

*சனியை குரு தனது 5ஆம் பார்வையாகப் 13.07.2015 வரை பார்க்கிறார். `குரு பார்க்கும் வரை `அஷ்டமச்சனி'பெரிய அளவில் தோஷம் செய்யமாட்டார். 13.07.2015 குரு சிம்ம இராசிக்கு சென்ற பின்பு சனி மீது குரு பார்வை இல்லை என்பதால் சற்று எச்சரிக்கை தேவை.*




**சனிபகவான் 2ஆம் வீட்டை பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:**

*சனிபகவான் உங்கள் இராசிக்கு 2ஆம் வீட்டை பார்ப்பதால் நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக செயல்பட வேண்டும். உங்கள் கௌரவம், புகழ் குறையும் சூழ்நிலை உள்ளது. நெருங்கியவர்களே உங்களுக்கு பாதகத்தை ஏற்படுத்துவர். பணத்தட்டுப்பாடு அதிகமாகி மனதில் கவலை அளிக்கும். சாதுர்யமாகப் பேசுவீர்கள். எடுகின்ற காரியத்தை துடிப்புடன் செயலாற்றி வெற்றிக்கனியை பறித்திடுவீர்கள் ஆனால் சில நேரங்களில் உணர்ச்சிவசப்பட்டு பேசி சிக்கிக் கொள்வீர்கள். எதிர்பார்த்த பணம் வரும். ஏற்றத்தைக் கொடுத்து நல்ல மாற்றத்தை தந்திடும்.*

**சனிபகவான் 5ஆம் வீட்டை பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்**

*சனிபகவான் உங்களின் 5ஆம் வீட்டை பார்ப்பதால் தன்னைச் சுற்றி ஏதோ சதி நடப்பதாக சிலரை சந்தேகப்படுவீர்கள். பூர்வீகச் சொத்தில் பிரச்சனைகள் வந்து சரியாகும். செலவுகள் அதிகம் ஏற்படும் அமைப்பு கொடுக்கும். கடன் வாங்கும் சூழ்நிலையும் உருவாகலாம். புத்திர வழியில் புதிய செலவுகள் வரக்கூடும். இதனால் கடன் வாங்கும் சூழ்நிலை உண்டாகும்.*

**சனிபகவான் 10ஆம் வீட்டை பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்**

*உடல் நலம் பாதிப்பினால் மருத்துவச் செலவுகள் கூடும். விடுப்பில் செல்வீர்கள். தேவையில்லாத பயம் ஏற்படும். புதிய முயற்சிகளை முற்றிலும் தவிர்க்க வேண்டும். நண்பர்கள் விரோதம் பாராட்டுவார்கள். செய்யும் வேலையில் பிரச்சனைகள் உண்டாகும். வேற்றுமொழி, மதத்தினரால் ஆதாயமடைவீர்கள்.*

**சனி பகவான் 2.11.2014 முதல் 28.11.2014 வரை விசாகம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

*குருவின் நட்சத்திரமான விசாகத்தில் சனி சஞ்சரிக்கும் சமயம் பெண்களுக்கு தேக ஆரோக்கியம் தொல்லை தரும். குடும்ப வாழ்வில் வீண் சச்சரவுகள் ஏற்படும். சுபகாரியங்கள் உண்டாகத் தடை ஏற்படும். புத்திர வழியில் சிறு சிறு சோதனைகள் உண்டாகி கவலைகள் கூடும். கணவனால் நிம்மதி இருக்காது. வீண் பழிச்சொல் உங்களைத் தேடி வரும்.*

**சனி பகவான் 29.11.2014 முதல் 26.12.2015 வரை அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

*சனியின் நட்சத்திரமான அனுசத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் வாழ்வில் ஏற்ற இறக்கங்கள் அதிகம் காணப்படும். கலத்துறையில் இருப்போர் சிறிது நற்பலன் அடைவர். ஏனைய துறையில் இருக்கும் நேயர்களுக்கு சோதனை அதிகமாகும்.*

**சனி பகவான் 27.12.2015 முதல் 24.01.2017 வரை கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

*புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனி சஞ்சரிக்கும் இந்தக் காலம் மாணவர்கள் மிக கடினமான முயற்சி செய்தாலும் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது. சோம்பல் அறவே கூடாது. கெட்ட சகவாசம் தவிர்த்து பெற்றோர். ஆசிரியர் சொற்படி நடந்தால் நன்மை உண்டாகும்.*

**தொழிலாளர்கள்:** *அஷ்டமச் சனியாக அமைவதால் புதிய தொழில் முயற்சியிலும் வெற்றி கிடைக்க சற்று தாமதம் ஆகும். வேலையின்றி இருப்பவர்கள் தொழில் ஆரம்பிக்கலாம். எதிரிகளின் இடையூறுகளில் இருந்து விடுபட சற்று போராட வேண்டி வரும். வீண் விரயம் நீங்கி, சேமிக்கவும் வாய்ப்புண்டாகும். திடீர் வருமானம் கிடைக்கவும் வாய்ப்புண்டு. தொழில் விஷயமாக ஊர்விட்டு ஊர் செல்லும் நிலை உருவாகலாம். எல்லா வகையிலும் சற்று கூடுதல் கவனம் தேவை.*

**பணியாளர்கள்:** *8இல் சனி உலவுவதால் சக ஊழியர்கள் உதவி கரமாக செயல்படமாட்டார்கள். வீண் அலைச்சல் இருக்கும். வெளியூர்ப்பயணம் மேற்கொண்டாலும் ஆதாயத்துடன் அமைவது சிரமம். புதிய பதவி உயர்வு கிடைக்கப் போராட வேண்டி வரும்.*

**கலைஞர்கள்:** *8ஆம் இடமான விரிச்சிக இராசியில் சனி அமர்வதால் பிரச்சினை நீங்க போராட வேண்டும். அப்படி போராடினால் வாழ்வில் முன்னேற்றம் காணலாம். புதிய ஒப்பந்தம் கிடைக்கப் பெறலாம். வருமானம் சிறப்பாக இருக்கும். ஆனாலும் சிக்கனம் தேவை.*

**அரசியல்வாதிகள்:** *அஷ்டம சனியாக அமைவதால் அரசியல்வாதிகள் எதிர்பார்த்த*



பதவி கிடைக்க சில காலம் பொறுத்திருக்க வேண்டும். பண விஷயத்தில் அதிக அக்கறை தேவை. வாக்கில் கவனம் தேவை. சொல்லில் நிதானம் தேவை.

**மாணவர்கள்:** 8இல் சனி உலவுவதால் சிரத்தை எடுத்துப் படிக்க வேண்டியதிருக்கும். ஆசிரியர்களின் அறிவுரையை கேட்டு நடப்பது நன்மையளிக்கும். விடாமுயற்சி தேவைப்படும். ஞாபக மறதி ஏற்படலாம்.

**விவசாயிகள்:** 8ஆம் இடமான விரிச்சிக இராசியில் சனி அமர்வதால் முன்னேற்றமான பலனைக் காண சில காலம் பிடிக்கும். கடின உழைப்பு தேவைப்படும். இயற்கை பொய்க்கும். எள், கரும்பு, உளுந்து, மானாவாரி பயிர்கள் மூலம் நல்ல வருமானத்தைப் பெறலாம்.

**பெண்கள்:** சனி 8இல் உலவுவதால் வளர்ச்சிப்பாதையில் வெற்றி நடை போடுவர். கணவர், குடும்பத்தாரின் அன்பு முழுமையாக கிடைக்கும். புதுமணத் தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். சந்தோசம் ஏற்படும்.

## சனி வக்கிரப் பலன்கள்:

**15.03.2015 முதல் 02.08.2015 வரையும் 26.03.2016** முதல் **12.08.2016** வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ்சரிக்கிறார்.

உங்கள் இராசிக்கு 10,11க்கு அதிபதியாக விளங்கி, தொழில் மற்றும் இலாப ஸ்தானத்தை ஆதிபத்தியமாகக் கொண்ட சனி வக்ரம் பெறும்பொழுது, கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். வாகனத்தை அதிவேகமாக இயக்க வேண்டாம். கெட்ட நண்பர்களைத் தவிர்ப்பது நல்லது. சட்டத்திற்குப் புறம்பான வகையில் எந்த முயற்சியும் செய்ய வேண்டாம். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள் ஆனால் கவனமாகக் கையாளுங்கள். வாகனப் பழுதை சரி செய்யுங்கள். அயல்நாடு மற்றும் புகழ் பெற்ற புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். 12க்கு அதிபதி வக்ரமடைவது நல்லதுதான். பணம் பலவழிகளிலும் வந்து பையை நிரப்பும். இலாபாதிபதி வக்ரம் பெறுவதால் உடனுக்குடன் அது செலவாகி விடும். எனவே இந்த வக்ரகாலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் செயல்படுவது நல்லது.

## நட்சத்திரப் பலன்கள்:

**அசுபதி:** எதிர்மறை எண்ணங்களை தவிர்க்கப் பாருங்கள். நேரம் கெட்ட நேரத்தில் பயணிக்க வேண்டாம். வாகன விபத்துகள் ஏற்படக்கூடும். முன்பின் அறியாதவர்களிடம் அநாவசியப் பேச்சை தவிர்க்கப் பாருங்கள். உடல் நலம் பாதிக்கும். திடீர் செலவுகள் உண்டாகும். புத்திர வழியில் கவலைகள் கூடும். அரசு வழியில் அனுகூலமற்ற பலன்கள் ஏற்படும். ஆதாயம் இல்லாத செயல்களில் சேதாரம் தேடிக் கொள்ளாதீர்கள்

**பரணி:** பழைய கடன் பிரச்சனைகள் அவ்வப்போது மனசை வாட்டும். யாரை நம்புவது என்கிற மனக் குழப்பத்திற்கு ஆளாவீர்கள். வர வேண்டிய பூர்வீக சொத்துப் பங்கை போராடிப் பெறுவீர்கள். சிலர் உங்கள் முன் புகழ்ந்து பேசிவிட்டு பின்னால் இகழ்ந்து பேசுவார்கள். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். தொழிலில் மந்தநிலை உருவாகும்.

### கிருத்திகை 1ஆம் பாதம்:

உடல்நிலை பாதிக்கும். கல்வியில் நற்பலன் பெறத்தடையைக் கொடுக்கும். கணவன் — மனைவி உறவில் திருப்தி இராது. சொத்து வாங்குவது, விற்பதில் வில்லங்கம் வந்து விலகும். திடீர் பயணங்களும் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் இருக்கும்.வீண் அலைச்சல் கொடுக்கும். உறவினர்கள் வகையில் கெடுதி ஏற்படும். வியாபாரத்தில் மந்த நிலை காணப்படும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

### பரிகாரம்:

சனிக்கிழைமைதோறும் ஆஞ்சனேய சுவாமியை வ்ழிபாடு செய்யவும். காகத்திற்கு எள் கலந்த தயிர் சாதம் வைக்கவும். உடல் ஊனமுற்றோர்களுக்கு உற்ற உதவிகள் செய்யவும். கோளறு பதிகம் பாராயணம் செய்யவும். தோஷங்கள் விலகி சூபீட்சமான நிலை ஏற்படும். ■

# ரிஷபம்

(கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் ரோகிணி, மிருக சீரிஷம் 1, 2, பாதங்கள்)

**மதிப்பெண்கள்**
**50**
**100**

வான மண்டலத்தில் இது இரண்டாவது இராசியாகும். இது காண்பதற்கு காளை போல் தோற்றம் அளிப்பதால் காளை என்று பொருள் தரும். "ரிஷபம்" எனப்படும். உங்கள் இராசிநாதன் சுக்கிரன் என்பதால், இனிமையாகப் பேசி எல்லாக் காரியங்களையும் முடித்துக் கொள்வீர்கள். தனிமை உங்களுக்கு பிடிக்காது. தன்னைச் சுற்றி நாலுபேர் எப்பொழுதும் இருக்க வேண்டுமென்று விரும்புவீர்கள். தலைமைப் பதவி உங்களுக்கு பொருந்தும்.

விருந்து, விழா, வளம், வாய்ப்பு, சந்தோஷம், போன்ற குதூகல நேரங்களில் தன்னையே மறந்து சந்தோஷிக்கும் மனமுடையவர் நீங்கள். கலைக்கும் ஆடம்பர வாழ்விற்கும், சினிமா, பொழுதுபோக்கு போன்ற கேளிக்கை அம்சங்களுக்கும், காமம், களத்திரம், சுக்கிலம் ஆகியவற்றிற்கும் அதிபதியாக வருகின்ற சுக்கிரனே உங்கள் இராசியின் அதிபதி என்பதால் சல்லாபப் பிரியராகவும், சதா சர்வ காலமும் இரசனை மனதுடனும் வலம் வருவீர்கள் சாஸ்திரத்தின் அதிபதியான சந்திரன் உங்கள் இராசியான ரிஷபத்தில் உச்சம் பெறுவதால் சல்லாபம் மட்டுமில்லாமல் சாஸ்திரப் பிடிப்பும், கொள்கை அமைப்பும் கொண்டு திகழ்வீர்கள் இரண்டு பெண் கிரகங்கள் சிறப்பு பெறும் இராசியாக ரிஷபம் திகழ்வதால், ஆண்களாயின் பெண்கள் மூலமும், பெண்களாயின் ஆண்கள் மூலமும், அதிக இலாபத்தை அடைவீர்கள். ஒரு வித கவர்ச்சி விசை உங்களிடம் எப்போதும் இருக்கும். வாக்கிற்கு அதிபதியாக புதன் வருவதால் வசீகர பேச்சு உங்களின் மதிப்பைக் கூட்டும்.


சனி பகவான் திருக்கணிதப்படி 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8:54 மணிக்கு துலாம் இராசியில் இருந்து விருச்சிக இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். வாக்கியப்படி 16—12—2014 அன்று பெயர்ச்சி ஆகிறார்( திருநள்ளாறு விஷேசம்)

உங்கள் இராசிக்கு 9,10ஆம் இட அதிபதியான சனிபகவான் 7இல் அமர்வதால் கூட்டுத்தொழிலில் இலாபம் ஏற்படும். குடும்பத்தில் வீண் விவாதங்கள் வரக்கூடும். கணவன் மனைவிக்குள் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை நல்லது. தொட்டதுக்கெல்லாம் குற்றம் குறை கண்டுபிடித்து சண்டையிடுவதைத் தவிர்க்கவும். உறவினர்கள், நண்பர்களிடம் சிறு சண்டை, சச்சரவு ஏற்படும். குடும்ப அந்தரங்க விஷயங்களை மூன்றாவது நபர்களிடம் சொல்லாதீர்கள். பயணங்களில் கவனம் தேவை. சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும். வேலையில்லாதவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். சிலருக்கு பூர்வீகச் சொத்து கைக்கு வந்துசேரும். வழக்குகள் சாதகமாகும். பொதுவாக பண வருமானம் மட்டும் மிக அதிக அளவில் வரக்கூடும். ஆயினும் செலவுகள் மிக அதிக அளவில் உண்டாகக் கூடும். ஆகவே செலவைக் கட்டுப்படுத்த வேண்டும். அதுவே இப்போது அவசியம். ஏற்றமும் மாற்றமும் ஏற்படும். அதிகாரிகளிடமிருந்து அன்பான அழைப்பும் பரிசும், பாராட்டும், சம்பள உயர்வும் அலுவலர்களிடமிருந்து மதிப்பும் மரியாதையும் எளிதில் கிடைக்கும். நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்கும். கணவனின் அன்பு நன்றாக இருக்கும். பிள்ளைகளால் பெருமையும். பூரிப்பும், உண்டாகும். சிலர் புதிதாக வாழ்க்கையை தொடங்குவர். சிலர் வீட்டில் குழந்தை பாக்கியம் உண்டாகும். ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

## சனிப்பெயர்ச்சி பார்வைப் பலன்கள்:

விருச்சிக இராசியில் இருந்துக் கொண்டு சனி பகவான் உங்கள் ஜென்ம இராசியையும், 4ஆம் இடமான சிம்ம இராசியையும், 9ஆம் இடமான மகர இராசியையும் தனது 3,7,10ஆம் பார்வையாகப் பார்த்து பல மாற்றங்களைத் தரப் போகிறார். இதன் விளைவாக, உடல் ஆரோக்கியம், அறிவாற்றல், தாய், தந்தை, சுகம், பூர்வீகம், கால்நடைகள், வாகன யோகம் ஆகிய அனைத்து ஆதிபத்தியங்களிலும் கவனம் தேவை.`கண்டகச்சனி' என்பதால் உஷார் தேவை என்று சொல்லப்பட்டாலும் சனியை குரு தனது 5ஆம் பார்வையாகப் 13.07.2015 வரை பார்க்கிறார்.

`குரு பார்க்கும் வரை `கண்டகச்சனி'பெரிய அளவில் தோஷம் செய்யமாட்டார். 13.07.2015 குரு சிம்ம இராசிக்கு சென்ற பின்பு சனி மீது குரு பார்வை இல்லை என்பதால் சற்று எச்சரிக்கை தேவை.




### ஜென்ம இராசியை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

ஜென்ம இராசியை சனி பார்ப்பதால் ஆரோக்கிய குறைபாடு ஏற்படும் உடல் சோர்வு மனச் சோர்வு ஏற்படும். முன்கோபத்தைக் குறைத்துக் கொண்டால் முட்டுக்கட்டைகள் அகலும். மனதில் அவ்வப்போது விரக்தி ஏற்படும்.

### சனியின் பார்வை 4ஆம் இடத்தில் படுவதால் ஏற்படும் பலன்கள்:

சனியின் பார்வை 4ஆம் இடத்தில் பதிவதால், குடும்ப ஒற்றுமை குறையாமல் பார்த்துக் கொள்வது நல்லது. வீடு வாங்கும் முயற்சி அல்லது கட்டும் முயற்சியில் ஆர்வம் கூடும். வண்டி வாகன பாதிப்புகள் வந்து நீங்கும். உடல் நிலை மீது கவனம் தேவை. மாணவர்கள் படிப்பில் அதிக அக்கறை காட்டுவது நல்லது. தாயாரது ஆரோக்யத்திலும் அதிக அக்கறை தேவை.

### சனியின் பார்வை 9ஆம் இடத்தில் பதிவதால் ஏற்படும் பலன்கள்:

பாக்கிய ஸ்தானமான 9ஆம் இடத்தில் சனியின் பார்வை பதிவதால் பயணங்களால் அலைச்சல் ஏற்படலாம். பாகப் பிரிவினைகள் சுமூகமாக முடியும். வெளிநாட்டு பயணங்கள் கைக்கூடும். மாற்று இனத்தவர்களுடன் கூட்டாக தொழில்புரியும் வாய்ப்புகள் உருவாகும். கணவன் மனைவிக்கு இடையே அன்பு கூடும். குல தெய்வ பூஜை செய்யும் பாக்கியம் ஏற்படும். முனீஸ்வரன், அய்யனார் போன்ற தெய்வங்களால் அனுகூலம் உண்டாகும்.

### சனி பகவான் 2.11.2014 முதல் 28.11.2014 வரை விசாகம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

குருவின் நட்சத்திரமான விசாகத்தில் சனி சஞ்சரிக்கும் சமயம் உங்கள் ஆரோக்கியம் அற்புதமாக இருக்கும்.இது உங்களுக்கு பொற்காலம் என்றே கூற வேண்டும். கணவன்—மனைவி உறவு அற்புதமாக இருக்கும். உறவினர்களால் நற்பலன் உண்டாகும். பொன்,பொருள் சேர்க்கை உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் அனுகூலமும் எதிர்பார்த்த பொருள் வரவும் திடீரென்று கிடைக்கும். நிலபுலன்களால் சிலருக்கு நல்ல இலாபம் கிட்டும். சிலருக்கு திடீரென்று வெளியூர், பயணங்களால் நன்மை ஏற்படும்.

### சனி பகவான் 29.11.2014 முதல் 26.12.2015 வரை அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

சனியின் நட்சத்திரமான அனுசத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் சக தோழர்களின் ஒத்துழைப்புக்கள் உண்டாகும். அதிகாரிகளின் அனுகூலம் சாதகத்தைத் தரும்படியாக இருக்கும். சிலருக்கு இடமாற்றம் அமையும். தனியார் துறையில் இருப்போர் சற்று கவனமுடன் இருக்கவும். எதிரிகளின் பலம் குறைந்து உங்கள் பலம் கூடும். இனி எந்தப் புதிய முயற்சியிலும் ஈடுபடலாம்.பரிபூரண வெற்றி உண்டாகும். மற்றவர்கள் மதிக்கக்கூடிய உன்னத நிலையும் உண்டாகும்.

### சனி பகவான் 27.12.2015 முதல் 24.01.2017 வரை கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனி சஞ்சரிக்கும் இந்தக் காலம் மாணவர்களின் கல்வியில் முன்னேற்றம் மிகுந்து காணப்படும். தொழிற்கல்வி மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெற வாய்ப்பு உள்ளது.அரசு வழியில் உதவி பணம் சிலருக்குத் தடையின்றி கிடைக்கும். பல போட்டிகளில் கலந்துக் கொண்டு சாதனை செய்வீர்கள்.

**தொழிலாளர்கள்:** கண்டகச் சனியாக அமைவதால் வேலை விஷயமாக அலைச்சல் ஏற்படும். கூட்டாளிகளிடையே ஒற்றுமை குறையும். அதிக அலைச்சல் இருக்கும். கடின உழைப்பு இருக்கும். சிலர் ஊர்விட்டு ஊர் மாற்றும் நிலை ஏற்படும். எதிரிகள் வகையில் இடையூறுகள் வரலாம். முதலீடு விஷயத்தில் அதிக கவனம் தேவை. தொழிலில் போட்டி உருவாகும். பண விஷயத்தில் சற்று அக்கறை தேவை

**பணியாளர்கள்:** 7இல் சனி அமர்வதால் பணியில் அனுகூலங்கள் இருக்கும். திடீர் இடமாற்றம் ஏற்படலாம். அதிக வேலைப்பளுவை சுமக்க வேண்டியிருக்கும். சம்பள உயர்வுக்கு தடையேதும் இல்லை. மேல் அதிகாரிகளிடம் அனுசரித்துப் போவது நல்லது. உங்கள் பொறுப்புகளை வேறு யாரிடமும் ஒப்படைக்க வேண்டாம்..

**கலைஞர்கள்:** சனி 7இல் வருவதால் புதிய

ஒப்பந்தம் கிடைக்க அதிக சிரத்தை எடுக்க வேண்டியிருக்கும். ஓரளவுக்கு சம்பாதிக்க முடியும். வாக்கில் கவனம் தேவை.

**அரசியல்வாதிகள்:** கண்டகச் சனியாக அமைவதால் எதிர்பார்த்த பதவி கிடைப்பது தடைபடலாம். மேலிடம் அனுசரிப்பும், தொண்டர்களிடம் கண்டிப்பும் காட்டுவது நல்லது. எதிலும் எச்சரிக்கைத் தேவை.

**மாணவர்கள்:** சனியின் சஞ்சாரம் நட்பு ஸ்தானமான 7ஆம் வீட்டில் அமைவதால் கடின முயற்சி எடுத்து படிக்க வேண்டியது அவசியம். சிலருக்கு போட்டிகளில் வெற்றி கிடைப்பது அரிதாகும். ஆசிரியர்களின் அறிவுரையைக் கேட்டு நடக்கவும்.

**விவசாயிகள்**: சனி 7இல் வருவதால் கடுமையாக உழைக்க வேண்டியது இருக்கும். பெரிய வருமானம் கிடைக்காவிட்டாலும் உழைப்புக்கு தகுந்த வருமானம் வரும். அதிக முதலீடு செய்யும் விவசாயத்தை தவிர்க்கவும்.

**பெண்கள்:** கண்டகச் சனியாக அமைவதால் கணவர் மற்றும் குடும்பத்தாரிடம் விட்டு கொடுத்துப் போவது நல்லது. வேலைக்குச் செல்லும் பெண்கள் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். உடல் நிலையில் அதிக அக்கறை தேவை.

## சனி வக்கிரப் பலன்கள்:


**15.03.2015** முதல் **02.08.2015** வரையும் **26.03.2016** முதல் **12.08.2016** வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ்சரிக்கிறார்.

உங்கள் இராசிக்கு 9,10க்கு அதிபதியாக விளங்கி, பாக்கியம் மற்றும் தொழில் ஸ்தானத்தை ஆதிபத்தியமாகக் கொண்ட சனி வக்ரம் பெறும் பொழுது, கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இல்லையேல், எதிரிகளால் ஏமாற்றம்காண நேரிடும். தொழிலில் வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி மாறி வந்துக் கொண்டேயிருக்கும். தேவையில்லாத கடன்சுமை கூடும். அதேசமயம் பல நல்ல பலன்களும் ஏற்படும். புதிய வாய்ப்புகள் உருவாகும். புத்துணர்ச்சி ஏற்படும். எதிலும் இரட்டிப்பு பொருள் வரவும், உயர்ந்த நடையும் உண்டாகிவிடும். யாருக்கும் ஏதேனும் ஒரு சிறப்பான நற்பலன் உண்டாகிவிடும். அரிதான செயலில் வெற்றி அற்புதமாக உண்டாகும்.

## நட்சத்திரப் பலன்கள் :

### கிருத்திகை 2,3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள் :

சொந்த வாகனத்தில் இரவு நேரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. வெளிவட்டாரம் நன்றாக இருக்கும். பிரபலங்கள், வேற்று மொழிக்காரர்கள் உதவுவார்கள். உங்கள் குடும்ப வாழ்வு சீராக



இருக்கும். குடும்பத்தில்; சுபகாரிய முயற்சியால் பொருள் செலவு உண்டாகும். கொடுக்கல் — வாங்கல் திருப்தியைக் கொடுக்கும்.

### ரோகினியில் பிறந்தவர்கள் :

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். வீடு வாங்குவது, விற்பதிலிருந்த சிக்கல்கள் தீரும். பயணங்களில் கவனம் தேவை. சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும் கணவன்—மனைவி ஒற்றுமை சுமாராக இருக்கும். புதிய முதலீடு செய்து புதிய தொழில் தொடங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

### மிருகசீருஷம் 1,2ஆம் பாதங்களில் பிறந்தவர்கள் :

எதிர்பாராத பணவரவு, திடீர் யோகம், விஐபிகளுடன் நட்பு உண்டாகும். திருமணம் நடைபெறாதவர்களுக்கு திருமணம் நடைபெறும்.புதிய செலவுகள் ஏற்படும். வீண் அலைச்சல் வெளியூர், பயணம் உண்டாக்கும். மேலதிகாரிகளைப் பற்றிய அந்தரங்க விஷயங்களை வெளியில் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். சக ஊழியர்கள் உங்களைப்பற்றி விமர்சித்தாலும் அனுசரித்துப் போவது நல்லது..

## பரிகாரம்:

குல தெய்வ வழிபாடு செய்யவும். ஏழை எளியவர்க்கு ஆடை தானம் செய்யவும். கந்தர் சஷ்டி கவசம் படிக்கவும். கஸ்டங்கள் யாவும் நீங்கி நன்மைகள்யாவும் நல்கிடும். நல்லதோர் வாழ்வு நலமுடன் நாடி வந்திடும்.




உங்கள் இராசிநாதன் புதன் என்பதால், அனுபவ ஞானம் அதிகம் பெற்றவர்களாக விளங்குவீர்கள். எவரிடமும் எளிதாகப் பழகிவிடுவீர்கள். மனதில் திடீர் திடீரென நட்பு பகையாகும். பகை நட்பாகும். பலதரப்பட்ட நண்பர்கள் உங்களை நாடி வருவார்கள். குடும்ப பொறுப்புகளை அதிகம் கவனிக்காமல், கூட இருப்பவர்களுக்காகவே பாடுபடும் குணம் உங்களுக்கு உண்டு. உயரதிகாரிகள் முதல் உடன்பிறப்புகள் வரை உங்கள் வலையில் விழ காரணமாக இருப்பது, மற்றவர்களின் இரகசியங்கள் எல்லாம் உங்களுக்கு தெரிவதால் தான்.

கால புருஷ தத்துவத்தின்படி 3வது இராசி மிதுன இராசி. ஒற்றைபடை இராசி மற்றும் ஆண் இராசி. மிதுனம் என்றால் இரண்டு என்று பொருள் இரண்டு குழந்தைகள் சேர்ந்து நிற்பது போல ஒரு தோற்றத்தைக் கொண்ட இராசி எனவே இதனை மிதுன இராசி என்று கூறுகின்றோம். இதில் மிருகசீருஷம் 3,4 திருவாதிரை மற்றும் புனர்பூசம் 1,2,3 பாதங்கள் ஆகிய நட்சத்திரங்கள் இதில் அடங்கும்.


எடுத்தோம் கவிழ்த்தோம் என்றில்லாமல் ஆழமாக யோசித்து முடிவெடுக்கும் நீங்கள் கடந்து வந்த பாதையை ஒரு போதும் மறவாதீர்கள். நீங்கள் எப்போதும் சிரித்துப் பேசி சந்தோஷமாக இருக்கும் பிறவி. கலைகளில் எப்போதும் அலாதி பிரியம் கொண்ட நீங்கள் அனைத்து கலைகளையும் கற்பதில் சிறந்து விளங்குவீர்கள். குறிப்பாக பாடல்களில் உங்களுக்கு கொள்ளை ஆசை. சிற்றின்பங்கள் காண்பதில் மிகுந்த விருப்பம் கொணடவர்கள். நல்ல கம்பீரமான எடுப்பான தோற்றம் உடையவர்களாக இருப்பீர்கள் புதன் உங்கள் இராசியினை ஆட்சி செய்வதால் அனைவரையும் பேச்சினால் கவர்ந்து இழுக்கும் தனித்திறமை கொண்டு விளங்குவீர்கள்.

சனி பகவான் திருக்கணிதப்படி 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8:54 மணிக்கு துலாம் இராசியில் இருந்து விருச்சிக இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். வாக்கியப்படி 16—12—2014 அன்று பெயர்ச்சி ஆகிறார்( திருநள்ளாறு விஷேசம்).

இதுவரை உங்கள் இராசிக்கு 5ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான் இப்பொழுது, 6ஆம் இடத்தில் அடியெடுத்து வைக்கிறார். எதிர்ப்பு, வியாதி, கடன் என்று வர்ணிக்கப்படும் இடத்தில் சனி வருவதால் மதிப்பும், மரியாதையும் உயரும். மறக்க முடியாத சம்பவங்களும் நடைபெறும். தொழில் வியாபார போட்டிகள் குறையும். உங்கள் வளர்ச்சிக்கு ஏற்பட்ட தடை விலகும். முயற்சிகளுக்கு முட்டுகட்டை போட்டவர்கள் விலகி விடுவார்கள் எல்லாமே ஏற்றம்தான். பழைய பாக்கி வசூல் வேகம் பிடிக்கும். புதிய கிளை தொடங்குவது வியாபாரத்தை பெருக்குவது போன்றவற்றில் ஈடுபடுவீர்கள். பணியாட்களும் உங்களுக்கு ஒத்துழைப்பு தருவார்கள். வேலை தேடுபவர்களுக்கு வேலைகிடைப்பதில் இருந்த தடைகள் நீங்கும். எதிர்பார்த்த வேலையும் கிடைக்கும். சக ஊழியர்களுடன் ஏற்பட்ட பிரச்சனைகள் தீரும். அவர்களால் நன்மை உண்டாகும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கலாம். பணிபுரியும் இடத்தில் கவுரவம் கூடும்.

### சனிப்பெயர்ச்சி பார்வைப் பலன்கள்:

உங்கள் இராசிக்கு 6இல் சஞ்சரிக்கும் சனி பகவான் பார்வை 3, 8, 12 ஆகிய இடங்களில் பதிவதால் வேண்டும் அளவு சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும். அங்கிருந்துக் கொண்டு உங்கள் இராசிக்கு 3ஆம் இடம், 8ஆம் இடம், 12ஆம் இடம் ஆகிய இடங்களைப் பார்த்து புனிதப்படுத்துகிறார். இதன் விளைவாக, சகோதரர்கள், சகோதரிகள் ஸ்தானம், சகாயங்களும், வழக்கில் வெற்றிகளும் நிர்ணயமாகும் நேரம். ஆயுள், ஆரோக்ய பலமறிதல், கடன் சுமைகளிலிருந்து விடுபடும் நிலை. இழப்புகளை ஈடுசெய்ய எடுக்கும் முயற்சி, பயணங்களால் கிடைக்கும் பயன்கள். கூடுதல் விரயம், வீட்டில் நடைபெறும் சுபகாரியங்கள் போன்றவற்றில் எடுக்கும் முடிவுகளை இந்தச் சனி நிர்ணயிக்கப்போகிறது.




### 3ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

*3ஆம் இடத்தை சனி பார்ப்பதால் உடன்பிறப்புகளின் முன்னேற்றம் கருதி ஒரு பெரும் தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். புதிய தொழில் தொடங்கும் முயற்சிக்கு உடன்பிறப்புகள் கைகொடுத்து உதவுவார்கள்.*

**8ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:**

*8ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஆயுள், ஆரோக்கியம் சீராகும். பாயில் படுத்திருந்தவர்கள் பம்பரமாக சுழலுவார்கள். மூடிக்கிடந்த தொழில் நிலையங்களில் இனி திறப்பு விழா நடத்தி கலகலப்பாகச் செயல்படுவீர்கள்.*

**12ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:**

*சனியின் பார்வை 12ஆம் இடத்தில் பதிவதால் பயணங்கள் அதிகரிக்கும். பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகைகள் மீண்டும் உங்கள் கைக்கு வந்து சேரும். அந்நிய தேச வாய்ப்புகள் எண்ணியபடியே கைக்கூடும். பொது வாழ்வில் பொறுப்புகளும், புதிய பதவிகளும் ஒரு சிலருக்கு வந்து சேரலாம். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள் மற்றும் கல்யாண வாய்ப்புகள் கைகூடி வரும்.*




**சனி பகவான் 2.11.2014 முதல் 28.11.2014 வரை விசாகம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

*குருவின் நட்சத்திரமான விசாகத்தில் சனி சஞ்சரிக்கும் சமயம். உங்கள் ஆரோக்கியம் அற்புதமாக இருக்கும். இது உங்களுக்கு பொற்காலம் என்றே கூற வேண்டும். கணவன்— மனைவி உறவு அற்புதமாக இருக்கும். உறவினர்களால் நற்பலன் உண்டாகும். பொன்,பொருள் சேர்க்கை உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் அனுகூலமும் எதிர்பார்த்த பொருள் வரவு திடீரென்று கிடைக்கும். நிலபுலங்களால் சிலருக்கு நல்ல இலாபம் கிட்டும். சிலருக்கு திடீரென்று வெளியூர், பயணங்களால் நன்மை ஏற்படும்.*

**சனி பகவான் 29.11.2014 முதல் 26.12.2015 வரை அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

*சனியின் நட்சத்திரமான அனுசத்தில் சனி சஞ் சரிக்கும் காலம் எதிலும் இரட்டிப்பு பொருள் வரவும், உயர்ந்த நன்மையும் உண்டாகிவிடும். ஏதேனும் ஒரு சிறப்பான நற்பலன் உண்டாகிவிடும். அரிதான செயல் வெற்றி அற்புதமாக உண்டாகும். என்றாலும் வியாழனின் சஞ்சாரம் நல்லபடியாய் இல்லை என்பதால் எச்சரிக்கையாக எக்காரியத்திலும் ஈடுபாடு வேண்டும். நண்பர்கள் மற்றும் யாவரிடமும் எச்சரிக்கை வேண்டும்.*

**சனி பகவான் 27.12.2015 முதல் 24.01.2017 வரை கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

*புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனி சஞ் சரிக்கும் இந்தக் காலம் மாணவர்களின் கல்வியில் முன்னேற்றம் மிகுந்து காணப்படும். தொழிற்கல்வி மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெற வாய்ப்பு உள்ளது.அரசு வழியில் உதவி பணம் சிலருக்குத் தடையின்றி கிடைக்கும். பல போட்டிகளில் கலந்துக் கொண்டு சாதனை செய்வீர்கள்.*

**தொழிலாளர்கள்:** *6இல் சனி சஞ்சரிப்பதால் செய்யும் தொழிலில் எதிர்பார்த்ததைவிட அதிக இலாபம் வரும். சகோதரர்கள் உதவியாக இருப்பார்கள். எடுத்த காரியங்களை உங்களுடைய புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்தி திறமையாக செய்து முடிப்பீர்கள். சிலருக்கு கூட்டுத்தொழில் வாய்ப்பு கிடைக்கும். நல்ல கூட்டாளி கிடைப்பர். பழைய கடன்கள் அடைபடும் விதத்தில் வருமானம் வரும்.*

**பணியாளர்கள்:** *6இல் சனி சஞ்சரிப்பதால் அரசாங்கம், அரசாங்க அதிகாரிகளால் தொல்லை ஏற்பட வாய்ப்புண்டு. உங்களுடைய எதிரிகளும்கூட உங்களுக்கு சாதகமாக செயல்படுவார்கள். உங்கள் கருத்துக்கு மாற்றுக் கருருத்தாக உங்கள் செயல்திறனைக்கண்டு பயனடைவார்கள். அலுவலகத்தில் பணிபுரிபவர்களுக்கு வேலைப்பளு குறையும். இந்த சமயம் ஊதிய உயர்வு, பணிஉயர்வு கிடைக்கும். அலுவலகத்தில் சுமுகமான நிலை ஏற்படும். உடன் வேலை செய்பவர்கள்உங்களுக்கு ஒத்துழைப்பு நல்குவார்கள்.சீரான பலனை சிறப்பாக எதிர்பார்க்கலாம். வேலையில் பளு இருக்கும். ஆனாலும் உழைப்புக்கு ஏற்ப வருமானம் அதிகரிக்கும். மேல் அதிகாரிகளிடம் அனுசரித்துச் செல்வது நன்மையளிக்கும்.*

**கலைஞர்கள்:** *6இல் சனி சஞ்சரிப்பதால் உங்கள் திறமைகள் வெளி உலகுக்குத் தெரியாமல் இருந்த நிலை மாறி இனிமேல் குன்றின் மேலிட்ட விளக்காக உங்கள் திறமைகள் வெளி உலகுக்குத் தெரிய வரும். சொன்னது சொன்னவாறு நடந்துக்கொண்டு உங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொள்வீர்கள். அதனால் நாணயம் மிக்கவர் என்று பெயரெடுப்பீர்கள் புதிய ஒப்பந்தம் பெற விடா முயற்சி எடுக்க வேண்டியது இருக்கும்.*

**அரசியல்வாதிகள்:** *6இல் உலவும் சனியால் உங்கள் முகத்தில் உள்ள பொலிவு அனைவரையும் கவர்ந்திழுக்கும். வசீகரம் வசப்படும். தொழிலில் மேன்மை ஏற்படும். மக்கள் மத்தியில் செல்வாக்கு குறையாது. சொல்வாக்கு சூபீட்சத்தைக் கொடுக்கும் நல்ல பொருளாதார வசதியுடன்*

இருந்து வருவர்.

**மாணவர்கள்:** 6இல் உலவும் சனியால் கடின முயற்சி எடுத்து படிக்க வேண்டியது இருக்கும். உங்கள் முயற்சிக்கு தகுந்த பலனைப் பெறலாம். ஆசிரியரின் வழிகாட்டுதல் உதவிகரமாக இருக்கும். ஆய்ந்து படித்து வந்தால் தேர்வில் நல்ல வெற்றியை நாடிட முடியும்

**விவசாயிகள்:** 6இல் உலவும் சனியால் நல்ல பல முன்னேற்ற பலனைக் காணலாம். வருவாயை அதிகரிக்கலாம். புதிய சொத்து வாங்க யோகமுண்டு. கைவிட்டு போன சொத்து மீண்டும் கிடைக்கும்.

**பெண்கள்:** 6இல் உலவும் சனியால் கணவன்—மனைவி உறவு மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். மனைவி வழி உறவினரால் நன்மை கிடைக்கும். மனதில் தைரியமும் செயலில் சுறுசுறுப்பும் ஏற்படும். கல்வி, வங்கி,பத்திரிக்கை, எழுத்துத்துறை,ஆசிரியர் பணியில் உள்ளோர் மேன்மை அடைவார்கள். உங்களுடன் பழகும் நண்பர்களுக்கு தக்க சமயத்தில் உதவிகள் பல செய்வீர்கள். நண்பர்களின் துயரங்களைப் போக்குவீர்கள். நல்ல வருமானம் கிடைப்பதுடன், பல பொறுப்பான பதவிகளும் உங்களுக்கு கிடைக்கும். வாழ்க்கையில் நல்ல வசதி வாய்ப்புகள் ஏற்படும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தும் வந்து சேரும்.



## சனி வக்கிரப் பலன்கள்:

**15.03.2015** முதல் **02.08.2015** வரையும் **26.03.2016** முதல் **12.08.2016** வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ்சரிக்கிறார்.

உங்கள் இராசிக்கு 9, 10க்கு அதிபதியாக விளங்கும் சனி வக்ரம் பெறும்பொழுது, குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசியமாகும். தொழிலில் மூலதனம் போடுபவர்கள் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். ஆதாயம் ஏட்டில் இருக்குமே தவிர எதிரில் இருக்காது. பெண் குழந்தைகளின் வளர்ப்பில் கூடுதல் கவனம் தேவை. பிள்ளைகள் தன்னிச்சையாக செயல்படத் தொடங்கி மனக்கவலையை அதிகரிக்க வைக்கலாம். ஷேர் பிசினஸ் மற்றும் வாகனத் துறை, கலைத்துறைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் விழிப்புணர்ச்சியோடு இருப்பது அவசியம். பத்திரப்பதிவில் கவனம் தேவை.

## நட்சத்திரப் பலன்கள்:

### மிருக சீர்ஷம் 3, 4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்:

எந்த பிரச்சனையும் எதிர்கொள்ளும் மனோதிடம் உங்களுக்கு வரும். இதுவரை தொல்லை கொடுத்த நபர்கள் அவர்களால் வந்த பிரச்சனைகள் இருக்கும் இடம் தெரியாமல் ஓடி ஒளிந்துக்கொள்ளும். எதிர்ப்பவர்களும் எதிர்ப்புகளும் இனி எதிரில் வராது. சேமிக்க முடியவில்லையே என்ற கவலை நீங்கி சேமிக்கும் விதத்தில் பணவரத்து இருக்கும்.எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கவுரவம் அந்தஸ்து உயரும். பிறர் பாரட்டும்படியான செயல்களைச் செய்வீர்கள். உங்கள் இராசிகுரிய யோக பலன்கள் கூடுதலாகும். எடுக்கும் காரியம் வெற்றியைக் கொடுக்கும். பொருள் வரவு திருப்தியாக இருக்கும்.

### திருவாதிரை 1,2,3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்:

கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபங்கள் நீங்கும். ஒற்றுமை ஏற்படும். உறவினர்களுடன் இருந்த கருத்து வேற்றுமை, பிரச்சனைகள் நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். குடும்பதினருடன் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். எல்லாவிதத்திலும் சுகமும் சவுக்கியமும் அதிகரிக்கும்.செய்யும் தொழிலில் சிறப்பும்,புதிய முயற்சியில் அனுகூலமும் உண்டாகும். தொழிலில் சிறப்பு ஏற்படும். சிலருக்கு புதிய பொறுப்பு வரும். ஏற்றுக் கொள்ளவும்.

### புனர்பூசம், 1, 2, 3ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்:

உங்களுக்கு மாபெரும் மறுமலர்ச்சி உண்டாகும். அசையா சொத்து அமையும். மனைவி வழி வீட்டாரின் உதவி உங்களுக்கு உதவிக்கரம் நீட்டும். கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும். கல்வியில் நாட்டம் ஏற்படும். இதுவரை பாடங்கள் படிப்பதில் இருந்த மெத்தனப்போக்கு மாறும். சகமாணவர்களுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமைகள் நீங்கும். சுறு சுறுப்பாக செயல்பட்டு கல்வியில் வெற்றி பெறுவீர்கள் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்கும் போது கவனம் தேவை. கல்விக்காக வாங்கிய கடன் பிரச்சனை குறையும். உயர்கல்வி கற்பவர்கள் படிப்பில் ஆர்வம் காட்டுவார்கள். வீண் அலைச்சல் இரவு நேரத்தில் கண்விழிப்பது போன்றவை குறையும்.

## பரிகாரம்:

சிவ வழிபாடு செய்யவும். பிரதோஷ காலத்தில் நந்தியை தரிசனம் செய்யவும். சிவ புராணம் படிக்கவும். தோஷங்கள் நீங்கி சுகமான வாழ்வுக்கு சிறப்பான வழி பிறக்கும். துன்பங்கள் நீங்கி இன்பங்கள் உங்கள் வாழ்வில் இணைந்திடும். ■

ஸ்ரீ விஷ்ணு பகவான் துணை



# சகல வளமும், நலமும் வழங்கும்
# அபூர்வ மூலிகைப் பொருட்கள்



## ஜெயா TV புகழ் 'பரிகாரச் செம்மல்' மூலிகை சித்தர் ஞானகுரு

**அனைத்து மூலிகைகளும் சித்தர் முறைப்படி உயிருடன் எடுத்து உங்களுக்காக 48 நாட்கள் அதற்குண்டான உரு ஏற்றி உயிரோட்டமாக உங்களது ஆயுட் காலம் வரையில் பலன் அளிக்கக்கூடியது.**

1. **ஐஸ்வர்யம் பண வரவு, வளர்ச்சி, சந்தோஷம் பெருக்கும் மூலிகை பவுடர் 10 பாக்கெட் ரூ.2000/-** ஒரு பாக்கெட்டுடன் 100 கிராம் நல்லெண்ணை கலந்து தினமும் ஒரு வேளை தீபம் ஏற்றவும். வீட்டில் ஐஸ்வர்யம், பண வரவு, சுபநிகழ்ச்சி, சந்தோஷம் உண்டாக்கும். வியாபாரத்தில் அதிக வாடிக்கையாளர்கள், அதிக பண வரவு, அதிக இலாபம், அதிக புகழ் ஏற்படும்.
2. **வசிய பூசு மஞ்சள் ரூ.2000/-** பெண்கள் காலையில் குளிக்கும் போது தடவி குளிக்க முக வசியம், அதிக பாசம், மாமியார், நாத்தனார் வசியம், முக வசியம், எடுத்த காரியம் அனைத்தும் வெற்றி, புத்ரதோஷம் உடல் நல முன்னேற்றம் பல வசீய விஷயத்துக்கும் உகந்தது.
3. **108 மூலிகை விநாயகர் ரூ.2500/-** வீடு அல்லது வியாபார பூஜையில் வைப்பதால் சுப நிகழ்ச்சிகள், பணவரவு, ஐஸ்வர்யம், மனநிம்மதி, சந்தோஷம், தொழில்மேன்மை ஏற்படும்.
4. **மூலிகை விளக்கு திரி ரூ.3000/-** தினமும் மாலையில் ஒரு மணி நேரம் தீபம் ஏற்றி வர வாஸ்து தோஷம், கிரகதோஷம், கெட்ட எண்ணங்கள், குடும்பச் சண்டை, அன்னியோன்ய குறைவு, உறவினர் விரோதம், காரியத்தடை, கடன் தொல்லை, வியாபார வசியம், பலவித தொல்லைகள் நீங்கும். தீப விளக்கு இலவசமாக வழங்கப்படும்.
5. **ஆஞ்சநேயர் தாயத்து ரூ.3000/-** இதனை அணிவதால் ஏவல், பில்லி, சூன்ய கோளாறு, நவகிரக தோஷங்கள், சித்த பிரமை, ஞாபக மறதி, இரவில் அலறுதல், கெட்ட கனவு, சண்டை சச்சரவுகள் யாவும் விலகும்.
6. **பஞ்ச ஜோதி தாயத்து ரூ.3000/-** இதனை அணிவதால் ஜோதிடக்கலை, மந்திர சாஸ்திரங்களுக்கு அவசியமான மூலிகை வாக்கு சக்தி, குறி சொல்ல, உபதேசிக்க, ஞானம் வளர எடுத்தது ஈடேறும்.
7. **சரஸ்வதி தாயத்து ரூ.5000/-** இதனை அணிவதால் கல்வியில் ஊக்கம், ஞாபக மறதி, குறைந்த மேற்படிப்புகளில், பரீட்சையில் வெற்றி, பதவி சம்பந்தப்பட்ட பரீட்சைகளில் வெற்றி.
8. **சந்தான கோபாலன் தாயத்து ரூ. 5000/-** புத்ரபாக்கியம் சம்பந்தமாக ஜாதகப்படி ஸ்திரி சாபம், கோலாபம், மாதுார், பிதுர்சாபம், தெய்வ சாபம், சர்ப்ப சாபம் போன்ற சாபத்தை நீக்கியும், பூர்வ கர்ம பாவத்தை நீக்கி இஷ்டபுத்திர சந்தான கோபாலன் பிராப்திரயை தர வல்லது.
9. **கணவன்-மனைவி வசிய மை ரூ. 5000/-** கணவன்-மனைவி சண்டை சச்சரவுகள், அன்யோன்ய குறைவு, குடும்பத்தில் பிரிவினை முதலியவைகளுக்கு சர்வ நிவாரணம், இரண்டு மாதத்தில் முன்னேற்றம்.
10. **ஆண், பெண் வசியத்தன்மை மை ரூ.5000/-** காதலன்-காதலி காதல் வசியம், காதல் தோல்வி, தாம்பத்திய சுகம் இல்லாமை, காதலர்களுக்குள் ஏற்படும் தடங்கள் யாவும் நீங்கும்.
11. **காரியசித்தி, இராஜவசியம், தனவசிய மை ரூ. 5000/-** இதனை உபயோகிப்ப தால் எடுத்த காரியம் அனைத்தும் கைகூடும். செல்வாக்கு உயரும், எதிர்பார்த்த பணவரவு, தொழில் வெற்றி, சகல சவுகரியங்களும் உண்டாகும்.
12. **மகர குபேர மகாலட்சுமி வசிய அஞ்சனம் மை ரூ.5000/-** எப்படிப்பட்ட தரித்திரமும் போகும். லாட்டரி, ரேஸ், ஸ்பெகுலேஷன், பங்கு வியாபாரம் இவைகளில் பெரும் அதிர்ஷ்டமும் யோகமும் பெருகும். லாப சக்தியும் உண்டாக்கும். பூரண லட்சுமி யோகம் உண்டாகும்.
13. **சத்ரு நாசம் அஞ்சனம் மை ரூ. 5000/-** எதிரி தொல்லை, செய்வினை, பங்காளிகளின் வழக்கு, நேர்முக மற்றும் மறைமுக எதிர்ப்புகள் விலகி சந்தோஷம் உண்டாகும்.
14. **ஸ்ரீ மகாலட்சுமி ஐஸ்வர்ய மூலிகை ரூ.15,000/-** வீடு அல்லது அலுவலகத்தில் வைத்து காலை, மாலை தூப காட்டி வர உங்களுக்கு மகாலட்சுமியின் பரிபூரண அருள் கிடைத்து பணவரவு, சந்தோஷம், வளர்ச்சி ஏற்படும்.
15. **பிரணவ மூலிகை ரூ.3000/-** இதனை இடுப்பில் இருக்கமாக கட்டிக்கொள்ளவும். பிரணவம் என்றால் உயிர் என்று அரத்தம். இன்னுமொரு உயிர் உங்களுக்கு வரும்போது சோம்பல் நீங்கி, சுறுசுறுப்பு, தீயவை நீங்கி சகல வசியம், ஐஸ்வர்யம் உண்டாகும். சகலவலி நீங்கி நிவாரணம் அடையலாம். தாம்பத்திய உறவில் பூரண சுகம் பெறலாம்.
16. **அச்சங்கரணை மூலிகை ரூ.3000/-** தண்ணீரில் சுத்தம் செய்து மஞ்சள், குங்குமம் தடவி உங்கள் பூஜையில் ஒரு வேளை வைத்து குல தெய்வத்தை மனதில் நினைத்துக் கொண்டு வீடு வியாபாரத்தில் வெளி வாசலில் வெளியே படுக்கை வசத்தில் கட்டவும். கண் திருஷ்டி, தீயசக்தி, சூன்யம், பேய், பிசாசு, இரவில் அலறுதல், பயம் இவை விலகி சகல ஐஸ்வர்யம் வசியம் உண்டாகும்.
17. **நாகநந்தா மூலிகை தாயத்து ரூ.3000/-** இதனை அணிவதால் இராகு, கேது தோஷ நிவர்த்தி ஆவதுடன் வாழ்நாள் முழுவதும் இல்லறம் சிறப்பாக இருக்கும். மேலும் பாம்பு, விஷ ஜந்து உங்களிடம் நெருங்காது.
18. **மலை தாங்கி தாயத்து ரூ.5000/-** தாயத்து அணிந்த அன்றே நீங்கள் சாதாரணமாக 20 கிலோ தூக்குபவர் என்றால் எளிதாக 50 கிலோ தூக்குவீர்கள். உடல் வலி நீங்கி எதையும் சமாளிக்கும் ஆற்றல், மன பலம், உடல் நலம் பெருகும். விளையாட்டு வீரர்களுக்கு மிகவும் உகந்தது. மிகவும் சிறப்பான கிடைக்காத அரிய அபூர்வ மூலிகை.
19. **சர்வ வசிய மாயூரா சிகை தாயத்து ரூ.5000/-** இதனை அணிவதால் கணவன்-மனைவி வசியம், ஆண்-பெண் வசியம், ராஜவசியம், ஜனவசியம், தனவசியம், சகல வசியங்களும் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.
20. **யானை வணங்கி ரூ.10,000/-** இதன் மேல் மஞ்சள், சந்தனம் தடவி வீடு அல்லது வியாபார பூஜையில் வைப்பதால் வியாபார, தொழில் விருத்தி, கடன் தொல்லை நீங்கி செல்வச் செழிப்பு உண்டாகும்.
21. **ஏர் அழிஞ்சில் மூலிகை குச்சி ரூ.5000/-** விரும்பியவரை நேரில் வரவழைக்கும் அபூர்வ மூலிகைக் குச்சி, இதன் விதை கீழே விழும்போதே மரத்தில் ஒட்டிக்கொள்ளும் வசியத்தன்மை உடையது காலை, இரவு உச்சத்தலை முதல் உள்ளங்கால் வரையில் விரும்பியவரை நினைத்து தடவ வேண்டும்.
22. **ஏறுசிங்கி ரூ. 10000/-** 21 இன்ச் மூலிகையின் மேல் மஞ்சள், சந்தனம் தடவி மஞ்சள் பட்டுத்துணியில் சுற்றி உங்களது வீடு அல்லது வியாபார பூஜையில் வைத்து வியாபார, தொழில் முன்னேற்றம் ஏற்படும். கடன் பிரச்சினைகள் விலகி செல்வச் செழிப்பு உண்டாவது நிச்சயம்.
23. **நினைத்ததை நடத்தும் நத்தைச் சூரி தாயத்து ரூ.15,000/-** எதைச் சொன்னாலும் அதனைச் செய்யும் நத்தைச் சூரி சித்தர்கள் வாக்கு உங்கள் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.
24. **ஆதி அற்புத சர்வலோக வசிய மூலிகை தங்க தாயத்து ரூ.33,000/-** இந்த தாயத்தைத்தான் எல்லா சித்தர்களும் அணிந்து எல்லா சித்தும் செய்தார்கள். இதனை கழுத்தில் அணிந்த அன்று முதல் ஆயுள் வரையில் சந்தோஷம், சகல வசியம், தொழில் வெற்றி, பண வரவு, ஆரோக்கியம் போன்ற சகலமும் உண்டாகும்.

- நம்பிக்கையும், விருப்பம் இருந்தால் மட்டுமே நல்லதே நடக்கும். உங்களது பிரச்சினைக்கு ஏற்ப பொருட்களின் விபரம் பயன், பலன், விலை விபரம், பொருட்களை வாங்கும் விபரம் அனைத்தும் தெள்ளத் தெளிவாக உள்ளது. பொருள் வாங்கும்போது மீதி விபரம் தெள்ளத் தெளிவாக சொல்லப்படும். தேவையில்லாத கேள்விகளுக்கு கண்டிப்பாக பதில் இல்லை.
- ஜோதிடமோ, ஆலோசனையோ சொல்வது கிடையாது.
- நம்பிக்கையும், விருப்பம் இருந்தால் போன் செய்துவிட்டு நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். அல்லது பொருளின் விபரம், உங்களின் தெளிவான முகவரி, செல் நம்பருடன் மணி ஆர்டர் ஞானகுரு என்ற பெயருக்கு அனுப்பி வைக்கவும். அல்லது R.GNANASEKARAN என்ற பெயருக்கு சென்னையில் மாற்றத்தக்க டிமாண்ட் டிராப்ட் எடுத்து ஞானகுரு விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். பணம் கிடைத்தவுடன் பொருள் கூரியரில் அனுப்பி வைக்கப்படும்.

முன் அனுமதிக்கும் தொடர்புக்கும் : **95002 19209**

## ஜெயா TV புகழ் 'பரிகாரச் செம்மல் சித்தர் ஞானகுரு

பியூட்டி மூன் லாட்ஜ், பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, டவ்ட்டன்
புரசைவாக்கம், சென்னை – 600 007. ( டவுட்டன் சிக்னல் அருகில் )

குறிப்பு: எமது 'அபூர்வ மூலிகைப்பொருட்களை' 7.9.2014 திண்டுக்கல், 14.9.2014 பாண்டிச்சேரியில், 21.9.2014 திருநெல்வேலியில் விருப்பமுள்ளவர்கள் முன்பதிவு செய்து நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

# கடகம்

(புனர் பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)

கடக இராசி நண்பர்களே கால புருஷ தத்துவத்தின்படி 4வது இராசி கடகம். சந்திரனின் ஆட்சி வீடு கடகம். குருவின் உச்ச வீடு கடகம். செவ்வாயின் நீச்ச வீடு கடகம். இது ஒரு நீர் இராசி. இதயத்தைக் குறிக்கின்ற இராசி கடகம்.

பல்லாயிரக் கணக்கான நட்சத்திரக் கூட்டத்தில் வானவெளியில் நண்டு போலக் காணப்படும் நட்சத்திரத் தொகுதியே கடகம் என்கிறோம். 12 இராசிகளில் அத்தனை ஈர்ப்பு சக்தியையும் வசீகரத்தையும் தன்னிடத்தேக் கொண்டது இது தான். இரட்டைப் படை இராசி பெண் இராசி ஆகும். சந்திரன் தான் கடகத்தை ஆட்சி செய்கின்றார். புனர்பூச நட்சத்திரத்தின் 4ஆம் பாதமும், பூசமும் ஆயில்யமும் இதற்குள் அடங்கும்.

நண்டு கொழுத்தால் வளையில் தங்காது என்பார்கள். அதனால் கொஞ்சம் திறமை இருப்பதுபோல நினைத்தாலே போதும், இரண்டு வருடங்கள் ஒரு கம்பெனியில் வேலை பார்த்தாலே போதும் அந்த அனுபவத்தை வைத்து சொந்தமாக ஏதேனும் செய்யலாமா என்ற சிந்தனை ஓடும். வேலைக்குச் சேர்ந்த சில நாட்களிலேயே அலுவலகத்தை ஆளுமை செய்ய நினைப்பீர்கள்.

சந்திரன் கிட்டத்தட்ட 2¼ நாட்களில் ஓர் இராசியைக் கடந்து விடுவார் அது போலவே உங்களையும் செயல்படுத்துவார். பேச்சிலும் செயலிலும் துரிதத்தைக் கூட்டியபடியே இருப்பார். நண்டானுக்கு இடம் கொடேல் என்ற ஜோதிட பழமொழியும் உண்டு. ஏனெனில் எதில் நுழைந்தாலும் உங்கள் அதிகாரத்தையும் ஆளுமையும் நிலை நிறுத்துவதிலேயே குறியாக இருப்பீர்கள். அந்த அதிகாரத்தில் உள்ளவர்களை வலுவிழக்கச் செய்வீர்கள். பத்தாம் இடத்திற்குரிய ஜீவன ஸ்தானத்திற்கு அதிபதியாக மேஷ செவ்வாய் வருகிறது உங்களின் பிரபல யோகாதிபதியாகவும் செவ்வாய் இருக்கிறது. எனவே கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறுவதெல்லாம் உங்களுக்கு பிடிக்காது ஒன்று பெரிய பதவி அல்லது சொந்த வியாபாரத்தில் பெரிய வெற்றி என்றுதான் போவீர்கள்.

**மதிப்பெண்கள் 60/100**

சனி பகவான் திருக்கணிதப்படி 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8:54 மணிக்கு துலாம் இராசியில் இருந்து விருச்சிக இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். வாக்கியப்படி 16—12—2014 அன்று பெயர்ச்சி ஆகிறார்( திருநள்ளாறு விஷேசம்).

இதுவரை உங்கள் இராசிக்கு 4ஆம் இடத்தில் சனி சஞ்சரித்து அர்த்தாஷ்டமச் சனியாக இருந்து அல்லல்களை அதிகம் கொடுத்திருக்கலாம். இப்பொழுது அந்த நிலை மாறி வரப்போகிறது. எனவே, உங்கள் காட்டில் இனி பண மழைதான். பஞ்சம சனியின் ஆதிக்கமாக இப்பொழுது வருவதால், அச்சமில்லாத வாழ்க்கை உங்களுக்கு நிச்சயமாக அமையும்


இராசிக்கு 5ஆம் இடத்தில் சனிபகவான் இருக்கும் இந்த மூன்று ஆண்டுகளிலும் நீங்கள் கவனமாக இருப்பது நன்மை தரும். எந்த ஒரு விஷயத்திலும் தகுந்த முடிவு எடுக்க முடியாத திணறல் இருக்கக்கூடும். சில முக்கியமான திட்டங்கள் சரிவர நிறைவேற்றப்படாமல் அரை குறையாக நிற்கும். வீண் வக்குவாதங்கள் சிறு சண்டை, தகராறுகள், போன்றவை ஏற்படக்கூடும் ஆதலால் மிகவும் கவனமாக இருப்பது அவசியம். எதிர்பாராத திடீர் செலவுகள் ஏற்பட்டு அதனால் சேர்த்துவைத்த பணம் கரையக்கூடும். கடுமையாக உழைக்கவும் வேண்டி இருக்கும். எதிர்பாலினத்தாரோடு பழகுவதில் கவனம் தேவை. அவர்களால் பொருள் செலவு ஏற்படலாம். சாதகமாக எந்த பணியும் நடை பெறாத சூழ் நிலையைக் கண்டு அவ்வப்போது மனக் கவலை உண்டாகலாம்.பிள்ளைகள் உடல் நலத்தில் கவனம் தேவை. அவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. எந்த ஒரு காரியமும் உடனடியாக நிறைவேறாமல் மெத்தனமாக நடக்கும்.

5இல் இருந்துக் கொண்டு உங்கள் இராசிக்கு 2, 7, 11 ஆகிய இடங்களைப் பார்க்கப்போகிறார். இதன் விளைவாக, வாக்கு, தனம், குடும்பம், களத்திரம், புதல்வர்கள், பொருளாதாரம், உடன் பிறப்பு, இளைய சகோதரம், விலகிச் சென்ற சொந்தங்கள், தொழிலில் வரும் இலாபம், இடமாற்றங்கள், எதிர்பாராத பயணங்கள் ஆகியவற்றில் எல்லாம் நல்ல மாற்றங்களையும், திடீர் திருப்பங்களையும்

கொடுக்கப்போகிறது. உங்கள் இராசியைப் பொறுத்த வரை 8, 9க்கு அதிபதியாக விளங்குகிறார்.

### சனிப்பெயர்ச்சி பார்வைப் பலன்கள்:

உங்கள் இராசிக்கு பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை 2, 7, 11 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. அதிலும் 7, 8க்கு அதிபதியாக சனி விளங்குகிறார். சப்தம ஸ்தான அதிபதியான சனி பகவான் 2, 11 ஆகிய இடங்களைக் பார்க்கும் பொழுது, வள்ளலாக மாறி அள்ளிக் கொடுக்கப் போகிறார்.




### 2ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

குறிப்பாக, வாக்கு, தனம், குடும்பம் ஆகிய ஸ்தானங்களைப் பார்ப்பதால் அதாவது, 2ஆம் இடத்தை சனி பார்ப்பதால், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளுக்கு வள்ளல்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். குடும்பத்திலுள்ள குழப்பங்கள் அகல முக்கிய புள்ளிகள் முன்வந்து உதவுவர்.

### 7ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

சப்தம ஸ்தானத்தை சனி பார்ப்பதால், வீட்டில் கெட்டிமேளம் கொட்டுகிற வாய்ப்பு உருவாகப் போகிறது. சனி பார்த்தால் எப்படி கல்யாணம் நடக்கும்? என்று நீங்கள் நினைக்கலாம். அஷ்டமாதிபதியான சனி சப்தம ஸ்தானத்தைப் பார்க்கும்பொழுது குடும்பத்தில் சுபச் செலவுகள் ஏற்பட வேண்டும் அல்லவா?

### 11ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

இலாப ஸ்தானத்தைப் பார்க்கும் சனியால் இலாபம் பெருகும். உதிரி வருமானங்கள் வந்து சேரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு தடைபட்ட சலுகைகள் தானாகவே கிடைக்கும். கடல் பயண வாய்ப்புகள் கைகூடலாம்.

### சனி பகவான் 2.11.2014 முதல் 28.11.2014 வரை விசாகம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

குருவின் நட்சத்திரமான விசாகத்தில் சனி சஞ்




அகத்திய ஜோதிட விஞ்ஞானி
பி.எஸ். தேவராஜ்

**அகத்தியர் சித்தா மூலிகை மருத்துவம்**

முற்றிலும் மாறுபட்ட சித்த மருத்துவ முறையில் பத்தியம் இல்லாமல் குறைந்த கட்டணத்தில்.
50 ஆண்டு அனுபவம் மிக்க சித்த மருத்துவ மாமணி இரா.சுப்பிரமணியம் அவர்களால்
குறைந்த கட்டணத்தில் நிறைந்த மருத்துவம் சேவை புரிகிறார்.

**குடியை நிறுத்த!**



Dr.இரா. சுப்பிரமணியம்
அரசு பதிவு பெற்ற
மருத்துவர் பதிவு எண்: 1794

**குடிப்பவருக்கு தெரியாமல் கொடுக்கலாம்**

**கை, கால், மூட்டு வலிகளை முற்றாக நீக்கி உடலுக்கு உரம் சேர்த்து மேனி எழிலை மேம்படுத்த சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது. நவமூலம், சொரியாசிஸ், நீரிழைவு, ஆண்மை குறைவு, ஆஸ்துமா. பெண்களுக்கு கர்ப்பப்பை கோளாறுகளை நீக்கி கர்ப்பம் தரிக்க சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.**

ஆண்மை சக்தி பெருக, யாத்திரைக்கு இன்ப மாத்திரை ஒன்று **ரூ.5/**

**பைல்ஸ் மற்றும் சர்க்கரை நோய்க்கு சிறப்பு சிகிச்சை**

**பெண்கள் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் நிரந்திர தீர்வு காணப்படும்.**

நெ. 13, எ. முத்தையப்பர் தெரு, செனாய் நகர், சென்னை - 600 030.
(பச்சையப்பன் கல்லூரி பின்புறம், நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் அருகில்)

**போன்: 044 - 2668 0381. செல்: 99403 42800**

சரிக்கும் சமயம் தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். தொழில் வியாபார விரிவாக்கம் குறித்து உடனடியாக முடிவு எடுக்கமுடியாத நிலை இருக்கும். தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் நிறைவேற்ற முடியாமல் இழுபறியான நிலை காணப்படும். பழைய பாக்கி வசூல் தாமதப்படும். எதிர்பார்த்த நிதிஉதவி சரியான நேரத்தில் கிடைக்காமல் அதனால் ஒரு சில பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களுடன் கலந்து ஆலோசித்து செயல்படுவது தொழில் முன்னேற்றத்திற்கு உதவும்.

### சனி பகவான் 29.11.2014 முதல் 26.12.2015 வரை அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

சனியின் நட்சத்திரமான அனுசத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் பூர்வ புண்ணிய புத்திர ஸ்தானம் எனப்படும் 5ஆம் இடத்தில் சனி பகவான் சஞ்சாரம் இருப்பதால் பிள்ளைகளின் கல்வியில் மெத்தனப்போக்கு காணப்படும். கவனமாக படிக்கவைப்பது அவசியம். இதே போல் பிள்ளைகளின் வேலை, திருமணம் ஆகியவையும் எதிர்பார்த்தபடி நடக்காமல் தாமதமாகலாம். பிள்ளைகளுக்கு அறிவுரைகள் கூறும்போது நிதானம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டு அதனால் மனவருத்தங்கள் ஏற்படலாம்.



### சனி பகவான் 27.12.2015 முதல் 24.01.2017 வரை கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனி சஞ்சரிக்கும் இந்தக் காலம் வழக்கத்தைவிட கல்வியில் கூடுதல் நேரம் ஒதுக்கி பாடங்களை படிக்க வேண்டி இருக்கும். கவனத்தைச் சிதறவிடும் விஷயங்களில் இருந்து ஒதுங்கி இருப்பது நல்லது. சகமாணவர்களுடன் சண்டை வீண் பிரச்சனை ஏற்படாத விதத்தில் பழகுவது நல்லது. கல்விக்கான செலவு கூடலாம். திட்டமிட்டபடி படிக்க முடியாத நிலை ஏற்படலாம். எனவே கிடைக்கும் நேரத்தில் பாடங்களை படித்துவிடுவது நல்லது.

**தொழிலாளர்கள்:** 5இல் உலவும் சனியால் வியாபாரத்தில் மந்த நிலை நிலவுவதால் வருமானமும் குறைய வாய்ப்புண்டு. வெளியூர் வாசம் நிகழும். தீயோர் நட்பால் அவதியுற நேரும். கூட்டுத் தொழிலில் பல பிரச்சினைகள் உருவாகும். அரசாங்கத்தின் மூலம் தண்டனை பெறும் சூழலும் உருவாகும்.

**பணியாளர்கள்**: 5இல் உலவும் சனியால் வேலை இன்றி இருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். வேலையில் இருந்து வந்த தடைகள், திருப்தியின்மை போன்றவை அடியோடு மறையும். வேலையில் புதிய தெம்பு பிறக்கும். வம்பு நீங்கும். வழக்கு மாறும். மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். பதவி உயர்வு கிடைக்கும். சிலர் அதிகார அந்தஸ்துக்கு உயர்த்தப்படுவர்.

**கலைஞர்கள்:** 5இல் உலவும் சனியால் சாதனை வீரராக வலம் வருவார்கள். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கப் பெறுவர். இது வரை கிடைக்காத பாராட்டு, விருது போன்றவை வரும். நல்ல வருமானம் கிடைப்பதுடன், பல பொறுப்பான பதவிகளும் உங்களுக்கு கிடைக்கும். வாழ்க்கையில் நல்ல வசதி வாய்ப்புகள் ஏற்படும்.

**அரசியல்வாதிகள்:** 5இல் உலவும் சனியால் கடினமாக உழைக்க வேண்டிஇருக்கும். நாணயம் மிக்கவர் என்று பெயரெடுப்பீர்கள். துன்பம் ,தொல்லை ,வறுமை அனைத்தும் நீங்கி வளம் பெறுவீர்கள்.

**மாணவர்கள்:** சனி 5இல் சஞ்சரிப்பதால் கல்வி மிகச் சிறப்பானதாக அமையும். விரும்பிய பாடம் கிடைக்கப்பெறுவீர்கள். படிப்பில் பளிச்சிடுவீர்கள். சிலர் விரும்பியபடி வெளிநாடு சென்று படிக்கும் யோகம் பெறுவர். நல்ல வாய்ப்புகள் கிட்டும்.

**விவசாயிகள்:** சனி 5இல் சஞ்சரிப்பதால் அதிக முதலீடு பிடிக்கும் விவசாயம் எதையும் செய்ய வேண்டாம். கடுமையாக உழைக்க வேண்டியது இருக்கும்.

**பெண்கள்:** சனி 5இல் சஞ்சரிப்பதால் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். வாக்கில் கவனம் தேவை. சிக்கனம் தேவை. ஆடம்பரப்பொருள் வாங்குவதை தவிர்க்கவும். பிறந்த வீட்டில் இருந்து வெகுமதிகள் வரலாம். வேலைக்குச் செல்லும் பெண்கள் நல்ல முன்னேற்றம் அடைவர். சிலர் புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பைப் பெறுவர்.

### சனி வக்கிர பலன்கள்:

**15.03.2015** முதல் **02.08.2015** வரையும் **26.03.2016** முதல் **12.08.2016** வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ்சரிக்கிறார்.



# வெள்ளை தழும்புகள்

எமது சிகிச்சை ஆரம்பித்த 20 மணி நேரத்தில் தழும்பின் நிறம் மாறத் தொடங்கி தோலின் அசல் நிறத்தை அடைந்து விடுகிறது. ஆயிரக்கணக்கானோர் பயனடைந்துள்ளனர். நீங்களும் நோயின் முழு விவரத்தையும் எழுதி ஒரு முறை அவசியம் பரிச்சித்து பார்க்கவும். மருந்து விலை ரூ.510/- பெற விரும்புவோர் உடன் நேரில் வரவும் அல்லது அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.

# ரகசிய நோய் மருந்து

எமது மருந்து உபயோகித்தால் நித்திரையில் ஸ்கலிதம், சிறு நீர், மலம் கழிப்பதற்கு முன், பின் சக்தி வீணாதல், சிறுநீர் சம்பந்த நோய், சீக்கிர ஸ்கலனம், உயிர் அணு குறை, கனோரிய ஸிபிலிஸ் போன்ற நோய் அடியோடு அழிக்கப்பட்டு நிரந்தரமாக குணமாகிவிடும். உடலில் ஒப்பற்ற சக்தி ஓட்டம் பெற்று பாலுணர்ச்சியில் முன்னேற்றம் காணப்படும். ஆயிரக்கணக்கானோர் பயனடைந்ததாகும். பெற விரும்புவோர் நோய் விவரம் வயதுடன் எழுதவும்.

**மருந்து ஒரு கோர்ஸ் விலை ரூ. 625/—** **முழு கோர்ஸ் ரூ. 900/—**

**ஆண்மை குறைபாட்டை போக்கும் அற்புத இயந்திரம் இலவசம் - புத்தம் புதிய கண்டுபிடிப்பு**

திருமணத்திற்கு முன் அல்லது பின் ஏற்பட்ட ஆண்குறி தளர்ச்சி, நரம்பு வீரியமின்மை அல்லது வளர்ச்சியின்மை, மெலிவு, வளைவு, முதலான குறைபாடுகள் இருந்தால் எமது புத்தம் புதிய கண்டுபிடிப்பில் உருவான ஆண்குறி குறைபாட்டை போக்கும் அற்புத இயந்திரத்தின் உபயோகத்தால் எப்பேர்பட்ட எவ்வயதுடையோரின் ஆண்குறி குறைபாடும் நிச்சயம் நிரந்தரமாக குணமடைந்துவிடும். இந்த இயந்திரம் ஒரு மெசின் போன்றதாகும். இதை உபயோகிப்பது மிக மிக எளிதாகும். இதன் உபயோகத்தால் 100% பயன் கிட்டுவது உறுதியாகும். விளம்பரத்திற்காக இந்த இயந்திரம் இலவசம். இன்றே அஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு இயந்திரம் பெற்று பயனடைவீர். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**VAIDYAR N.RAMESH NAIDU**
**PAKKAM DHARNAMPET-GUDIYATHAM, (VELLORE) 632601.**
**CELL-9865415652, 9994486669**


உங்கள் இராசிக்கும் 7,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவான் வக்ரம் பெறும்போது, எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. உடல் நலத்திற்காக ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். நண்பர்களை நம்பி ஏமாற்றமடையாதிருக்க விழிப்புணர்ச்சியுடன் செயல்படுவதே நல்லது. கொடுத்த வாக்கை காப்பாற்றுவதில் சிரமம் ஏற்படலாம். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் கணவன் மனைவிக்கிடையே மனஸ்தாபங்கள் ஏற்பட்டு நீங்கும். பார்ட்னர்களுடன் விட்டுக்கொடுத்து செல்வதும் நல்லது. தொழில் வியாபார இலாபம் வரத்தில் தாமதம் இருக்கும். வழக்கு விவகாரங்களில் ஈடுபடாமல் சமாதானமாகப் போவது நன்மை தரும்.

### நட்சத்திரப் பலன்கள்:

**புனர்பூசம் 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள்:**

வாக்கினால் ஜீவனம் புரிபவர்கள் ஏற்றம் அடைவர். வாய்மொழிக் கடன் தீரும். சேமிப்பு வளரும். எனினும் யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போடவேண்டாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். தந்தை மூலம் தன இலாபம் உண்டு. கண் சம்பந்தமான உபாதைக்கு இடம் உண்டு. தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை.

**பூசத்தில் பிறந்தவர்கள்:**

தந்தை மூலம் தனஇலாபம் உண்டாகும். இஷ்ட தெய்வம். குலதெய்வம், என பிரார்த்தனைகளை செய்து முடிப்பீர்கள். மாமன் மைத்துனர் உறவு பலப்படும் சிலருக்கு திருமணம் கூடவும் இடமுண்டு. சிலரது காதல் கைகூடும். எதிர்ப்புக்கள் விலகும். எதிர் பாராத முன்னேற்றம் கிட்டும். கருப்பு மனிதரால் சகாயம் கிட்டும். ஏற்றுமதி, இறக்குமதி வாணிபம் சிறப்படையும். சிலர் தந்தையின் பணியை ஏற்பர். தர்மம் செய்ய ட்ரஸ்ட் அமைத்து அறப்பணிகள் செய்வீர்கள்

**ஆயில்யத்தில் பிறந்தவர்கள்:**

திருமணம் ஆகாதவர்கட்கு திருமணம் ஆகும். பிரிந்து வாழும் தம்பதிகள் இணைந்து வாழ இடமுண்டு. சிலருக்கும் கலப்புத் திருமணம் ஆகும். சிலர் கலப்பு திருமணம் காதல் திருமணம் என்று புரட்சி பாதையில் திரும்பவும் இடமுண்டு. புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். நல்ல பணியாட்கள் கிடைப்பதற்கு இடமுண்டு.

### பரிகாரம்:

கால பைரவரை தேய் பிறை அஷ்டமியில் வழிபடவும். பைரவர் கவசம் படிக்கவும். சகல தோஷங்களும் நீங்கி சந்தோஷமான வாழ்வுக்கு வழி வகுக்கும். இஷ்ட தெய்வங்கள் கஷ்டங்களைப் போக்குவர்




இராசி மண்டலத்தில் 5வதாக வருவது சிம்ம இராசி. சூரியனின் ஆட்சி மற்றும் மூலத்திரிகோண வீடு சிம்மம். சிம்ம இராசிக்காரர்கள் ஆண்மை தன்மை அதிகம் பொருந்தி ஆண்மகனுக்குரிய அத்தனை குணங்களுடனும் இருப்பார்கள். இந்த இராசியில் பிறந்த பெண்களும் ஆண்களைப் போன்று தைரியம் அதிகம் உள்ளவர்களாக இருப்பார்கள். எடுத்த காரியத்தை முடிக்கும் வரை ஓயாமல் உழைப்பார்கள்.

உருவத்தால் சிம்ம இராசிக்காரர்கள் பெண்களாக இருந்தாலும் செயலில் எண்ணத்தில் ஆண்களுக்கு நிகராக இருப்பார்கள். ஒரு முடிவு எடுத்துவிட்டால் அதை மாற்றிக் கொள்ள மாட்டார்கள். எடுத்த முடிவும் பெரும்பாலும் சரியான முடிவாகத்தான் இருக்கும். சுயமாக சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர்கள் ஆதலால் மற்றவர்கள் சொல்லி அவர்கள் பேச்சை கேட்டு நடப்பவர்கள் சற்று யோசிப்பார்கள்.

சிம்ம இராசியில் பிறந்தவர்கள் பெரும்பாலும் தர்ம காரியங்களுக்குச் செலவு செய்ய தயங்க மாட்டார்கள். நியாயத்திற்கு கட்டுப் பட்டவர்கள். அநியாயம் நடந்தால் தட்டி கேட்பவர்கள், குரல் கொடுப்பவர்கள். தர்மத்தில் இருந்து தவறாதவர்கள் தர்ம நெறி பிறலாதவர்கள். பெரிய மனிதர்களுக்கு உரிய எண்ணங்கள் சிம்ம இராசிக்காரர்களுக்கு நிறைய இருக்கும்.

சனி பகவான் திருக்கணிதப்படி 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8:54 மணிக்கு துலாம் இராசியில் இருந்து விருச்சிக இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். வாக்கியப்படி 16—12—2014 அன்று பெயர்ச்சி ஆகிறார்( திருநள்ளாறு விஷேசம்).


அர்த்தாஷ்டமச் சனியாக அமர்வதால் சின்ன சின்ன வேலைகளைக் கூட அலைந்து முடிக்க வேண்டிவரும். தவிர்க்க முடியாத செலவுகள் அதிகரிக்கும். மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். வீடு வாங்குவது, கட்டுவது கொஞ்சம் இழுபறியாகி முடியும். அதிக வட்டிக்கு கடன் வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது. எந்த சொத்து வாங்கினாலும் தாய்ப் பத்திரத்தை சரி பார்ப்பது நல்லது.

அரசு விஷயங்களில் அலட்சியம் வேண்டாம். புது வண்டியாக இருந்தாலும் கூட அடிக்கடி பழுதாகும். இரவு பயணங்களில் கவனம் தேவை. விலை உயர்ந்த பொருட்கள், தங்க ஆபரணங்களை இரவல் தரவும் வேண்டாம், பெறவும் வேண்டாம். குடும்பத்தில் கணவன் மனைவிக்குள் சந்தேகத்தால் அவ்வப்போது சண்டை சச்சரவுகள் வரத்தான் செய்யும். பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். தாயாருக்கு சிறு அறுவை சிகிச்சை செய்ய வேண்டி வரும். தாய்வழி சொத்துக்களில் சிக்கல்கள் வரக்கூடும். அரசின் அனுமதி பெறாமல் கூடுதல் தளங்கள் அமைத்து வீடு கட்ட வேண்டாம்.

கழிவுநீர் பிரச்சனை, மின்சார சாதனங்கள் பழுதடைதல், வேலையாட்கள் பிரச்சனையும் வந்துபோகும். எதிர்வீடு, பக்கத்து வீட்டுக்காரருடன் எந்த வம்பும் வேண்டாம். வழக்கில் தீர்ப்பு தாமதமாகும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்து காத்திருந்தவர்களுக்கு விசா கிடைத்து, அயல்நாட்டுப் பயணம் சாதகமாக அமையும். பிள்ளைகள் கொஞ்சம் செலவு வைப்பார்கள்.

### சனிப்பெயர்ச்சி பார்வைப் பலன்கள்:

உங்கள் இராசிக்கு 4ஆம் இடத்தில் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை இராசிக்கு 1, 6, 10 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் எல்லாம் மாற்றமடைகின்றன. அதிலும் 6,7க்கு அதிபதியாக சனி விளங்குகிறார்.




### ஜென்ம இராசியை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

ஜென்ம இராசியைச் சனி பார்ப்பதால், ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புகளைக் கொடுக்கலாம். `வரும் முன் காப்போம்' திட்டத்தை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நேரமிது. வாகனங்களில் செல்லும் பொழுதும் கூடுதல் கவனம் செலுத்துங்கள். அரசியல்வாதிகளுக்கு பொறுப்புகள் மாறலாம்.

### 6ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

7 மற்றும் 8க்கு அதிபதி சனி 6ஆம் இடத்தைப்

பார்ப்பதால், நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த உத்யோக உயர்வு இப்பொழுது வந்து சேரும். கடன் பாக்கிகள் வசூலாகும். பகையான நட்பு உறவாகும். சனிபகவான் உங்களின் 6ஆம் வீட்டை பார்ப்பதால் பணவரவு அதிகரிக்கும். பழைய பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள். மறைமுக எதிரிகளை இனங்கண்டறிந்து ஒதுக்குவீர்கள். நிலுவையிலிருந்த வழக்கில் நல்ல தீர்ப்பு வரும்.

சனிபகவான் 10ஆம் வீட்டை பார்ப்பதால் உத்யோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். வேலை மாறுவீர்கள். புதுப் பொறுப்புகளும் உங்களை நம்பி தரப்படும்.

### 10ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

10ஆம் இடத்தைப் பார்க்கும் சனியால், உங்கள் பெயரில் உள்ள தொழில்களையும், சொத்துக்களையும் மனைவி, மக்கள் மற்றும் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்கள் பெயருக்கு மாற்றலாமா? என்று நினைப்பீர்கள். திடீர் இடமாற்றம், ஊர் மாற்றங்கள் ஏற்படும். பங்குதாரர்கள் தங்கள் கணக்கு வழக்குகளை சரிபார்த்துக் கொள்வது நல்லது.




### சனி பகவான் 2.11.2014 முதல் 28.11.2014 வரை விசாகம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

குருவின் நட்சத்திரமான விசாகத்தில் சனி சஞ்சரிக்கும் சமயம் வேலையாட்களை முழுமையாக நம்பி பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர், மூலிகை வகைகளால் அதிக ஆதாயம் அடைவீர்கள். உத்யோகஸ்தர்களே சூழ்ச்சிகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். பணிகளை முடிப்பதில் அலட்சியம் காட்டாதீர்கள். மேலதிகாரிகள் உங்களைக் குறை கூறினாலும் அமைதியாக ஏற்றுக் கொள்வது நல்லது. முக்கிய பதிவேடுகளைக் கவனமாகக் கையாளுங்கள்.

### சனி பகவான் 29.11.2014 முதல் 26.12.2015 வரை அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

சனியின் நட்சத்திரமான அனுசத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் அலுவலக இரகசியங்களை வெளியிட வேண்டாம். உங்களை வழக்கில் சிக்க வைக்க சிலர் முயல்வார்கள். சம்பள பாக்கியை போராடிப் பெறுவீர்கள். ஏமாற்றங்களும் மறைமுக அவமானங்களும் அவ்வப்போது வந்து செல்லும். கடின உழைப்பால் பதவி உயர்வு, சம்பள உயர்வு பெறுவீர்கள். கணினி துறையினருக்கு பார்வைக் கோளாறு, தசைப் பிடிப்பு நீங்கும். புதிய சலுகைகள் கிடைக்கும். அரசியல்வாதிகளே! தலைமை உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்கும். தொகுதி நிலவரங்களை உற்றுநோக்குவது நல்லது.

### சனி பகவான் 27.12.2015 முதல் 24.01.2017 வரை கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனி சஞ்சரிக்கும் இந்தக் காலம் மாணவ மாணவிகள் விளையாட்டைக் குறைத்து, படிப்பில் அக்கறை செலுத்துங்கள். தெரியாதவற்றை வகுப்பாசிரியரிடம் கேட்டுத் தெரிந்துக் கொள்ளுங்கள். அலட்சியப்போக்குடன் கடைசி நேரத்தில் படிக்கும் பழக்கம் வேண்டாம்.

**தொழிலாளர்கள்:** 4இல் சஞ்சரிக்கும் சனியால் சிலர் தங்கள் வசிப்பிடங்களை மாற்றுவர். அடிக்கடி வீடு மாறுவார்கள். பயணங்களின்போது கவனமாக இருக்கவேண்டியது அவசியம். பயணத்தின்போது கைப்பொருள் தொலைந்துப் போக நேரும். சட்டவிரோதமான காரியங்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. இல்லையென்றால் வம்பு வழக்குகளில் சிக்கிக்கொள்ள நேரும். கணக்கு வழக்குகளை சரியாக வைத்துக்கொள்ளாவிட்டால், அரசாங்கத்தால் தொல்லைகள் வரும். முன்னேற்றத்துக்கான வழிவகையை தேட வேண்டும். நம்பிக்கையுள்ள நண்பர்கள், பெரியோர்கள் ஆலோசனையுடன் தொழிலில் முன்னேற்றம் காணலாம். குறைந்த முதலீட்டில் புதிய தொழில் ஆரம்பிக்கலாம். வரவு—செலவு கணக்கை சரியாக வைத்துக் கொள்ளவும்.

**பணியாளர்கள்:** 4இல் சஞ்சரிக்கும் சனியால் வேலைப்பளு இருக்கத்தான் செய்யும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளால், பிரச்சினைகளை சந்திப்பார்கள். யாரிடமும் கையூட்டுப் பெறுவதை தவிர்க்கவேண்டும். இல்லையென்றால் காவல்துறையிடம் சிக்கி அவமானப்பட நேரும். வெளிநாட்டுப் பயணம் ,வெளிநாட்டு வேலை வாய்ப்பு கிடைக்கும். யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம் முயற்சி செய்தால் இழந்த பதவியை மீண்டும் கிடைக்கப் பெறலாம். விரும்பிய இடத்துக்கு மாற்றல் கிடைக்கப்பெறலாம்.

**கலைஞர்கள்:** 4இல் சஞ்சரிக்கும் சனியால் வாய்ப்பு பெற கடும் முயற்சி எடுக்க வேண்டியிருக்கும். புகழ், பாராட்டு வந்து சேரும். சிலர் வெளிநாடு சென்று கலைநிகழ்ச்சிகளை நடத்தி வருவர்.

**அரசியல்வாதிகள்:** 4இல் சஞ்சரிக்கும் சனியால்

பதவியை தக்க வைத்துக் கொள்ளப் படாத பாடுபட வேண்டி வரும். வருமானமும் ஓரளவே கிட்டும். தலைமையின் அன்பைப் பெற வேண்டுமானால், பேச்சில் கவனமாக இருப்பதே நல்லது.

**மாணவர்கள்:** 4இல் சஞ்சரிக்கும் சனியால் கடின முயற்சி எடுத்து படிக்க வேண்டியிருக்கும். சக மாணவர்களிடம், நட்பு கொள்ளும் போது நல்லவர்களைத் தேர்ந்தெடுக்கவும். மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை.

**விவசாயிகள்:** 4இல் சஞ்சரிக்கும் சனியால் பண விரயம், பொருள் நஷ்டம் இவைகளைத் தவிர்க்க முடியாது. கடன் தவணை என்று செலுத்துகிற வகையில், வருமானத்தின் பெரும்பகுதியை இழக்க வேண்டி வரும். இதுதவிர வழக்கமான செலவுகளும் சேர்ந்துக்கொள்ளும். எனவே கடன், கைமாற்று, இவற்றை சமாளித்து சரிக்கட்டுவதே பெரிய சிக்கலாகவும் வேதனை தருவதாகவும் இருக்கும். இதுமட்டுமில்லாமல், பணத் தட்டுப்பாடு குறித்த கருத்து வேறுபாடுகளும்.,மனஸ்தாபங்களும், அவமானங்களும் ஏற்படும். வீடு, மனை மாடு—கன்றுகள் இவற்றைப் பராமரிப்பதும் கஷ்டமாகிவிடும். புதிய வழக்கு எதிலும் சிக்க வேண்டாம்.

**பெண்கள்:** 4இல் சஞ்சரிக்கும் சனியால் நினைத்தவரையே கைப்பிடிக்கும் திருமண யோகமும் உண்டாகும். பணம் கொடுக்கல்—வாங்கலிலும் சரளமான நிலை இருக்கும். எதிர்பாராத திடீர் உதவிகளும் கிட்டும். தொழில்—வியாபார ரீதியாக புதிய வாய்ப்புகள் தேடிவரும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புகளாலும் இலாபம் அமையும். உடல் ஆரோக்கியமும் சிறப்பாக இருப்பதால், எடுக்கும் காரியங்களை சிறப்பாக செய்து முடிப்பீர்கள் குடும்பத்தில் சிறப்பு பெறுவர். வேலைக்குச் செல்லும் பெண்கள் அதிக வேலைப்பளுவைச் சுமக்க வேண்டியிருக்கும்.

## சனி வக்கிரப் பலன்கள்:

**15.03.2015** முதல் **02.08.2015** வரையும் **26.03.2016** முதல் **12.08.2016** வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ்சரிக்கிறார்.

உங்கள் இராசிக்கும் 6,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவான் வக்ரம் பெறும்போது, இக்கால கட்டத்தில் எதிர்பார்த்திருந்த பணம் கைக்கு வரும். சொத்துப் பிரச்சனைக்கு நல்ல தீர்வு காண்பீர்கள். பெரிய மனிதர்களின் நட்பும் உதவியும் கிட்டும். அரசு காரியங்கள் தடையில்லாமல் முடியும். மனைவி வழியில் நல்ல செய்தி வரும். அவ்வப்போது குடும்பத்தில் சலசலப்பு, கடன் பிரச்சனை, வீடு பராமரிப்புச் செலவு, வாகன விபத்து, சிறுசிறு நெருப்புக் காயங்கள், வாயுக் கோளாறு வந்து நீங்கும்.

**மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்:**

தாயின் உடல்நிலையில் முன்னேற்றம் உண்டாகும். கருத்து வேறுபாடு மறைந்து அன்னையின் அன்புக்குரியவராகத் திகழ்வீர்கள். வீடு, வாகன வகையில் நல்ல அனுகூலமான சூழ் நிலையும், வளர்ச்சியும் காத்திருக்கிறது. தேவையான புதிய மாறுதல்களைச் செய்து மகிழ்வீர்கள். புத்திரர்களின் உடல்நிலை, கல்வி வளர்ச்சியில் அக்கறை தேவைப்படும். படிப்பில் சோம்பல், ஞாபகமறதி போன்ற பிரச்சனையை பிள்ளைகள் எதிர்கொள்வர். கடன் விஷயத்தில் கவனம் வைப்பது அவசியம். புதிதாக கடன்வாங்கும்போது ஒருமுறைக்கு இருமுறை யோசித்துச் செயல்படுங்கள். திருமண முயற்சியில் விடாமுயற்சி தேவைப்படும். சுபவிஷயங்கள் நடத்துவதில் உறவினர்களின் ஒத்துழைப்பு ஓரளவே கிடைக்கும்.

**பூரம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்:** குடும்பத்தில் கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்வது நன்மை தரும். எதிரிவிஷயத்தில் விழிப்புணர்வு தேவை. அக்கம்பக்கத்தினரோடு அளவாகப் பழகுவது பிரச்சனையைத் தவிர்க்க உதவும்.தந்தையின் உடல்நிலையில் அக்கறை செலுத்த நேரிடும். பூர்வீகச் சொத்தில் தேவையில்லாத பிரச்சனை தலைதூக்கும். உயர்கல்வி பெறுவதற்கான யோகம் உண்டாகும். தடைபட்ட கல்வியைக் கூட தொடர்வதற்கான வாய்ப்பு ஏற்படும். தொழிலதிபர்கள் தொழிலில் சற்று மந்தகதியை எதிர்கொள்வர். கடின உழைப்பும், விடாமுயற்சியும் இருந்தால் மட்டுமே வளர்ச்சி பெற முடியும். பணியாளர்கள் சகபணியாளர்களால் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**உத்திரம் நட்சத்திரம் 1ஆம் பாதத்தில் பிறந்தவர்கள்:**

அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்கள் கவனக்குறைவான செயல்களால் பணியில் குளறுபடியும், தாமத சூழ்நிலையும் எதிர்கொள்வர். பொறுப்புணர்வுடன் செயல்படுவதால் மட்டுமே நிர்வாகத்தின் கண்டிப்பு, ஒழுங்கு நடவடிக்கையில் இருந்து தப்பலாம். சிலர் ஒழுங்கு நடவடிக்கை, சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஆகிய எதிர்மறை பலன்களுக்கு உள்ளாவர். குழுவாக பணி செய்பவர்கள் கருத்துபேதம் வராமல் செயல்படுவதால் மட்டுமே பணி இலக்கு சீராக நிறைவேறும். புதிய வீடு, வாகனம் வாங்குகிற முயற்சிக்கு எதிர்பார்த்த நிதியுதவி கிடைக்கும்.

## பரிகாரம்:

சூரிய உதயத்தில் சூரிய நமஸ்காரம் செய்யவும். ஆதித்ய ஹிருதயம் பாராயணம் செய்யவும். தோஷங்கள் விலகுவதுடன் துன்பங்கள் யாவும் நீங்கி இன்பமான வாழ்வுக்கு வழிவகுக்கும். ஆசைகள் யாவும் நிறைவேற அனுதினமும் ஆண்டவனின் அடி பனியுங்கள்.




இராசி மண்டலத்தில் 6வது இராசி கன்னி. கன்னி இராசியினர் சங்கீதத்திலும், புகைப்படத் துறையிலும் சிறந்தவர்கள். படிப்பில் ஆர்வம் அதிகம். இவர்கள் விழிப்புணர்வோடும், கவனிப்போடும் இருப்பதனால் எழுத்தாளர்களாகவும் ஆவார்கள். உதவி செய்யும் குணமுடையவர்கள். வழக்கறிஞராகவும், மருத்துவராகவும், செய்தி வாசிப்பவர்களாகவும் வெற்றி பெறுவார்கள். இவர்கள் கஷ்ட நேரத்தில் உதவி செய்து மகிழ்ச்சியடைவர். நூலகப் பணியிலும், யோகத்திலும் ஈடுபடுவர். வேலை செய்யும் உணர்வுடையவர்கள்.


கன்னி இராசியின் அதிபதி புதன். எப்போதும் உழைப்பு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அனைத்திலும் தாமே வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் கொண்டு செயல்படுவீர்கள். இராசிநாதன் புதன் என்பதால் பேச்சிலேயே அனைவரையும் கவர்ந்து இழுக்கும் குணம் கொண்டு திகழ்வீர்கள். செய்கின்ற தொழில் அசாத்திய சாதனை புரிய வேண்டும் என்ற நோக்கில் அந்த உணர்வோடு ஆர்ப்பரித்து செயல்படும் கன்னிஇராசி நண்பர்களே, கன்னி இராசியில் பிறந்த நீங்கள் நல்ல நடத்தை மற்றும் பழக்க வழக்கங்கள் அனைத்திலும் முதலிடம் பெற்றுத் திகழ்வீர்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. கல்வி துறையிலும் சரி, கலைத்துறையிலும் சரி, மொழி நடையிலும் சரி உங்களுக்கே முதலிடம் என்றால் மிகையாகாது. சகோதர சகோதரிகளிடம் மிகுந்த பற்றும், மதிநுட்பம் அதிகம் பெற்ற நீங்கள் சோதனைகளையும் சாதனைகளாக மாற்றி வெற்றி பெறுவீர்கள். கடல் கடந்து போகும் வாய்ப்புகள் தேடி வரும். நேர்வழியில் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு செயல்படுவீர்கள் தாயின் மீது அதிக பற்றும் பாசமும் கொண்டு திகழ்வீர்கள்.

சனி பகவான் திருக்கணிதப்படி 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8:54 மணிக்கு துலாம் இராசியில் இருந்து விருச்சிக இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். வாக்கியப்படி 16—12—2014 அன்று பெயர்ச்சி ஆகிறார்( திருநள்ளாறு விஷேசம்).

இந்த இராசிக்காரர்ர்கள் ஏழரை சனியில் இருந்து முழுவதுமாக விடுபடப் போகிறீர்கள். இனி வருகின்ற காலமெல்லாம் உங்களுக்குப் பொற்காலம்தான். கடந்த ஏழரை ஆண்டுகளாக நீங்கள் பட்ட கஷ்டங்கள் நஷ்டங்கள் கொஞ்சம் நஞ்சமல்ல அதுவும் கடந்த இரண்டரையாண்டுகளில் நீங்கள் அனுபவித்த தொல்லைகள் ஏராளம் என்றே சொல்ல வேண்டும். இப்போது அமோகமான நற்பலன்களை அனுபவிக்கப் போகிறீர்கள். எனவே இனி உங்களுக்கு இரண்டரை ஆண்டுகாலம் ஏற்றமான யோகமான காலமாகும். இதுவரை தனஸ்தானமெனும் 2ஆம் இடமான துலாம் இராசியில் சஞ்சரித்துக் கொண்டிருந்த சனிபகவான் இப்போது தைர்யஸ்தானமெனும் 3ஆம் இடமான விருச்சிக இராசிக்கு பெயர்ச்சியாகிறார். 3ஆம் இடமென்பது சனிக்கு மிகமிக உன்னதமான உகந்த இடத்தில் சஞ்சரிக்கும் உயர்ந்த 3ஆம் இடச்சனி முன்னேற்றங்களைத் தங்கு தடையின்றித் தருவார். மிகப்பெரிய திருப்பத்தை ஏற்படுத்தித்தருவார். ஒருவித இராஜயோக வாழ்க்கையைத் தருவார்

### சனிப்பெயர்ச்சி பார்வைப் பலன்கள்:

உங்கள் இராசிக்கு 3ஆம் இடத்தில் சகோதர ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை இராசிக்கு 5, 9,12 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் எல்லாம் மாற்றமடைகின்றன.




### 5ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

குல தெய்வ ஆசி கிட்டும். பிள்ளைகளால் பெருமை ஏற்படும். பூர்வீக சொத்தில் இலாபம் ஏற்படும். செய்தொழில், வியாபாரம், வணிகம், ஜீவனம் எதுவானாலும் வெற்றி பெறும். கலக்கம் விலகும். மனதில் உறுதியும் செயலில் ஒழுங்கும் இருந்தால் சுறுசுறுப்பாகவும், கணிசமான ஆதாயமும் கிட்டும். சிலர் வெளிநாடு போகவும் வாய்ப்பு உண்டு பணவசதி, உயரும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின்

உதவியால் புதிய பதவி உயர்வு, தற்காலிக வேலையில் உள்ளவர்களுக்கு அது ஸ்திரமாகும்.

**9ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:**

தெய்வ ஆசி கிட்டும். தந்தை வழியில் ஆதாயம் ஏற்படும். எதிலும் நிதானமாகவும் பொறுமையாகவும் இருப்பது நலம். பெரியோர்களின் ஆலோசனைகளைக் கேட்டு அதன்படி நடந்தால் வெற்றி கிட்டும். தகுந்த மனிதர்களின் உதவியைக் கொண்டு பல காரியங்களைச் சாதிக்கலாம். தெய்வ அனுக்கிரகத்தைக் வேண்டினால் உடனடியாக கிட்டும். எதிர்பாராமல் வாழ்க்கையில் ஏற்படும் தங்குத்தடைகளைத் தாண்டி வர முயற்சிக் கொள்ள வேண்டும். கடன் சுமையால் ஏற்பட்ட பெரும்பாதிப்புகள் நீங்கும்.




**12ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:**

வீண் விரையங்கள் ஏற்படலாம். எந்த விஷயமானாலும் அலைச்சல், திரிச்சல், அலைக்கழிப்பு, பணச்செலவு மனச்சோர்வு, அசதி தடை தாமதம் ஆகியவைகளுக்கு பின் தான் அனுகூலமாகும். ஒரு சிலருக்கு எதிர்பாராத வகையில் கணிசமான பெருந்தொகை செலவாகலாம். சிலருக்கு இடமாற்றம் தவிர்க்க முடியாது. வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் நடக்கும் .தெய்வீகத்தில் மனம் ஈடுபாடு அதிகரிக்கும். முடிந்த அளவு சிக்கனத்தைக் கடைபிடிப்பது நல்லது.

**சனி பகவான் 2.11.2014 முதல் 28.11.2014 வரை விசாகம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

குருவின் நட்சத்திரமான விசாகத்தில் சனி சஞ்சரிக்கும் சமயம் தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். தொழில் போட்டியாளர்கள் கூட உங்களின் திறமை உணர்ந்து சரண் அடைவர். கொடுக்கல் வாங்கல் சிறப்பாக இருக்கும். உங்களின் திறமை பலவிதத்தில் மேம்பட்டு இருக்கும். டிசம்பருக்கு பிறகு புதிய வியாபாரத்தை ஆரம்பிக்க அதிர்ஷ்டகரமான சூழ்நிலை உருவாகும். அரசு வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சுய தொழில் துவங்க நினைப்போருக்கு இது தகுந்த காலகட்டம். கூட்டாளிகளிடையே ஒற்றுமை பலப்படும்.

**சனி பகவான் 29.11.2014 முதல் 26.12.2015 வரை அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

சனியின் நட்சத்திரமான அனுசத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் கணவன்—மனைவி இடையே கருத்து வேறுபாடு மறைந்து ஒற்றுமை பலப்படும். மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உறவினர்களிடம் சுமூக நிலை ஏற்படும். புதிய உறவினர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். பெண்கள் ஆதரவுடன் இருப்பர். பகைவர்களின் தொல்லை மறையும். பெரியோர்களின் ஆதரவும், ஆலோசனையும் தக்க சமயத்தில் கிடைக்கும். நண்பர்களும் தானாக முன்வந்து உதவி செய்ய முற்படுவர். விரும்பிய வகையில் நகை ஆபரணம் வாங்கி மகிழலாம்.

**சனி பகவான் 27.12.2015 முதல் 24.01.2017 வரை கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனி சஞ்சரிக்கும் இந்தக் காலம் வழக்கத்தை விட உடல்நலம் சிறப்பாக இருக்கும். மருத்துவச் செலவு பெருமளவில் குறையும். கலைஞர்கள் புதிய ஒப்பந்தம் மூலம் வருமானம் கிடைக்கப் பெறுவர். மக்கள் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வீர்கள். மாணவர்கள் கல்வி மிகச் சிறப்பானதாக அமையும். விரும்பிய பாடம் கிடைக்கப் பெறுவீர்கள். படிப்பில் முதன்மையானவர்களாகப் பளிச்சிடுவீர்கள். சிலர் வெளிநாடு சென்று படிக்கும் யோகத்தைப் பெறுவர்.

**தொழிலாளர்கள்:** ஏழரைச் சனி விலகுவதால் வருமானம் அதிகரிக்கும். அரசு வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். போட்டியாளர்கள் விலகி நலம் செய்வார்கள். புதிய தொழில் அனுகூலத்தைக் கொடுக்கும். தொழில் போட்டியாளர்கள் இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிவார்கள். தொழில், வியாபாரம் மேன்மையடையும். எதிர்பார்த்த இலாபம் வரும். கடுமையான உடல்நலப் பாதிப்புகள் இருந்தால் அவை நீங்கிவிடும்

**பணியாளர்கள்:** ஏழரைச் சனி விலகுவதால் தடைபட்டு வந்த பதவி உயர்வு இனி கிடைக்கும். மேல் அதிகாரிகளின் ஆதரவு இருக்கும். சிலர் அதிகார அந்தஸ்த்துக்கு உயர்த்தப்படுவர். விரும்பிய இடத்திற்கு மாற்றம் கிடைக்கும். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். வேலையின்றி இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

**கலைஞர்கள்:** ஏழரைச் சனி விலகுவதால் சிறப்பான பலனைக் காண்பர். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். புகழ், பாராட்டு போன்றவை வரும். நல்ல பணப்புழக்கமும் இருக்கும்.

**அரசியல்வாதிகள்**: ஏழரை சனி விலகுவதால்



முன்னேற்றம் காண்பர். எதிர்பார்த்த பதவி கிடைக்கப் பெறலாம். மேலிடத்தில் இருந்து பாராட்டு கிடைக்கும். புகழ், செல்வாக்கு கூடும். பத்தரை மாற்று தங்கம் என பறை சாற்றப்படுவீர்கள்.

**மாணவர்கள்:** ஏழரைச் சனி விலகுவதால் கல்வி மேம்படும். வித்தைகள் விருத்தியாகும். நல்ல அனுகூலத்தைக் காணலாம். முழு பலன்களும் கிடைக்கும். நல்ல மதிப்பெண் எடுக்கலாம். போட்டிகளில் வெற்றி பெறலாம்.

**விவசாயிகள்:** ஏழரைச் சனி விலகுவதால் இதுவரை இருந்து வந்த தடைகள் நீங்கி தொட்டது துலங்கும். எதிர்பார்க்கும் இடங்களிலிருந்து நல்ல தகவல்களும் மகிழ்ச்சியான செய்திகளும் வந்தடையும். உங்களுடைய நீண்ட நாளைய கனவு இப்போது நிறைவேறும். அதிக வருமானம் காணலாம். புதிய சொத்து வாங்கலாம். வழக்கு விவகாரங்கள் சாதகமாக இருக்கும். தீர்ப்புகள் சாதகமாக அமையும். விளைச்சல் நன்றாக இருக்கும். வருமானங்கள் பல வழிகளில் வசப்படும்.

**பெண்கள்:** ஏழரைச் சனி விலகுவதால் புதிய வண்டி வாகனம் வாங்குவீர்கள். வீடு கட்டவோ வீடு வாங்கவோ யோகம் உண்டாகும். பழைய கடன்கள் முழுவதுமாக அடைபடும். அரசாங்கத்திலிருந்து ஆகவேண்டிய காரியங்கள் உடனுக்குடன் நடைபெறும். அரசாங்க சலுகைகள் நினைத்தபடி கிடைக்கும். அரசியலில் உள்ளவர்களுக்கும் இது யோகமான காலம். மகிழ்ச்சியுடன் காணப்படுவர். பிள்ளைகளால் பெருமை ஏற்படும். வேலைக்குச் செல்லும் பெண்களின் நிலை உயரும்.

## சனி வக்கிரப் பலன்கள்:

**15.03.2015** முதல் **02.08.2015** வரையும் **26.03.2016** முதல் **12.08.2016** வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ்சரிக்கிறார்.

3இல் சனி வக்ரமாகும்போது நல்லதல்ல என்று சொல்லப்படுகிறது. இது ஏற்ற இறக்கமான காலம். எதிர்கால பிரச்சனையொன்று பெரிய அளவில் ஏற்படும். உடல் நலம் மீண்டும் சிக்கல் தரும். அண்ணன் தம்பிகள் சண்டைகள் வந்து நீங்கும். செய்தொழில் வர்த்தகம் எந்த விதித்திலும் பாதிக்காது. உங்கள் வருமானம் குறையாது. அடுத்தவர் பேச்சைக் கேட்காமல் இருப்பது நல்லது. சற்று பதட்டப்பட வேண்டிய கால கட்டம் இது. தடுத்து ஆட்கொள்ளதக்க தருணத்தில் கடவுள் கண் திறப்பார்.

## நட்சத்திர பலன்கள்:

### உத்திரம் நட்சத்திரம் 2,3,4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள்:

பொருளாதார வளம் சிறப்படையும். நினைத்த காரியம் எளிய முயற்சியில் வெற்றிகரமாக நிறைவேறும். ஆற்றல் மேம்படும். அவப்பெயர் மறைந்து உறவினர் மத்தியில் செல்வாக்கு மேம்படும். அக்கம் பக்கத்தினரிடம் மதிப்பு உண்டாகும்.

### அஸ்தம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்


குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். கணவன் மனைவி இடையே இருந்த கருத்துவேறுபாடு அடியோடு மறைந்து அன்பு மேம்படும். இதுவரை தடைபட்டு வந்த திருமணம் போன்ற சுபநிகழ்ச்சியை சிறப்பாக நடத்துவீர்கள். அதுவும் மனதிற்கு பிடித்த நல்ல வரனாக அமையும்.

### சித்திரை நட்சதிரம் 1,2ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்:

புதுமணத் தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். விருந்து, விழா என அடிக்கடி சென்று மகிழ்வீர்கள்.வீட்டிற்கு அடிக்கடி உறவினர்கள் வருகையும், அதனால் நன்மையும் காண்பீர்கள். ஆற்றல் மேம்படும். அவப்பெயர் மறைந்து உறவினர் மத்தியில் செல்வாக்கு மேம்படும். அக்கம் பக்கத்தினரிடம் மதிப்பு உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.

## பரிகாரம்:

வியாழக்கிழமை தோறும் சுதர்ஸன பகவானை வழிபாடு செய்யவும். சுதர்ஸன அஷ்டகம் பாராயணம் செய்யவும். வாழ்க்கை சிறக்கும் வளத்தைக் கொடுக்கும். தாழ்மை தலை தெரிக்க ஓடும். மேன்மை மேலெழுந்தவாறு ஓங்கும்.




இராசி மண்டலத்தில் 7வது இராசி துலாம். சுக்கிரனின் ஆட்சி வீடு. கலா இரசிகம் அதிகம் உடைய இராசி இது. திட்டமிட்ட காரியங்களை திறமுடனே செய்து முடிக்கும் பழக்கம் கொண்டவர்கள். தராசினை கையில் வைத்திருக்கும் சின்னம் உங்களுடையது எனவே உதவி செய்வது என்றால் கூட தராசில் எடைபோட்டுப் பார்ப்பது போல அளந்தறிந்து உதவி செய்வீர்கள். துலாம் இராசியின் அதிபதி சுக்கிரன் மற்றவர்களை வசீகரித்து இழுக்கும் செயலுக்கு பஞ்சமில்லை எந்தவொரு காரியத்தை எடுத்தாலும் நீதி, நேர்மை, நியாயம், தர்மம் என்று ஒரு கொள்கைப் பிடிப்போடு செயல்பட்டு அனைவருக்கும் நீதி வழங்குவீர்கள். சனிபகவான் உங்களின் இராசியிலே உச்சமாகி விடுவதால் எந்தவொரு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, பொதுக் காரியங்களாக இருந்தாலும் சரி நீங்களே முன்னிலை வகிக்க வேண்டும் என்ற எண்ணம்கொண்டு செயல்படுவீர்கள்.

சுக்கிரன் இராசி அதிபதி என்பதால் ஆடம்பரங்களில் அதிக நாட்டம் கொண்டு செயல்படுவீர்கள். இதுவரை சனி ஜென்மத்தில் உச்சமாக 7½ சனி படாதபாடு படுத்திக் கொண்டு இருக்கிறது. பல்வேறு இன்னல்களை தற்சமயம் சந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள்.


சனி பகவான் திருக்கணிதப்படி 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8:54 மணிக்கு துலாம் இராசியில் இருந்து விருச்சிக இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். வாக்கியப்படி 16—12—2014 அன்று பெயர்ச்சி ஆகிறார் (திருநள்ளாறு விஷேசம்).




தன குடும்ப வாக்குஸ்தானமும் 2ஆம் இடமுமான விருச்சிக இராசியில் சனி சஞ்சரிப்பது நல்லதல்ல. ஆனால் இதுவரை உங்களைப் பிடித்திருந்த ஜென்மச் சனி விலகியது. ஜென்ம சனிக்கு இந்த 2ஆம் இடமான சனி எவ்வளவோ நலம். பொதுவாக பாதிப்பைவிட நன்மைகளே ஏற்படக்கூடும் என்றே சொல்ல வேண்டும். இது ஏழரைச் சனியின் கடைசி காலக்கட்டம். கடந்த ஐந்து ஆண்டுகளாக பிடித்துக் கொண்டிருந்த சனி — இனி குடும்பச் சனியாக தனது கடைசி காலத்தில் பல நன்மையான பலன்களை எந்த அளவுக்கு செய்ய முடியும் என்று யோசிக்க வேண்டியுள்ளது. ஆனால் பொதுவாக 2ஆம் இடச் சனி எந்தவிதமான நன்மைகளையும் செய்யமுடியாது என்றே சொல்லப்படுகிறது. இருந்தாலும் ஏழரைச் சனி தன்னுடைய சஞ்சாரத்தின் இறுதி காலத்தில் தீமையான கெடுபலன்களை கொடுப்பதை மறந்து — நன்மையான யோகப் பலன்களையே கொடுக்கவே செய்வார் என்றே சொல்லலாம்.

### சனிப்பெயர்ச்சி பார்வைப் பலன்கள்:

உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தில் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை இராசிக்கு 4, 8,11 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் எல்லாம் மாற்றமடைகின்றன.




### 4ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

சனி 4ஆம் இடத்தைப் பார்ப்பதால் உடல்நலத்தில் படிப்படியாக முன்னேற்றம் உண்டாகும். தைரியம், தன்னம்பிக்கை, முயற்சியின் வேகம் கூடுதலாகும். முயற்சிக்கும் காரியங்களில் சலிப்பு, சோம்பல், ஊக்கக்குறைவு ஞாபக மறதி, தடுமாற்றம், அலட்சியம், அவநம்பிக்கை அனாவசியமான சஞ்சலம், சங்கடம் என்றெல்லாம் ஊடுருவிக் கொண்டிருந்த பொறாமை, எதிர்ப்பு, பகை, எதிரிகள் போன்றவைகளை மடக்கி வெற்றி வாய்ப்பைப்

பெறலாம். தவறான அபிப்ராயங்கள் மறந்து மதிப்பு, மரியாதை மேலோங்கும்.

### 8ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

சனி 8ஆம் இடத்தைப் பார்ப்பதால் புதிதாக பொன், பொருள்களைச் செய்துக் கொள்வதற்கும் உங்களுடைய நிதி நிலைமை ஒத்துழைக்கும், செய்தொழில், வியாபாரம், ஜீவனம் எதுவானாலும் அபிவிருத்தியுடன் கணிசமான இலாபகரமான வருமானப் பெருக்கத்துடன் நடைபெறும். புதிய உத்தியோகஸ்தர்களுக்கு வேலை வாய்ப்பும் கிட்டிடும். ஆனால் செலவினங்கள் அதிகரிக்கும்.

### 11ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

சனி 11ஆம் இடத்தைப் பார்ப்பதால் வியாபாரம், வணிகம் செய்வதால் இலாபம் கூடும், தொழில் நடத்தினால் ஆதாயம் சேரும், கலைகளில் ஈடுபட்டால் பேரும் புகழும், பெருமையும், பரிசுப் பொருள்களும் கிட்டும். பொதுவாக ஜீவனக்காரியங்களில் எல்லாம் சம்பாத்தியம் உயரும். ஆனால் கணக்கு சம்பந்தப்பட்ட வகையிலும் அரசாங்க விஷயங்களிலும் கவனமும் எச்சரிக்கையாகவும் இருத்தல் அவசியம்.

### சனி பகவான் 2.11.2014 முதல் 28.11.2014 வரை விசாகம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

குருவின் நட்சத்திரமான விசாகத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் வேலை, உத்தியோகம் இல்லாதோருக்கு படிப்புக்கேற்ற வேலையும், திருப்தியான ஊதியமும் கிடைக்கும், பதவி உயர்வும் ஊதிய உயர்வும் திருப்தியான இடமாற்றமும் ஏற்படும். சொந்தத் தொழில் துறையில் இழுத்துப் பறித்து தொழிலை வலுக்கட்டாயமாக ஓட்டியவர்களுக்கு நல்ல முன்னேற்றமும் திருப்பமும் உண்டாகும்.

### சனி பகவான் 29.11.2014 முதல் 26.12.2015 வரை அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

சனியின் நட்சத்திரமான அனுசத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் உங்களின் மனதை அழுத்திக் கொண்டிருந்த பல பிரச்சினைகள் விலகும். வம்பு, வழக்குகளில் ஓரளவு சாதகமான திருப்பங்கள் ஏற்படும். அதனால் விட்டுக் கொடுத்துச் சென்று வழக்குகளை முடித்துக் கொள்ளவும். பிடிவாதங்களைத் தளர்த்திக் கொண்டு அனைவரிடமும் ஒற்றுமையை வளர்த்துக் கொள்வீர்கள். தற்பெருமை பேசுபவர்கள்கூட உங்களின் பெருந்தன்மையை உணர்ந்து, பணிந்துப் போவார்கள். உங்கள் பேச்சில் கடமை உணர்ச்சி மிகுந்திருக்கும். நியாயவாதி என்று பெயரெடுப்பீர்கள்.

### சனி பகவான் 27.12.2015 முதல் 24.01.2017 வரை கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனி சஞ்சரிக்கும் இந்தக் காலத்தில் உங்களின் கவலைகள் படிப்படியாகக் குறையும். புதிய வீட்டுக்குக் குடிபெயரும் வாய்ப்பு உண்டாகும். ஒரு சிலருக்கு வழக்கொன்றில் வழங்கப்படும் சாதகமான தீர்ப்பினால் வருமானம் பெருகும். தடைபட்டிருந்த பயணங்களை மேற்கொள்வீர்கள். நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் ஏற்பட்ட விரோதங்கள் மறையும்.

**தொழிலாளர்கள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி 2இல் சஞ்சாரம் செய்வதாலும் சிலருக்கு வெளியூர், பயணங்கள் திடீரென்று உண்டாகும். அந்தப் பயணங்கள் மூலம் உயர்வும் நற்பலனும் ஏற்பட கால தாமதம் ஆகும். கொடுக்கல் வாங்கலில் அனுகூலமும் எதிர்பார்த்த பொருள் வரவும், உண்டாகும். சிலருக்கு பண வரவில் அசையா சொத்து உண்டாகும். பிறருக்கு கடன் கொடுப்பது தவிர்க்கவும். செல்வம் செல்வாக்கு உண்டாகும்

**பணியாளர்கள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி 2இல் சஞ்சாரம் செய்வதாலும் உத்தியோகத்தில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். எதிர்பாராத ஆதரவும் ஊதிய உயர்வும் உண்டாகும். மேல் அதிகாரிகளின் கெடுபிடி அதிகரிக்கும். வெளியூர் பயணத்தால் இலாபம் கிடைக்க எச்சரிக்கை தேவை. வேலையில்லாத இளைஞர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். வெற்றி கிடைக்கும்.

**கலைஞர்கள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி 2இல் சஞ்சாரம் செய்வதாலும் நல்ல பெயர் புகழ் கூட கடினமாக உழைக்க வேண்டி வரும். வெளியூர், பயணம் உண்டாக வாய்ப்பு உள்ளது. நீங்கள் எதிர்ப்பார்த்த உதவி உங்களுக்கு கிடைக்கும். பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். முயர்ச்சிகள் வெற்றி தரும்.பொருள் வரவு தாராளமாக இருக்கும்.

**அரசியல்வாதிகள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி 2இல் சஞ்சாரம் செய்வதாலும் உங்களுக்கு மக்கள் மத்தியில் நல்ல பெயர் புகழ் கூட சற்று எச்சரிக்கையுடன் நடந்துக் கொள்வது நல்லது. வெளியூர் பயணம் உண்டாக வாய்ப்பு உள்ளது. பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். அரசியலில் உங்கள் செல்வாக்கு கூடும். திடீர் தனவரவு உண்டாகும்.

**மாணவர்கள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி 2இல் சஞ்சாரம் செய்வதாலும் மாணவர்களுக்கு நல்ல மதிபெண்கள் பெற்று நற்பெயர் எடுக்க சற்று கடினமாகப் படிக்க வேண்டும். ஆசிரியர் பெற்றோர் ஆதரவு



நன்றாக இருக்கும். சக நண்பர்களுக்குள் கசப்பு வரலாம். உஷார். ஒருசில மாணவர்களுக்கு வெளியூர், பயண யோகம் கிட்டும். சிலர் மேல் படிப்புக்காக வெளிநாடு செல்வீர்கள்

**விவசாயிகள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி 2இல் சஞ்சாரம் செய்வதாலும் வருவாய் குறையும். ஏற்றமும் உயர்வும் கொடுக்கும். கடந்த காலங்களில் நீங்கள் சந்தித்த சோதனைகள் மாறி சந்தோஷமான பலன்கள் ஏற்பட கடின உழைப்பும், கடவுள் வழிபாடும் அவசியம். அதன் மூலம் உங்கள் வலிமையும் வளமும் கூடும்

**பெண்கள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி 2இல் சஞ்சாரம் செய்வதாலும் திருமணம் போன்ற சுபகாரியங்கள் சற்று தடை வந்து பின்பு நடைபெறும். புத்திர வழியில் சிறு சிறு சிக்கல் உண்டாகும். சகோதர வழியில் தொந்தரவு உண்டாகும். சிலருக்கு வெளியூர், பயணங்கள் திடீரென்று உண்டாகும். அந்தப் பயணங்கள் மூலம் உயர்வும் நற்பலனும் ஏற்படும். கணவன் — மனைவி அன்பு சீர்படும்.

### சனி வக்கிரப் பலன்கள்:

**15.03.2015** முதல் **02.08.2015** வரையும் **26.03.2016** முதல் **12.08.2016** வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ்சரிக்கிறார்.

உடல் ஆரோக்யம் சிறப்படையும். அரசுத் துறைகளின் மூலம் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். உத்யோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகள் உங்கள் பேச்சுக்கு செவி சாய்ப்பார்கள். அலுவலகத்தில் உங்கள் மரியாதை உயரும். விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். அதேநேரம் எவரைப் பற்றியும் புறம் பேசாமல், சக ஊழியர்களின் நட்பைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.வியாபாரிகள் வாடிக்கையாளர்களிடம் நிதானமாகவும், கோபப்படாமலும் நடந்துக்கொண்டால் நல்ல இலாபங்களை அள்ளலாம். மற்றபடி கடுமையான போட்டிகளையும் சாதுர்யமாகச் சமாளிப்பீர்கள். கொடுக்கல், வாங்கல் விஷயங்கள் வெற்றிகரமாக முடிவடையும். கூட்டாளிகள் உங்களுக்கு சாதகமாக நடந்துக் கொள்வார்கள். அதேசமயம் புதிய முதலீடுகளில் கவனமாக இருக்கவும்.

### நட்சத்திரப் பலன்கள்:

#### சித்திரை நட்சதிரம் 3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்:

புதிய வாய்ப்புகள் தேடி வரும். அவற்றில் உங்கள் திறமையை வெளிப்படுத்தி இரசிகர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெறுவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். பண வரவு அமோகமாக இருக்கும். புதிய வாகனம் வாங்குவீர்கள். இரசிகர்களின் ஆதரவோடு வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் வாய்ப்புகளும் கிடைக்கும்.

#### சுவாதி நட்சதிரத்தில் பிறந்தவர்கள்:

செலவுகள் அதிகரிக்கும் என்பதால் அவற்றை ஈடுகட்ட பழைய கடன்களை வசூலிப்பீர்கள். நீங்கள் விரும்பிய வீட்டிற்குக் குடிபெயர்வீர்கள். சுகபோக வசதிகளை அனுபவிப்பீர்கள். உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உடல் உழைப்புக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். அனைத்துச் செயல்களையும் பொறுமையுடனும், நிதானத்துடனும் செய்வீர்கள். உங்களின் ஆலோசனைகள் உங்கள் நண்பர்களுக்குப் பயன்படும்.

#### விசாகம் நட்சதிரம் 1,2ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்:


புதிய முயற்சிகளில் இறங்கி அனுபவம் பெறுவீர்கள். சிரமம் பார்க்காமல் சாகசங்களில் ஈடுபடுவீர்கள். வருமானம் சீராக இருக்கும். குடும்பத்தில் சுப காரியங்களை நடத்துவீர்கள். சிலர், குழந்தைகளை வெளி நாடுகளுக்கு அனுப்பிப் படிக்க வைப்பார்கள். உங்களின் முக்கியத் திட்டங்கள் நிறைவேறும் உங்கள் ஆசைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும்

### பரிகாரம்:

நரசிம்ம சுவாமியை ஜென்ம நட்சத்திரம் தோறும் வழிபாடு செய்யவும். நரசிம்ம காயத்ரி மந்திரம் பாராயணம் செய்யவும். தோஷங்கள் நீங்கி, நன்மைகள்யாவும் நல்கிடும். ஏழரைச் சனியின் தாக்கத்தை எளிதில் எதிர் கொண்டு சமாலிக்கலாம்.



# அன்னையின் அருள் சித்தர்கள் (EVERWIN)



# ஆத்ம யோக சக்தி நிலையம் (Regd)

## மனித வாழ்வை வளமாக்கும் மகாசித்தர்கள் யந்திர மூலிகைகள் கைமேல் பலன் கிடைக்கும்.

**மாந்திரிக பாடங்கள் தனிதனி கட்டணங்கள் ஆகும்**

1. ஒரு நிலை மாந்திரீகம்
2. வலம்புரி சங்கு பூஜா
3. ஜோதிட சூட்சுமம்
4. குலதெய்வ வசிய பூஜா
5. தந்திரிக பூஜாபாடம்
6. கின் வசிய பாடம்

(சிறிய செலவில் செய்யக் கூடியது) **பயிற்சி தபாலில் பாடம் மட்டும் தான்**

- குடும்ப குலதெய்வ வசியமை
- குடும்ப ஒற்றுமை
- தொழில் வசியமை
- ஸ்ரீ லஷ்மி குபேர வசியமை
- கணவன் மனைவி வசிய மருந்து
- வசிய எண்ணெய்

அனைத்து பிரச்சனைகளையும் நிரந்தரமாக தீர்வு காணும் அபூர்வ அற்புத மூலிகைகள் கொண்டு சரி செய்தல். இன்று எல்லோரது வாழ்க்கையிலும் உண்டாகும் (வசிய மருந்து) ஈடு மருந்து பிரச்சனை தீர்க்கும் மூலிகை சரி செய்தல்.

## 108 மூலிகை சாந்த ஹோம பொடி

மகா சித்தர்கள் 108 மூலிகைகள் கொண்டு செய்யப் பெற்ற இந்த பொடியினை தினசரி மாலை 5.45 மணி முதல் 6.30 மணிக்குள் சரிபாகமாக சாம்பிராணி தூள் கலந்து வீட்டின் தலை வாசல் (வாயில்) நெருப்பிலிட்டு காட்டி பின் வீட்டின் உள் பாகங்களின் ஒவ்வொரு அறையிலும் நன்கு புகை வரும்படி போடவும், கடைசியாக உள்ளதை வீட்டின் வடகிழக்கு மூலையில் வைத்து மறுநாளில் எடுத்து கால்படாத இடமாக கொட்டிவிடவும். இவ்வாறு புகையிடுவதால் வீட்டில் உள்ள துஷ்ட ஆவிகள் செயல் இழந்துவிடும். கண் திருஷ்டி அகலும். குடும்பத்தில் அடிக்கடி வரும் சண்டைகளை கட்டுப்படுத்தும். வீட்டில் புதைக்கப்பட்ட யந்திர தகடுகள் செய்வினைகள் வலுவிழந்து நன்மை பயக்கும், தரித்திரம் அகலும். நாள்பட்ட தரித்திரங்களும் அகலும் தீயவைகள் யாவும் அழிந்து நன்மைகள் கை கூடும். இதை தேய்பிறை அஷ்டமியிலும் பிரதோஷம் வேளையிலும் மாலையில் செய்து வர பின்னால் வரும் இடையூறுகளை முன்கூட்டியே விலக்கலாம். நெருப்பு மூட்ட தேங்காய் சிரட்டையை காஸ், ஸ்டவ் அடுப்பின்பர்னரின் மீது வைத்து எரிக்கவும் பாதி எரிந்து நிலையிலும் எடுத்து தட்டில் மாற்றி நெருப்பையும் சுலபமாக புகை போடலாம். மூலிகை பொடி 125 கிராம் விலை **340+50/-** கொரியர் சர்வீஸ் சேர்ந்து அனுப்பி வைக்கவும். அதிக பலன் பயன் வேண்டுபவர்கள் இத்துடன் விளக்கு எண்ணெய் 500 ml விலை ரூ.**750+50/-** கொரியர் சேர்ந்து அனுப்பவும். மற்றும் அதிக கிரக பலன் வியாபார பலன், திருமணம் நிம்மதி அடைய மகா சித்தர்கள் வாக்கின் படி 108 மூலிகையின் தைலம். **ரூ.3000/- கொரியர்+50** சேர்ந்து அனுப்பவும்.

## நம்பிக்கையுடன் வாருங்கள் சித்தர்கள் அருள் பெறுங்கள்.

பிரச்சனைக்கு ஏற்ப அதற்குண்டான பரிகாரங்களும் தனிக் கட்டணம் உண்டு. உங்களுக்கு தேவையான விபரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. விருப்பம் இருந்தால் முன் அனுமதி பெற்று / நேரிலோ/ தபாலிலோ பிரச்சனைகள் தீர்த்துக் கொள்ளலாம். **தேவையில்லாத அநாகரிகமான கேள்விக்கு கண்டிப்பாக பதில் கிடையாது.**

ஆலோசனை ஒரு நபருக்கு **ரூ.501/-** பூஜை பொருட்களுடன் வரவும்.
நேரில் வர முடியாதவர்கள் **ரூ.1000/-** மணியாடர் செய்து உங்களுடைய புகைப்படமும் தாய் பெயர் வயது தெளிவான முகவரி செல் நம்பர் பின்கோடு எழுதி அனுப்பவும்.

# தொடர்புக்கு: 94441 90090 / 94442 80080

**ஆத்ம யோக சக்தி நிலையம் (டிரஸ்ட்) பதிவு**
**எண் 54/11 கன்னிமூல கணபதி தெரு, கணபதி நகர் (கிழக்கு)**
**திருமுல்லைவாயில் சென்னை 600062.**




இராசி மண்டலத்தில் 7வது இராசி விருச்சிகம். செவ்வாயின் ஆட்சி வீடு. அஞ்சாத நெஞ்சமும் அன்பு உள்ளமும் கொண்டவர்கள் நீங்கள். எதிரியை வீழ்த்தும் திறமும் கொண்டவர்கள் நீங்கள். உங்கள் இராசிநாதன் செவ்வாய் என்பதால் எடுக்கின்ற காரியங்கள் அனைத்தும் போராடியேனும் வெற்றியை உங்களின் பக்கம் நிறுத்திக் கொள்வீர்கள். பொசுக் கென்று எதற்கெடுத்தாலும் கோபப்படுகின்ற குணமே உங்களின் முதல் எதிரி. தேளின் சின்னம் உங்கள் இராசியின் சின்னம் எனவே சுறுசுறுப்பிற்க்கு ஒன்றும் பஞ்சமிருக்காது. நீதி, நேர்மை, நியாயம் என்று நியாயத்திற்காகவும், தர்மத்திற்காகவும் சதாசர்வ காலமும் போராடும் குணம் கொண்டவர்கள். தலைக்கணம் இல்லாத தன்னம்பிக்கையை நிலையாகக் கொண்டவர்கள் நீங்கள். காலத்திற்கேற்ப நடந்து கொள்ளும் பாங்கு என வகை வகையாய் வித விதமாய் கொண்ட விவரமானவர். அரசியலில் சிலர் அதிக விருப்பம் உடையவர்களாகத் திகழ்வீர்கள்.

சனி பகவான் திருக்கணிதப்படி 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8:54 மணிக்கு துலாம் இராசியில் இருந்து விருச்சிக இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். வாக்கியப்படி 16—12—2014 அன்று பெயர்ச்சி ஆகிறார்( திருநள்ளாறு விஷேசம்).

விரயஸ்தான மென்னும் 12ஆம் இடத்திலிருந்த சனிபகவான் இப்போது உங்கள் ஜென்ம இராசிக்கு வந்திருக்கிறார். இது ஏழரைச் சனியின் ஜென்மச் சனியின் காலம். அடுத்த கட்டத்தை அதாவது இன்னும் இரண்டரையாண்டுகளுக்கு நீங்கள் சனியின் பிடியில் இருந்துதான் ஆகவேண்டும்.

இப்பொழுது ஏழரைச் சனியின் காலக் கட்டத்தில் நடுப்பகுதியாகிய ஜென்ம இராசியில் சனி பகவான் சஞ்சரித்தாலும் ஜென்ம சனியைப் பற்றி ஜோதிட சாஸ்திரங்களில் உயர்வாகவோ சிறப்பாகவோ சொல்லவில்லை என்பது உண்மைதான்.

ஜென்ம இராசியில் சனி பகவான் சஞ்சரிக்கும் போது கெடுபலன்கள் தான் என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. சனி ஜென்மத்தில் வரும் போது சிறைக் காவல், வெகு ரோகம், சண்டைச் சச்சரவுகள், மரண பயம் மூன்றும் சற்று ஏழரைச் சனியாகி ஆயுள் நிர்ணயப்படி மாரக தெசையும் நடந்தால் மரணபயமும், மற்றவர்களுக்கு அதற்கு ஒப்பான வியாதி, உடல் நலக்குறைவு, தீமையும் கலந்த எல்லாம் ஆகாத பலன்களாகவே நடக்கும். சுற்றமும், நட்பும் பகையாகி விடுவார்கள். தங்குவதற்கு வீடு வாசல் இன்றி போகும். நிர்பந்தமாக நாடு கடத்தப்பட வேண்டி இருக்கும்.

இக்காலகட்டத்தில் வேண்டாத இடத்துக்கு வேலை மாற்றம் போன்றவை ஏற்படும். இவர்களுக்கு மக்களே எதிரிகளாவர். வருமானமும் குறைந்து அலைச்சல், திரிச்சல், அலைக்கழிப்புடன் கூடி சலிப்புடன் இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது.

### சனிப்பெயர்ச்சி பார்வைப் பலன்கள்:

உங்கள் இராசிக்கு 1ஆம் இடத்தில் ஜென்ம இராசியில் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை இராசிக்கு 3, 7,10 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் எல்லாம் மாற்றமடைகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | 7 | 8 |
| 4 | | | 9 |
| 2 | | | 10 |
| 3 | விருச்சிகம் சனி 1 | 12 | 11 |

### 3ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

முயற்சிக்கும் காரியங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டு மும்முரமாக வெற்றி கிட்டிடும் வகையில் பாடுபடுவார்கள். பணப்பிரச்சினை இருந்தாலும் சாதுர்யமாகவும். சாமர்த்தியாமாகவும் தேவைக்கேற்ப புரட்டிக் கொள்வார்கள் என்பதாலே கலக்கமோ, கவலையோ மனதைப் போட்டு குழப்பிக்க வேண்டியதில்லை. உத்தியோகமோ, வியாபாரமோ, வணிகமோ, தொழிலோ, ஜீவனம் எதுவானாலும் சிக்கல் சிரமங்களைக் குறைத்து சிறந்த முறையில் முன்னேறுவதற்கான வழிவகையில் படிப்படியாக முன்னேற்றம் காண்பார்கள். இலாபகரமான வருமானம் இருந்திடும்.

### 7ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

எங்கும் எதிலும் அவசரமும், பதட்டமும் படாமல் நிதானமும் பொறுமையும்

கடைப்பிடித்தல் வேண்டும். செய்தொழில், வியாபாரம், வணிகம், ஜீவனம் எதுவானாலும் சம்பந்தப்பட்ட வகையில் புதுத்திட்டங்களும் புது ஒப்பந்தங்களும் புது முயற்சிகளும் உண்டாகும். ஒரு சிலரின் சுயமுயற்சியும் வெற்றியாகும். பணப்பிரச்சினை கொடுக்கல் வாங்கலில் இருந்து வந்த குழப்பம், குளறுபடி, கடன் வகையில் கோளாறு, வெட்டித்தனமான பேச்சு வார்த்தைகளினால் குடும்பத்திலுள்ள குழப்பங்கள், குதர்க்கங்கள் இப்படியானவையெல்லாம் மறைந்து தெம்பும், உற்சாகமும், நிலவும். மத்தவங்க விஷயத்தில் ஒதுங்கி இருப்பது நல்லது.

**10ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:**

முயற்சிக்கும் காரியங்களில் தைரியமும் துணிச்சலும் மற்றவர்களுக்கு அதிர்ச்சியை உண்டாக்கும். கௌரவ பாதிப்போ அவமானமோ ஏற்படவும் கூடும். ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் கைவிட்டு. பொறுமையையும், நிதானத்தையும் கடைபிடிக்க வேண்டும். ஜீவன தொழில், வியாபாரம் வகைகளில் சாதாரண போக்கில் ஓரளவு வருமானப் பெருக்கமும் இருந்திடும். உத்தியோகஸ்தர்களுக்கு சிறிது மந்தப் போக்கு நிலவினாலும் அதிகாரிகளின் ஆதரவும் அனுகூலமும் சலுகைகளும் இருந்திடும். கொடுக்கல் வாங்களில் பணம் கையை விட்டுப்போகாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.




**சனி பகவான் 2.11.2014 முதல் 28.11.2014 வரை விசாகம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

குருவின் நட்சத்திரமான விசாகத்தில் சனி சஞ்சரிக்கும் காலத்தில் யாரிடமாவது சண்டைபோட வேண்டும் என யோசிக்க வைக்கும். உங்களைப் பற்றி தவறாக எப்போதோ எங்கேயோ யாரோ சொன்னதெல்லாம் இப்போது நினைவுக்கு வந்து புலம்புவீர்கள். நெஞ்சு படபடப்பு, தலைச்சுற்றல், கை, கால் மரத்துப் போகுதல் வந்து நீங்கும். எவ்வளவு பணம் வந்தாலும் சேமித்து வைக்க முடியாதபடி செலவுகள் இருக்கும்

**சனி பகவான் 29.11.2014 முதல் 26.12.2015 வரை அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

சனியின் நட்சத்திரமான அனுசத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் சிறுசிறு அவமானம், ஏமாற்றம் வந்து நீங்கும். பழைய பிரச்சனைகள், சிக்கல்கள் மீண்டும் வந்துவிடுமோ என்றெல்லாம் பயப்படுவீர்கள். சட்டத்துக்கு புறம்பான வகையில் யாருக்கும் உதவ வேண்டாம். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயற்சிப்பார்கள். . யாரையும் எடுத்தெறிந்து பேச வேண்டாம். வழக்கை நினைத்து கவலையடைவீர்கள். முக்கிய காரியங்களுக்காக இடைத்தரகர்களை நம்பி பணம் கொடுத்து ஏமாறாமல், நீங்களே நேரடியாகச் சென்று முடிப்பது நல்லது.

**சனி பகவான் 27.12.2015 முதல் 24.01.2017 வரை கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனி சஞ்சரிக்கும் இந்தக் காலத்தில் அலுவலகத்தில் அனுகூலமான சூழலைக் காண்பீர்கள். சக ஊழியர்கள் நட்பு பாராட்டுவார்கள். இடையூறுகளை ஒரு பொருட்டாகவே கருதமாட்டீர்கள். பண வரவில் சிறு தடைகள் ஏற்பட்டாலும் உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெறுவதில் எந்தக் குறையும் ஏற்படாது. விரும்பிய இடமாற்றங்களைப் பெறுவீர்கள். உங்கள் வேலைத் திறன் பளிச்சிடும்.

**தொழிலாளர்கள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி ஜென்மத்தில் சஞ்சாரம் செய்வதாலும் அரசாங்க வழியில் உதவிகள் கிடைக்க சற்று கூடுதல் முயற்சி தேவை. நெருங்கிய உறவினர்கள் பெரியோர்களது ஆலோசனைகள் நற்பலன் தரும். கமிஷன் ஏஜென்சி போன்றவை யோகம் கொடுக்கும். ஏற்றமும் மாற்றமும் ஏற்படும். புதிய கொள்முதல் மூலம் இலாபம் உண்டு. வெளிவட்டார பொருளாதார வகையில் தன்னிறைவை உண்டாக்கித் தரும். கூட்டுத் தொழிலில் யோகம் தராது. முயற்சி எடுக்கும் முன் சற்று யோசனை தேவை.

**பணியாளர்கள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி ஜென்மத்தில் சஞ்சாரம் செய்வதாலும் அதிகாரிகளிடமிருந்து ஒத்துழைப்பு கிட்டுவது கடினம், கடின உழைப்பால் சம்பள உயர்வும் அலுவலர்களிடமிருந்து மதிப்பும் மரியாதையும் எளிதில் கிடைக்கும். பொருட்களை விற்பதில் சாமார்த்தியம் உண்டாகும்

**கலைஞர்கள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி ஜென்மத்தில் சஞ்சாரம் செய்வதாலும் விருதுகள் கிடைக்க சற்று கால தாமதம் ஆகும். கடின உழைப்பால் பலரின் ஏகோபித்த பாராட்டும் வந்து சேரும். அரசால் ஆதரவு கூடும். புதிய வாய்ப்புகள் தேடிவரும். திடீர் தனவரவு உண்டாகும்.

**அரசியல்வாதிகள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி ஜென்மத்தில் சஞ்சாரம் செய்வதாலும் அரசியல்வாதிகளுக்கு கௌரவம், புகழ், பதவி பெருமை யாவும் கூட எச்சரிக்கை அதிகம் தேவையான காலமாகும்.

**மாணவர்கள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி ஜென்மத்தில் சஞ்சாரம் செய்வதாலும் எதிர்ப்பார்த்த மதிப்பெண்கள் எளிதில் வர நன்கு படிக்க வேண்டும். சிலருக்கு ஆசிரியரின் பாராட்டும் சான்றிதழும் கிடைக்கும். சிலர் விளையாட்டுத் துறையில் சாதனை செய்வார்கள். சிலருக்கு இடமாற்றம் உண்டாகும்

**விவசாயிகள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி ஜென்மத்தில் சஞ்சாரம் செய்வதாலும் எதிர்பார்த்த விளைச்சல் ஏற்றத்தை உண்டாக்குமா என்பது சந்தேகமே. புதிய கருவிகள் வாங்குவீர்கள். உங்களின் விளை பொருளுக்கு ஏற்படும் பற்றாக்குறையால் சாதகமான இலாபங்களை அடைந்து தன்னிறைவை அடைவீர்கள். விருதுகள் கிடைக்கும். பலரின் ஏகோபித்த பாராட்டும் வந்து சேரும். அரசால் ஆதரவு கூடும். புதிய வாய்ப்புகள் தேடிவரும். திடீர் தனவரவு உண்டாகும்.

**பெண்கள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி ஜென்மத்தில் சஞ்சாரம் செய்வதாலும் நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்கும். கணவனின் அன்பு நன்றாக இருக்கும். ஆனாலும் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது பிள்ளைகளால் பெருமையும். பூரிப்பும், உண்டாகும். சிலர் புதிதாக வாழ்க்கையைத் தொடங்குவர். சிலர் வீட்டில் குழந்தை பாக்கியம் உண்டாகும். ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.சிக்கனத்தைக் கடைபிடிப்பது மிக அவசியம்.

## சனி வக்கிரப் பலன்கள்:

**15.03.2015** முதல் **02.08.2015** வரையும் **26.03.2016** முதல் **12.08.2016** வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ்சரிக்கிறார்.

வீட்டில் சுப நிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். உங்கள் ஆலோசனையை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். குறைந்த வட்டிக்கு பணம் வாங்கி பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். நீண்ட நாட்களாக போக நினைத்த அண்டை மாநிலப் புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். வேலைச்சுமை அதிகரிக்கும். சில நேரங்களில் அதிகாரிகள் கூடுதலாக உங்களுக்கு வேலைகளைத் தருவார்கள். சலித்துக் கொள்ளாமல் அந்த வேலைகளை முடித்துக் கொடுப்பது நல்லது.

## நட்சத்திரப் பலன்கள்:

### விசாகம் நட்சதிரம் 3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்:

இதனால் உங்களுக்கு பேராற்றல் உண்டாகும். புதிய தொழில் நுட்பங்களை அறிந்துக் கொள்வீர்கள். “சாமர்த்தியசாலி’ என்று பெயர் எடுப்பீர்கள். உற்றார், உறவினர்கள் உங்களுக்கு உதவிகரமாக நடந்துக் கொள்வார்கள். நல்ல செய்திகள் உங்களை வந்தடையும். இதனால் மகிழ்ச்சிக் கடலில் திளைப்பீர்கள்.



### அனுஷம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்:

திறமைக்கேற்ற புகழும், கௌரவமும் கட்டாயம் கிடைக்கும். பண வரவில் முன்னேற்றம் உண்டாகும். நண்பர்கள் மூலம் தக்க சமயத்தில் தேவையான உதவிகளைப் பெறுவீர்கள். அமைதியாகச் செயலாற்றுவீர்கள். சில விரயங்களும் அவ்வப்போது உண்டாகும் என்பதால் சேமிப்பு விஷயங்களில் கவனமாக இருப்பது நல்லது.

### கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்:

போட்டிகளைச் சமாளிக்க வேண்டிவரும். கடினமான காரியங்களையும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பீர்கள். உங்களின் உடல் உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும். புதிய திட்டங்களைத் தீட்டி வெற்றி பெறுவீர்கள். உங்கள் நடையில் ஒரு மிடுக்கு உண்டாகும். அவ்வப்போது சிறு உடல் உபாதைகள் தோன்றி மறையும். வசிக்கும் வீட்டை பழுது பார்ப்பதற்குச் சிறிது செலவு செய்ய நேரிடும். மறைமுக எதிர்ப்புகள் ஏற்பட்டாலும் அவற்றை சாதுர்யமாகச் சமாளிக்க சனி பகவான் உதவுவார்.

## பரிகாரம்:

செவ்வாய்க்கிழமை தோறும் முருகனை வழிபடவும்.சண்முகக் கவசம் பாராயணம் செய்யவும். வேல் இருக்க வினையில்லை. வேதனைகள் மறந்து சாதனை புரிய வைத்துவிடும். கந்தன் கை தொழுது வணங்குவதால் கஷ்டங்கள் யாவும் நிஷ்டைபோல் நீங்கிடும். சூரியனைக் கண்ட பனிபோல் சூழ்ந்துள்ள சூழ்ச்சிகள் யாவும் தவிடு பொடியாகி தறிகெட்டு ஓடிவிடும்.




ராசி மண்டலத்தில் 9ஆம் இராசி தனுசு. குருவின் ஆட்சி வீடு. இராசியின் அதிபதி குரு. புத்திரகாரகன் குரு பகவான் அருள் அதிகமாக பெற்றவர்கள் நீங்கள். தரமான சிந்தனையும் நீதி, நேர்மை கொண்ட நெஞ்சமும் உடையவர்கள். நியாயத்திற்காக போராடும் குணம் உங்களை ஒரு போராட்டக்காரராக காட்டினாலும் என்றும் நடுநிலைமை தவறாமல் விளங்கக் கூடியவர்கள் நீங்கள். தன்னம்பிக்கை, தளராஊக்கம், விட்டுக்கொடுத்துப் போதல் போன்ற குணங்களைக் கொண்டவர்கள் நீங்கள். வேகம், விவேகம், விமர்சனங்களைப் பொருட்படுத்தாமல் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் செயல் உங்களின் தனித்தன்மை. புகழ்ந்தாலும், இகழ்ந்தாலும் பிடித்த பிடியிலிருந்து விலகாதவர்கள் நீங்கள். கொள்கை வீரராக திகழ்வீர்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை மூச்சாகக் கொண்டவர்கள் நீங்கள். தியாகம் செய்வதில் உங்களுக்கு இணை நீங்கள் தான்.

சனி பகவான் திருக்கணிதப்படி 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8:54 மணிக்கு துலாம் இராசியில் இருந்து விருச்சிக இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். வாக்கியப்படி 16—12—2014 அன்று பெயர்ச்சி ஆகிறார்( திருநள்ளாறு விஷேசம்).

ஏழரைச்சனியின் காலமும் துவங்கிவிட்டது எனலாம். இன்னும் ஏழரை ஆண்டுகளுக்கு சனி உங்களை என்ன பாடுபடுத்தப் போகிறார் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இது ஆரம்பச்சனி என்பதால் அதிகம் பயப்படத்தேவையில்லை என்றாலும் இவரது இரண்டரை ஆண்டுகாலம் சஞ்சாரப் பலன்களைப் பற்றி சிறிது சிந்தித்து ஆராய்ந்துப் பார்க்கலாம்.


இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு சாதகமாக இருக்காது. அதே சமயம் பாதகமாகவும் இருக்காது. இதுவரை அளவிட முடியாத வெற்றிகளை அபரிமிதமான இலாபங்களைப் பெற்று அதிர்ஷ்டகரமான யோக சூழ்நிலையில் ஆர்பாட்டமின்றி அமைதியாக ஆனந்தமாக இருந்தீர்கள். இனி இப்படி வியத்தகு வெற்றிகள் ஆடிக்காற்று அதிர்ஷ்டம் தொடருமா என்றால் இல்லையென்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

நீங்கள் ஏழரை சனியின் ஆரம்ப கால கட்டத்தில் நின்றுக் கொண்டிருக்கின்றீர்கள். ஆனால் விரயஸ்தானம் வருவதால் முதலில் விரயங்கள் தான். எட்டிப் பார்க்கும் துயரங்கள் என்பது ஒரு சிலரை துரத்த ஆரம்பிக்கும். நீங்கள் உங்கள் தகுதியை அறிந்து செயல்படுவது நல்லது. புத்திசாலித்தனமும் கூட அவசியம். சாதுர்யமாக நடந்துக் கொண்டால் சங்கடங்களை தாங்கிப் பிடித்திடலாம்.

உங்கள் வாயும், வாக்கும் சில சமயங்களில் உங்களுக்கே எதிரியாகிவிடலாம். கவனமாகவும், எச்சரிக்கையாகவும் இருங்கள். செயல்படுங்கள். உங்களை யாரும் அசைக்க முடியாது என்று மட்டும் நினைக்க வேண்டாம். அசைத்துப் பார்க்கவும் சிலர் இருக்கிறார்கள். கீழேயும் தள்ளிவிட சிலர் முயற்சிக்கவும் கூடும். சோம்பேறித்தனம் அதிகமாகிவிடுவதால் எதையும் வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்ற மெத்தனமான அசட்டுத்தனத்தால் எதையாவது கோட்டை விடுவீர்கள். இதனால் இருப்பதை விட்டு விட்டு பறக்கிறதை பிடிக்க முயற்சிக்க வேண்டாம். பறப்பதை பிடிக்க நினைத்தால் இருப்பதை இழக்க நேரிடும்.

### சனிப்பெயர்ச்சி பார்வைப் பலன்கள்:

உங்கள் இராசிக்கு 12ஆம் இடத்தில் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை இராசிக்கு 2, 6, 9 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் எல்லாம் மாற்றமடைகின்றன.




### 2ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் அவசியம் கட்டுப்படுத்துதல் நல்லது. கடன் படவும் கூடும். தீயவர்களிடம் நட்புண்டாகும். உடன் பிறந்தவர்கள் சொந்தம் பந்தம் உதவிகரமாகவும் பக்க பலமாகவும் இருப்பார்கள். கீழ்த்தர மக்களால் சொற்ப வருமானமும் உண்டு. ஸ்திர சொத்துக்கள் சேர்க்கையாகும். கலைத் துறையிலுள்ளவர்களுக்கு விசேஷ வருமானங்களும் முன்னேற்றமும் உண்டு. குடும்பத்திலிருந்து சிலர் பிரிந்து தனிக் குடித்தனம்

போகவும் கூடும்.

### 6ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களிலும் பேரும், புகழும் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும் கணவன், மனைவி இடையே இணக்கமும் நெருக்கமும் கூடுதலாகும்.சிலருக்கு புதிய வண்டி வாகனம் வாங்கவும் யோகம் உள்ளது. எதிர்பாராத வகையில் அதிர்ஷ்டகரமான வகையில் கணிசமான பெருந்தொகை கைக்கு கிட்டிடும். அரசியல் அனுகூலமும் ஆதாயமும் கிட்டிடும்.

### 9ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

செய்தொழிலில் உடலுழைப்பின் சிரமத்தைக் குறைக்கும். அதே சமயம் தாக்குப் பிடித்து செய்யக்கூடிய ஊக்க சக்தியையும் கொடுக்கும், உழைப்பு வீண் போகாமல் அதற்கான உபயோகத்தையும் ஊதியத்தையும் உடனடியாக உரிய அளவில் கிடைக்க வைக்கும். ஆதாயமாக பயணங்களையும் சிலருக்கு வெளிநாட்டு பிரயாண வாய்ப்பையும் கூட ஏற்படுத்தும்.




### சனி பகவான் 2.11.2014 முதல் 28.11.2014 வரை விசாகம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

குருவின் நட்சத்திரமான விசாகத்தில் சனி சஞ்சரிக்கும் காலத்தில் கடினமான வேலைகளையும் சுலபமாகச் செய்து முடிப்பீர்கள். வருமானம் சீராக இருப்பதால் கடன்கள் ஏற்படாது. செய்தொழிலில் ஏற்படும் போட்டிகளை சாதுர்யத்துடன் எதிர் கொள்வீர்கள். தெய்வ வழிபாட்டில் நம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். பணப் புழக்கம் நன்றாக இருக்கும். என்றாலும் அதற்கேற்ற செலவுகளும் உண்டாகும். அதனால் அனாவசிய செலவுகளைத் தவிர்த்து, முக்கியமான செலவுகளை மட்டுமே செய்யவும்.

### சனி பகவான் 29.11.2014 முதல் 26.12.2015 வரை அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

சனியின் நட்சத்திரமான அனுசத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் எதிர்பாராத பயணங்களால் அதிர்ஷ்ட வாய்ப்புகளைப் பெறுவீர்கள். உத்யோகஸ்தர்கள் கடுமையாக உழைத்தாலும் அதில் மேலதிகாரிகள் குற்றம் காண வாய்ப்புண்டு. அதேசமயம் சக ஊழியர்கள் உங்களுக்கு உறுதுணையாக நிற்பார்கள். இதனால் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்கு அலுவலக ரீதியாக வெளியூரில் சில காலம் தங்கிப் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகும். அலுவலகத்திலிருந்து கடன் கிடைத்து வாகனம் வாங்கும் யோகமும் பலருக்கு அமையும்.

### சனி பகவான் 27.12.2015 முதல் 24.01.2017 வரை கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனி சஞ்சரிக்கும் இந்தக் காலத்தில் புதிய முதலீடுகளைக் கூட்டாளிகளைக் கலந்தாலோசித்த பிறகே செய்யவும். தேவைக்கேற்ற சரக்குகளை மட்டுமே வாங்கி விற்கவும். அதேசமயம் சந்தைகளில் போட்டிக்குத் தகுந்தவாறு விலையை நிர்ணயித்து இலாபமடைய நிறையவே வாய்ப்புகள் உள்ளன. விவசாயிகள் நல்ல விளைச்சலைக் காண்பீர்கள். புதிய குத்தகைகளை நாடிச் செல்வீர்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்வீர்கள். வங்கிக் கடன்களும் கிடைக்கும். அதேநேரம் கால்நடைகளுக்கு சற்று கூடுதலாக செலவு செய்ய நேரிடும்.

**தொழிலாளர்கள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி 12இல் சஞ்சாரம் செய்வதாலும் புதிய கொள்முதல் மூலம் சிறப்பான வருமானத்தை அடைய கடின முயற்சி தேவை. புதிய முயற்சி வெற்றி தரும். எதிரிகளின் பலம் கூடும். புதிய முயற்சியிலும் ஈடுபடலாம். கூட்டு சேர்வது மிகவும் சோதனைகளை ஏற்படுத்தும், திடீர் திருப்பமும் மாற்றமும் உண்டாக்கும்.

**பணியாளர்கள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி 12இல் சஞ்சாரம் செய்வதாலும் உத்தியோக உயர்வும் வருமான உயரவும் விரும்பிய இடத்திற்கு மாற்றம் யாவும் நடைபெற கடின முயற்சி தேவை. சக ஊழியர்கள் ஒத்துழைப்பு குறைவாகக் காணப்படும். சிலருக்கு வெளிநாட்டில் தொழில் அமையும். செய்யும் வியாபாரத்தில் சிறப்பான அளவில் இலாபத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்கித் தர கடின முயற்சி தேவை.

**கலைஞர்கள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி 12இல் சஞ்சாரம் செய்வதாலும் கலைஞர்களுக்கு, அருமையான சந்தர்ப்பங்களை அடைந்து அதன் மூலம் நிறைவான வருமானத்தை அடைய கடின முயற்சி தேவை. மகத்தான சாதனைகளைப் படைக்கும் சிறப்புமிக்க கலைஞராகத் திகழ்வீர்கள். கலைத் தொழிலில் நிலைத்த நீடித்த நிலை பெறுவீர்கள்

**அரசியல்வாதிகள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி 12இல் சஞ்சாரம் செய்வதாலும் அரசியல்வாதிகளுக்கு கௌரவம், புகழ், பதவி பெருமை யாவும் கூட எச்சரிக்கை அதிகம் தேவையான காலமாகும். நல்ல நிலை அடைய கடின முயற்சி தேவை

**மாணவர்கள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி 12இல் சஞ்சாரம் செய்வதாலும் கல்வியில் நல்ல ஊக்கமும் உற்சாகமும் உயர்ந்த மதிப்பெண்களும் பெற்று பெற்றோர் மற்றும் பலரது பாராட்டையும் பெற பெருமை அடைய கடின முயற்சி தேவை. தொழிற் கல்வி யோகம் உண்டாகும் கெட்ட நண்பர்கள் சேர்க்கை தவிர்க்கவும். சிலர் உல்லாசப் பயணம் மேற்கொள்வீர்கள்.

**விவசாயிகள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி 12இல் சஞ்சாரம் செய்வதாலும் அரசு வழியில் விவசாய அபிவிருத்தித் திட்டங்களும் முழு ஒத்துழைப்பும் உண்டாக நல்ல நிலையை அடைய கடின முயற்சி தேவை.



**பெண்கள்:** ஏழரைச் சனி காலம் என்பதாலும், சனி 12இல் சஞ்சாரம் செய்வதாலும் பெண்களுக்கு குடும்பத்தில் சுபகாரிய செலவுகளும், பலிதங்களும் ஏற்படும். ஆடை ஆபரணங்கள் சேர்க்கை, முயற்சிகளில் வெற்றி உண்டாக சந்தோஷமும், மகிழ்ச்சியும், நிறைவாகக் காணப்படும். படித்த பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். மற்றவர்களுக்கு கடன் கொடுப்பது ஜாமீன் கொடுப்பது கண்டிப்பாய் கூடாது. பெண்களுக்கு மனதில் உண்டாகிய ஆசைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சந்தோஷத்திற்கு குறைவிருக்காது. தன வரவு கூடும். குடும்பத்தில் நல்ல சம்பவம் நடைபெறும்.

## சனி வக்கிரப் பலன்கள்:

**15.03.2015** முதல் **02.08.2015** வரையும் **26.03.2016** முதல் **12.08.2016** வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ்சரிக்கிறார்.

பூர்வீக சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் வீண் விவகாரங்கள் வழக்கு கோர்ட் வியாஜ்ஜியங்கள் உண்டாகலாம். தந்தை வழி உறவுகள் பகைமை தேடிக் கொள்ளவும் கூடும். நண்பர்கள், உறவினர்களிடையே மனஸ்தாபம் ஏற்படும். கடன் தொந்தரவு கட்டுப்படும். போட்டி, பொறாமை, எதிர்ப்புகள், முறியடிக்கப்படும். தொழில் துறை முன்னேற்றம் பணியாட்களின் ஒத்துழைப்பால் அபிவிருத்தி, அதிகார பொறுப்பு பொருள் சேர்க்கை சுக யோகம் அடிப்படையான சுக சௌகர்யங்களும், வசதிகளும் கூடுதலாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்து வந்த பிணக்குகளும் அபிப்பிராய பேதங்களும் மறையும். பிரிந்திருந்த தம்பதிகளும் ஒன்று சேரும் வழி ஏற்படும்.

## நட்சத்திரப் பலன்கள்:

### மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்:

ஆன்மிகத்தில் புதிய விஷயங்களை அறிந்துக் கொள்வீர்கள். தர்ம காரியங்களுக்குச் செலவு செய்வீர்கள். பொருளாதார வளம் சிறப்பாக இருப்பதால் புதிய வீடு, வாகனம், ஆடை, ஆபரணங்களை வாங்குவீர்கள். உங்கள் தைரிய ஸ்தானத்தில் சனியுடன் அமர்ந்த இராகு பகவான், உங்கள் சகோதர வழியில் சில அனுகூலங்களை உண்டாக்குவார். நண்பர்களிடம் மன உறுதியுடன் தெளிவாகப் பேசுவீர்கள். உங்களைப் பற்றிப் புறம் பேசும் நபர்களை அடையாளம் கண்டு, அவர்களிடமிருந்து நாசூக்காக விலகி விடுவீர்கள்.

### பூராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்:


நீங்கள் சார்ந்திருக்கும் துறையில் நன்றாகவே முன்னேறுவீர்கள். சிலருக்கு நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளின் சூழ்ச்சிகளில் சிக்கும் சூழல் ஏற்படலாம். ஆனாலும் முருகக் கடவுளின் அருளால் காப்பாற்றப்பட்டு விடுவீர்கள். அரசாங்கம் வாயிலாக சிறு கஷ்டங்கள் ஏற்பட்டாலும் அவை விரைவில் மறைந்துவிடும்.

### உத்திராடம் நட்சத்திரம் 1ஆம் பாதத்தில் பிறந்தவர்கள்:

உத்யோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கத் தொடங்கும். உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெறுவதில் தடை ஏற்படாது. சக ஊழியர்கள் உங்களிடம் பொறாமை கொள்ளலாம். எடுத்த காரியங்களில், சில சந்தர்ப்பங்களில் கால தாமதம் ஏற்படலாம்; உடலில் சோர்வும், மனதில் தெளிவின்மையும்கூட உண்டாகலாம். வெளியூர் அல்லது வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். இக்காலகட்டம், உங்களை கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்க வைப்பார் சனி பகவான். நெடு நாளைய பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். நிலையான புகழும், பெருமையும் அடைவீர்கள்.

## பரிகாரம்:

சனி பிரீதி செய்துக் கொள்ளவும். விநாயகர் கவசம் படிக்கவும். படிக்கும் குழந்தைகளுக்கு உரிய தானம் செய்யவும். துன்பங்கள் விலகி இன்பங்கள் உங்கள் வாழ்வில் இணைந்திடும். காரிய சித்திக்கு வீரிய சக்தி உருவாகிடும்.




இராசி மண்டலத்தில் 10வது இராசி மகரம். சனி பகவானின் ஆட்சி வீடு. கால புருஷ தத்துவத்தின்படி உங்கள் இராசி 10வது இராசி மகர இராசி. எதற்கு எடுத்தாலும் அலட்டிக் கொள்ளாமல் அடுத்தவர்களைப் பகைத்துக் கொள்ளாமலும் பக்குவம் பார்த்து பழகுவீர்கள். வீட்டு நலன்களைக் காட்டிலும் நாட்டு நலன்களையே கருத்தில் கொண்டு அதிகம் அதைப் பற்றியே யோசிப்பீர்கள். வாழும் வாழ்க்கையில் வரலாறு படைக்க வேண்டும் என்ற சிந்தனைகள் அதிகம் கொண்டவர்கள். சோதனைகளைக் கூட சாதனைகளாக மாற்றிக் காட்டுவீர்கள். உங்களை யாராலும் அழிக்க முடியாது. ஆனால் நீங்களே உங்களுக்கு எதிரி என்பதனை மறவாதீர்கள். ஏதேனும் ஒரு செயலை செய்யும் வரை முனைப்புடன் செயல்படும் நீங்கள் இலக்கினை அடைந்தவுடன் வேகம்குறைந்து இலாபத்தை இழப்பீர்கள். 12இராசிகளில் மனிதாபிமானம் அதிகமுள்ள இராசி மகர இராசியாகும். பகட்டான வாழ்வு என்ன என்பதனையே அறியாதவர்கள் நீங்கள்.

எந்தவொரு செயலாக இருந்தாலும் சரி தாமே அதனை முன்னின்று ஒரு வேள்வியாக ஏற்று நடத்துவீர்கள், பொதுகாரியமாக இருந்தாலும் சரி, அல்லது உத்தியோகமாக இருந்தாலும் சரி, உங்களுக்கு கீழ் மட்டத்தில் உள்ளவர்களைக் கூட முன்னுக்கு கொண்டு வருவதில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். அதுவே உங்களுக்கு எதிர்காலத்தில் உங்களுக்கு தர்மசங்கடமாகவும் மாறும் என்பதில் ஐயமில்லை.


சனி பகவான் திருக்கணிதப்படி 02.11.2014 ஞாயிற்றுக்கிழைமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8:54 மணிக்கு துலாம் இராசியில் இருந்து விருச்சிக இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். வாக்கியப்படி 16—12—2014 அன்று பெயர்ச்சி ஆகிறார்( திருநள்ளாறு விஷேசம்).

இதுவரை ஜீவனஸ்தானமெனும் 10ஆம் இடத்தில் சஞ்சரித்த சனிபகவான் இனி இலாபஸ்தானமெனும் 11ஆம் இடத்தில் சஞ் சரிக்க இருக்கிறார். 11ஆம் இடம் என்பது சனிக்கு இராஜ சிம்மாசனம் மாதிரி மிகப்பெரிய அளவிலான இராஜயோகம் என்பது உங்களை நோக்கி வெகு வேகமாக வந்து கொண்டிருக்கிறது. உங்கள் வாழ்க்கைப் பாதையில் நீங்கள் இதுவரை கண்டிராத அதிர்ஷ்டயோகங்களை இனி பார்க்கப் போகிறீர்கள்.

இதுவரையில் 10ஆம் இடத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த சனிபகவான் பலவகையில் பாதிக்கப்பட்டிருந்த இந்த இராசியினருக்கு 11ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் போது உண்டாகும் பலன்கள் இவர்களுக்கு அற்புதமாக அதிர்ஷ்டகரமாக அமோகமாக அமைகிறது. இந்த இராசியினருக்கு யோக கோச்சார காலம் ஆரம்பமாகிவிடுகிறது என்று தான் சொல்ல வேண்டும். இந்தக் காலக்கட்டத்தில் இந்த இராசி நேயர்கள் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத வகையில் நல்ல மாறுதலான நன்மையான திருப்பங்கள் வாழ்க்கையில் உண்டாகி வளமும், செழிப்பும், சந்தோஷமும் தரும் வகையில் சுபயோக சுபபலன்களை சனிபகவான் வாரி வழங்கும் வள்ளலாக இருந்திடுவார் என்று சொன்னால் அது மிகையாகாது. பலவகையிலும் வளமான செழிப்பும், சுபீட்சமும் நிறைந்த அதிர்ஷ்டகரமான யோகப்பலன்களும், புகழும் பெருமையும் பொருளாதார நிலையில் உயர்வும், வருமான வசதி வாய்ப்புகள் அதிகரிப்பதோடு வெற்றி வாய்ப்புகள் கை கூடும். சிறப்பான அந்தஸ்தும், மரியாதையும் உயர்ந்திடும்

### சனிப்பெயர்ச்சி பார்வைப் பலன்கள்:

உங்கள் இராசிக்கு 11ஆம் இடத்தில் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை இராசிக்கு 1, 5, 8 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் எல்லாம் மாற்றமடைகின்றன.




### 1ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

முயற்சிக்கும் காரியங்களில் இருந்து வந்த குறைபாடுகள், கோளாறுகள், குழப்பம், குதர்க்கம், முட்டுக்கட்டைகள் எல்லாம் விலகும். தவறான அபிப்பிராயத்திற்கும், அசந்தர்ப்பவசமான கெட்ட பெயருக்கும் ஆளாகி வந்த இருண்ட நிலவரத்திலிருந்து வெளிச்சத்துக்கு வருவீர்கள்.

வெளிவட்டாரப்பழக்க வழக்கங்களிலிருந்து கலகலப்பான, சாதுர்யமான, சாமர்த்தியமான பேச்சு வார்த்தைகள் மூலம், சகாயம், சந்தோஷம், கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகள் நிறைய உண்டு. பொதுவாக பலவகையிலும் பலவிதத்திலும் பணவசதி அதிகரித்து விடவும் கூடும்.

**மதிப்பெண்கள்**
**90**
**100**

### 5ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

பூர்வீக சொத்திலிருந்து ஆதாயம் கிடைக்கலாம். எதிர்பாராத வகையில் கணிசமான பெருந்தொகைகள் கூட கைக்கு கிட்டிடும். இது அவரவர் ஜாதக யோகத்தைப் பொறுத்தே இந்த பாக்கியம் கிட்டிடும். எனவே ஜீவன சம்பந்தமான செய்தொழில், வியாபாரம், உத்தியோகம் போன்றவற்றில் இதுவரை இருந்து வந்த குறைகோளாறுகள், குழப்பம், குதர்க்கம், பிக்கல், பிடுங்கல், சிக்கல், சிரமம், சோதனை, வேதனைகள் எல்லாம் சூரியனைக் கண்ட பனிப்போல் மறைந்துவிடும். சூட்சுமங்களைப் புரிந்துக் கொண்டு சூபீட்சத்தைப் பெற்றிடலாம்.

### 8ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

பொருளாதாரத்தில் எழுச்சியும், வளர்ச்சியும், செழிப்பும், உயர்வும் பெறுவதால் வாழ்க்கையில் அடிப்படை வசதிகள் மட்டுமில்லாமல் ஆடம்பரமான வசதிகளையும் அனுபவிப்பீர்கள். குடும்ப சந்தோஷம் அதிகரித்துக் காணும். சுபகாரியங்கள் சிறப்பாக நடைபெறும். புத்திரப் ப்ராப்தியும், புத்திரர் புத்திரிகளால் மேன்மையும் உண்டாகும். சொந்த மனை, வீடு, மனை யோகம் ,சொந்தம் உண்டு. பந்தம், உற்றார், உறவினர் அனைவரும் பாராட்டுவார்கள். இப்படி அனைத்து சுபயோக சுபபலன்கள் போல அனைத்து யோகபாக்கியங்களும் உங்களை வந்தடையும்.

### சனி பகவான் 2.11.2014 முதல் 28.11.2014 வரை விசாகம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

குருவின் நட்சத்திரமான விசாகத்தில் சனி சஞ்சரிக்கும் காலத்தில் பேச்சாற்றல் அதிகரிக்கும்; தன்னம்பிக்கை உயரும். உங்களின் எண்ணங்களை அடுத்தவர்கள் நல்ல முறையில் புரிந்துக் கொள்வார்கள். புதிய பொறுப்புகள் தாமாகவே தேடி வரும். வருமானம் நல்ல முறையில் வந்தாலும், சிலருக்கு குறுக்கு வழியில் செல்ல மனம் நினைக்கும். எனவே மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு நேர் வழியில் செல்லவும். இதன்மூலம் பல பிரச்சினைகளிலிருந்து தப்பிக்கலாம். உத்யோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் நல்ல முறையில் இருக்கும்.

### சனி பகவான் 29.11.2014 முதல் 26.12.2015 வரை அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

சனியின் நட்சத்திரமான அனுசத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் உத்யோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் நல்ல முறையில் இருக்கும். இதனால் மனதில் புத்துணர்ச்சி அதிகரிக்கும். உங்கள் தோற்றத்தில் பொலிவு உண்டாகும். சிலர் நெடுநாட்களாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வைப் பெறுவார்கள். மேலும் அலுவலக ரீதியான பயணங்களால் நன்மை உண்டாகும். உங்களின் வேலைகளைச் சரியாகத் திட்டமிட்டு செய்வீர்கள். மேலிடத்தின் நம்பிக்கைக்கு உரியவராக உயர்வீர்கள்.

### சனி பகவான் 27.12.2015 முதல் 24.01.2017 வரை கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனி சஞ்சரிக்கும் இந்தக் காலத்தில் பெயரும், புகழும் வளரும். புதிய பதவிகள் உங்களைத் தேடி வரும். பயணங்களால் நன்மை உண்டாகும். உங்களின் கடமைகளை சுறுசுறுப்புடன் செய்வீர்கள். தொண்டர்களின் ஆதரவுடன் பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வீர்கள். ஆயினும் எவரையும் பகைத்துக்கொள்ளாமல் உங்களின் வேலைகளில் மட்டுமே கவனமாக இருக்கவும். கலைத்துறையினருக்கு புகழும், பாராட்டும் கிடைப்பதில் சற்று தாமதம் ஏற்படும். சக கலைஞர்களிடம் உங்களின் இரகசியங்களைப் பகிர்ந்துக்கொள்ள வேண்டாம்.

**தொழிலாளர்கள்:** சனி பகவான் இலாப ஸ்தானமான 11இல் சஞ்சரிப்பதால் உங்களுக்கு பொருளாதார நிலை மிகவும் அற்புதமாக இருக்கும். எடுக்கின்ற எல்லா காரியங்களிலும் வெற்றி கிட்டும். பெரிய தொழில் துறையில் இருப்போருக்கு நல்ல இலாபம் முன்னேற்றம் கொடுக்கும். எதிர்பாராத தன சேர்க்கை, திடீர் திடீர் என்று ஏற்படும். அரசு வழியில் அனுகூலப் பலன்கள் ஏற்படும்.சிலருக்கு திடீர் என்று ஸ்திர சொத்து சேரும். நினைத்த காரியம் வெற்றி உண்டாகும்.


**பணியாளர்கள்:** சனி பகவான் இலாப ஸ்தானமான 11இல் சஞ்சரிப்பதால் படித்து முடித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு நல்ல வேலை தேடி வரும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு தகுந்த நேரத்தில் கிடைக்கும்.அரசு உத்தியோகத்தில் இருக்கும் சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும். ஆடை, ஆபரண அலங்காரப்

பொருட்களில் அதிக ஆதாரம் கிடைக்கும். வெளிநாடுத் தொழிலில் மிகுந்த இலாபம் தரும். கடன் தீரும். எது எப்படி இருந்தாலும் உங்களின் தேவைகளை சாமர்த்தியமாகப் பூர்த்தி செய்துக் கொள்வீர்கள்.

**கலைஞர்கள்:** சனி பகவான் இலாப ஸ்தானமான 11இல் சஞ்சரிப்பதால் புதிய வாய்ப்புகள் கிடைத்த வண்ணம் இருக்கும். சிலருக்கு அரசு வழியில் பரிசு, பாராட்டு கிட்டும். இசை பாடல்கள் போன்ற துறையில் இருப்போருக்கு வெற்றிகள் கிடைக்கும்.

**அரசியல்வாதிகள்:** சனி பகவான் இலாப ஸ்தானமான 11இல் சஞ்சரிப்பதால் வெற்றிகள் குவியும். உங்களில் சிலருக்கு வெளியூர்ப் பயணங்கள் ஏற்படும். எதிரிகள் பலம் குறைந்து உங்கள் பலம் கூடும். திடீர் தன வரவு உண்டாகும். புதிய முயற்சி பரிபூரண வெற்றி தரும்.

**மாணவர்கள்:** சனி பகவான் இலாப ஸ்தானமான 11இல் சஞ்சரிப்பதால் மாணவர்களுக்கு கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஆசிரியர்கள் மிக அன்புடன் உதவுவார்கள். அதிக மதிப்பெண் பெற்று ஆசிரியரும், பெற்றோரும் வியக்கும் வண்ணம் நடந்துக் கொள்வீர்கள். வெற்றிகள் குவியும். உங்களில் சிலருக்கு வெளியூர்ப் பயணங்கள் ஏற்படும். திடீர் தன வரவு உண்டாகும். புதிய முயற்சி பரிபூரண வெற்றி தரும்.



**விவசாயிகள்:** சனி பகவான் இலாப ஸ்தானமான 11இல் சஞ்சரிப்பதால் விவசாயிகளுக்கு கடன்கள் குறையும். பயிர் நிலையில் மனத் திருப்தி உண்டாகும். தொல்லைகளைத் திறமையுடன் சமாளித்து விடுவீர்கள். தானிய உற்பத்தியால் கனிசமான ஆதாரம் உண்டாகும்

**பெண்கள்:** சனி பகவான் இலாப ஸ்தானமான 11இல் சஞ்சரிப்பதால் ஆடை ஆபரணச் சேர்க்கை ஏற்படும். வெளிநாட்டு பொருட்களும் வந்து சேரும். கணவன்—மனைவி உறவு சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சி பல நடைபெறும். புத்திர வழியில் சந்தோஷம் தரும். குடும்ப வாழ்கை மிகவும் சந்தோஷமாக இருக்கும். நீங்கள் எதிபார்க்கும் காரியம் வெற்றி கொடுக்கும். தன வரவு உண்டாகும்.

## சனி வக்கிர பலன்கள்:

**15.03.2015** முதல் **02.08.2015** வரையும் **26.03.2016** முதல் **12.08.2016** வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ்சரிக்கிறார்.

முயற்சிக்கும் காரியங்களில் ஒத்துவரவில்லை யென்றால் அந்த பிரச்சினையை விட்டுவிட்டு அடுத்த விஷயத்துக்கு தாவி விட வேண்டும். செய்தொழில், வியாபாரம், வணிகம், ஜீவனம் எதுவானாலும் இக்கட்டும்,இடைஞ்சலும் எற்படுவதால் எதையும் கிண்டி கிளறிக் கொண்டிருக்காமல் பெருந்தன்மையோடு விட்டுக் கொடுத்து நடந்துக் கொள்வது நல்லது. வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில் எதிர்பார்க்கிற அளவுக்கு கலகலப்போ ஒத்துழைப்போ கிடைப்பது கஷ்டம். பண விஷயத்திலும் பல விதமான சங்கடங்கள் ஏற்படலாம், பொன் பொருள்களை அபிவிருத்தி செய்துக் கொள்வதும் சுலபமாக இருக்காது.

## நட்சத்திர பலன்கள்:

### உத்திராடம் நட்சத்திரம் 2,3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்:

உத்தியோகஸ்தர்களுக்கு கை நிறைய சம்பளம் என்றாலும் குடும்ப செலவினங்களுக்கு பற்றாக்குறை நிலைமை தான் புதிய கடன்கள் உண்டு. பழைய கடன் பாதிப்பு எதுவும் தந்திடாது. சிலருக்கு இடமாற்றம் இலாகா மாற்றம் ஊர் மாற்றமும் ஏற்படுதலுமுண்டாகும். சிலருக்கு தற்காலிகமான பதவி உயர்வு எற்பட்டாலும்; இலாபம் எதுவும் இருந்திட ஞாயமில்லை.

### திருவோணம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்:


வருமானத்தைப் பெருக்குவதற்கு நல்ல பல வழிகள் உதயமாகும். நிதி நெருக்கடிகள் ஏற்படாது. குடும்பத்திலும் வெளி வட்டாரத்திலும் உங்கள் பேச்சுக்கு மதிப்பு உண்டாகும். எப்போதும் போல் சட்டத்தை மதித்து நடப்பீர்கள். இத்தன்மை, சில அன்பர்களுக்கு சாதகமான மேலிடத்துத் தொடர்புகளை உருவாக்கித் தரும்.

### அவிட்டம் நட்சத்திரம் 1,2இம் பாதங்களில் பிறந்தவர்கள்:

சூழ்நிலைக்கு ஏற்ப செயல்முறைகளை மாற்றிக் கொண்டு நன்மைகளைக் காண்பீர்கள். பந்தயங்கள், போட்டிகளிலும் வெற்றி வாகை சூடுவீர்கள். ஸ்பெகுலேஷன் போன்ற துறைகளின் மூலம் நல்ல வருமானம் வர, பிரகாசமான வாய்ப்புகள் தென்படுகின்றன. பெற்றோர் வழியில் நிலவி வந்த மனக் கஷ்டங்கள் தீர்ந்து, குடும்பத்தில் குதூகலம் நிறையும்.

## பரிகாரம்:

துர்க்கை வழிபாடு செய்யவும். துர்க்கா கவசம் படிக்கவும். துன்பங்கள் ஓடி மறையும். இன்பங்கள் யாவும் இணைந்தே கிடைத்திடும். காரியங்கள் யாவும் கலகலப்பை உண்டாக்கி குதுகலத்தைக் கொண்டு, குறைவில்லா வாழ்வை நிறைவாகத் தந்திடும்.




இராசி மண்டலத்தில் 11ஆம் இராசி கும்பம். சனியின் ஆட்சி வீடு. காலபுருஷ தத்துவத்தின்படி 11வது இராசி கும்ப இராசியாகும். உங்கள் இராசியின் அதிபதி சனிபகவான். சாஸ்திரங்கள் மற்றும் ஆன்மிகத்தில் அதிக நாட்டம் கொண்டுதிகழ்வீர்கள். கலை, கேளிக்கை ஆகியவற்றில் அதிக நாட்டம் கொண்டு காணப்படுவீர்கள். ஒற்றைப்படை இராசி, ஆண் இராசி, மற்றவர்களை தங்களின் நகைச்சுவை உணர்வின் மூலம் கவர்ந்து இழுக்கும் வல்லமை படைத்தவர்கள். தன்னைப் பற்றிய இரகசியங்களை அடுத்தவரிடம் பகிர்ந்துக் கொள்ளும் எண்ணம் இல்லாதவர்கள். ஏதாவது ஒன்றை சாதிக்க வேண்டும் என்று போராடும் குணமும், எதிர்த்தவரை ஏதாவது ஒன்று செய்ய வேண்டும் என்ற துணிவும், தனிமையில் விருப்பமும், தளராத தன்னம்பிக்கையும், கடினமாக உழைப்பதில் சந்தோஷமும், உங்களை உயர்ந்த ஸ்தானத்திற்கு கொண்டு வரும் என்பது திண்ணம். மனதில் உறுதியும், நெஞ்சில் நம்பிக்கையும், காரியத்தில் கணிவும், அனைவரையும் அடக்கி ஆளும் ஆளுமைத் திறன் கொண்ட நீங்கள் அன்புடன் வசீகரித்து இழுக்கும் வல்லமை கொண்டவர்கள் நீங்கள். எடுத்தெரிகின்ற எண்ணமும் பேச்சையும் குறைத்துக் கொண்டால் உங்களை அடித்துக் கொள்ள ஆளே இல்லை.


சனி பகவான் திருக்கணிதப்படி 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8:54 மணிக்கு துலாம் இராசியில் இருந்து விருச்சிக இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். வாக்கியப்படி 16—12—2014 அன்று பெயர்ச்சி ஆகிறார்( திருநள்ளாறு விஷேசம்).

இதுவரை 9இல் சஞ்சரித்து வந்த சனி இனி 10இல் சஞ்சரிக்க உள்ளார். 10இல் சனி பதவியை பறிக்கும். ஆகவே எச்சரிக்கையான செயல்பட்டால் இந்த இராசிக்காரர்களான நீங்கள் வாழ்க்கையின் உச்சத்திற்குப் போகலாம். உங்கள் தேக ஆரோக்கியம் அற்புதமாக இருக்கும். கடந்த காலங்களில் நீங்கள் சந்தித்த சோதனைகள் மாறி சந்தோஷமான பலன்கள் ஏற்படும்.

உங்கள் வலிமையும் வளமும் கூடும். கொடுக்கல் வாங்கலில் அனுகூலமும் எதிர்பார்த்த பொருள் வரவும், உண்டாகும். சிலருக்கு பண வரவில் அசையா சொத்து உண்டாகும். பிறருக்கு கடன் கொடுப்பது தவிர்க்கவும். செல்வம் செல்வாக்கு உண்டாகும். உத்தியோகத்தில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். எதிர்பாராத ஆதரவும் ஊதிய உயர்வும் உண்டாகும். மேல் அதிகாரிகளின் கெடுபிடி குறையும். வெளியூர், பயணத்தால் இலாபம் கிடைக்கும். வேலையில்லாத இளைஞர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். வெற்றி கிடைக்கும்.

### சனிப்பெயர்ச்சி பார்வைப் பலன்கள்:

உங்கள் இராசிக்கு 10ஆம் இடத்தில் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை இராசிக்கு 4, 7,12 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் எல்லாம் மாற்றமடைகின்றன.




### 4ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

பணவசதி கச்சிதமாக உயர்ந்து வரும். சிலர் வீடு, நிலம், மனை போன்ற ஸ்திர சொத்துக்கள் வாங்கிடவும் ஞாயமுண்டு. இனி புதுத்தெம்பும் உற்சாகமும் பிறக்கும். செய்தொழில், வியாபாரம், வணிகம், ஜீவனம் எதுவானாலும் ;கணிசமான பெருந்தொகை கிட்டிடும். ஸ்தம்பித்துப் போன ஜீவனம் சம்பந்தப்பட்டவை எதுவானாலும் சூடுபிடித்து முன்னேற்றமாக நடைபெறும்.

### 7ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

செய்தொழில், வியாபாரம், வணிகம், ஜீவனம் எதுவானாலும் திடீரென கணிசமன இலாபமும் எதிர்பாராத வகையிலே கிட்டிடவும் ஞாயமுண்டு. ஏற்கனவே நொடிந்து ஸ்தம்பித்துப் போன ஜீவனத்துறையை புதுப்பிக்க முயற்சித்தால் புதிய மாறுதலான நல்ல திருப்பம் ஏற்படும். கூட்டாளிகளிடம் மனக்கசப்பும் கலகங்களும் வீண் தகராறுகளும் உண்டாகி இறுதியில் நன்மையில் முடியும். சிலர் வெளிநாடு பயணமும் செல்லக்கூடும்.

### 12ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

அனுகூலமான சந்தர்ப்ப சூழ்நிலைகளால் இலாபகரமான வருமானப் பெருக்கம் அதிகரித்திடும். அரசாங்க சம்பந்தப்பட்ட

சலுகைகள், அனுகூலங்கள், மற்றும் ஒப்பந்தம் போன்றவைகளில் முன்னேற்றமும் கூடுதலான இலாபமும் இருக்கும். குடும்பத்தில் அதிர்ஷ்டகரமான யோகமான திருப்பம் இருந்து வரும். வாழ்க்கைத்தரம் உயர்வோடு மணவாழ்க்கையில் கணவன் மனைவி இடையே பரிபூரண தாம்பத்திய சுகத்தில் மகிழ்ச்சியும் மேலோங்கும்.பணவசதி கணிசமாக புரளும்

**சனி பகவான் 2.11.2014 முதல் 28.11.2014 வரை விசாகம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**




குருவின் நட்சத்திரமான விசாகத்தில் சனி சஞ்சரிக்கும் காலத்தில் அரசாங்கத் தொடர்புகள் உங்களுக்குச் சாதகமாகவே அமையும். நீண்ட தூரப் பயணங்களால் நன்மை உண்டாகும். கடுமையாக உழைத்துச் செய்யும் காரியங்களில் வெற்றிவாகை நிச்சயம். தார்மீகச் சிந்தனைகளை மேலோங்கச் செய்வார். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பெரியோர்களைச் சந்தித்து அவர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். உங்கள் உழைப்பு வீண் போகாது. இது நாள் வரை உடலில் இருந்த சோர்வும் அயர்ச்சியும் மறையும். தேக ஆரோக்யம் சீராக மாறும்.

**சனி பகவான் 29.11.2014 முதல் 26.12.2015 வரை அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

சனியின் நட்சத்திரமான அனுசத்தில் சனி சஞ்சரிக்கும் காலத்தில் உங்கள் செயல்களைப் புதிய உத்வேகத்துடன் செய்து முடிக்க வழி பிறக்கும். திட்டங்களைச் சரியாகத் தீட்டி அவைகளைப் படிப்படியாக, வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள். புதிய தொழில்களைத் தொடங்குவீர்கள். உங்கள் நண்பர்கள் உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார்கள்.

**சனி பகவான் 27.12.2015 முதல் 24.01.2017 வரை கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:**

புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனி சஞ்சரிக்கும் இந்தக் காலம் பெரியோர்களின் ஆதரவு எப்போதுமிருக்கும். ஓய்வு நேரத்தில் கேளிக்கைகளில் ஈடுபட்டு மகிழவும் சந்தர்ப்பங்கள் அமையும். எனினும் ஏழரை நாட்டு சனி பகவான் சமூகத்தில் நலிவடைந்தவர்களுக்கு சேவை செய்து புண்ணியம் ஈட்டும் வாய்ப்பையே வழங்குவார்.

## சனி வக்கிரப் பலன்கள்:

**15.03.2015** முதல் **02.08.2015** வரையும் **26.03.2016** முதல் **12.08.2016** வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ்சரிக்கிறார்.

இலாபம் அதிகரிக்கும். நண்பர்களையும், வாடிக்கையாளர்களையும் அரவணைத்துச் சென்று வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். கொடுக்கல், வாங்கலில் இருந்த தொய்வுகள் நீங்கி, மனதில் உற்சாகம் தோன்றும். அதேநேரம் வெளியில் கொடுத்திருந்த பணம் திரும்பவும் உங்கள் கைக்கு வந்து சேருவதில் தாமதம் ஏற்படும் என்பதால் புதிதாக யாருக்கும் கடன் கொடுக்க வேண்டாம்.

**தொழிலாளர்கள்:** சனி பகவான் தொழில் ஸ்தானமான 10இல் சஞ்சரிப்பதால் தொழில் மந்தம், வருவாய், இழப்பு, எதிரிகளால் சூழ்ச்சி போன்றவை உண்டாகும். நீங்கள் தெவையில்லாமல் பீதியால் முடங்கக்கூடும். புதிய தொழில் முயற்சிகள் வேண்டாம். நண்பர்களால் தொல்லை உண்டாகும். கடன் வாங்க வேண்டாம். குறிப்பாக பிறர் காரியங்களில் தலையிட வேண்டாம். வியாபாரிகளுக்கு, எதிலும், நிதானம் தேவை. வியாபாரம் சுமாராக இருக்கும். பொருள் வரவு திருப்திகரமாக இருக்காது. தொழில் போட்டியும், பொறாமையும் உண்டாகும். புதிய முயற்சியைத் தவிர்க்கவும். கூட்டுத்தொழில் யோகம் கொடுக்காது.

**பணியாளர்கள்:** சனி பகவான் தொழில் ஸ்தானமான 10இல் சஞ்சரிப்பதால் எந்த விஷயம் ஆனாலும் கொஞ்ச காலத்திற்கு ஒதுங்கிப் போவது நல்லது. போராட்டங்களை வலியச் சென்று எதிர்கொள்ள வேண்டாம். உத்தியோகம் செய்யும் இடத்தில் வீண் மனஸ்தாபம் உண்டாகும். தொழிலில் சிறிது மாற்றம் ஏற்படுத்தும். அரசு ஊழியர்கள் உத்தியோக உயர்வு பெறுவார்கள்.

**கலைஞர்கள்:** சனி பகவான் தொழில் ஸ்தானமான 10இல் சஞ்சரிப்பதால் புதிய வாய்ப்புக்கள் கிடைக்க தடை ஏற்படலாம். இதனால் மன நிம்மதி இருக்காது. அலைச்சல் மனக்குழப்பம் ஏற்படும். செலவுகள் அதிகமாகும். தொழிலில் போட்டி உண்டாகும்.

**அரசியல்வாதிகள்:** சனி பகவான் தொழில் ஸ்தானமான 10இல் சஞ்சரிப்பதால் பணவரவு சுமாராக இருக்கும். வீண் பயணங்கள் உண்டாகி மன அமைதியைக் குறைக்கும். எதிலும், ஒரு எதிர்ப்பு உண்டாகி விலகும். மறைமுகமான எதிர்ப்புக்களால் மனவருத்தம் உண்டாகும். வம்பு வழக்கும் உண்டாகக் கூடும். எச்சரிக்கை தேவை.

**மாணவர்கள்:** சனி பகவான் தொழில் ஸ்தானமான 10இல் சஞ்சரிப்பதால் கல்வியில் கவனமாக இருங்கள். புதிய நண்பர்களிடம் எச்சரிக்கைத் தேவை. அதிக தூரம் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டியது. உடல் நலம் சிறிது பாதிக்கும். சிலருக்கு தேவையற்ற பயணம் உண்டாகி தன விரயம் உண்டாகும். உங்களுடைய நெருங்கிய நண்பர்கள் உங்களுக்குக்குத் தொந்தரவும் தொல்லையும் கொடுப்பார்கள். புதிய,முயற்சியில்

ஈடுபடுவதைத் தவிர்க்கவும்

**விவசாயிகள்:** சனி பகவான் தொழில் ஸ்தானமான 10இல் சஞ்சரிப்பதால் விசாயிகளுக்கு அரசு வழியில் ஏற்படும் நன்மைகள் குறையும். அல்லது தாமதம் ஆகும். நண்பர்கள். உறவினர்களால் உங்களுக்கு நற்பலன் உண்டாகாது. புதிய திட்டம் எதுவும் வேண்டாம்

**பெண்கள்:** சனி பகவான் தொழில் ஸ்தானமான 10இல் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் கவலைகள் தரக்கூடிய சம்பவங்கள் நடந்து மனதில் கவலைகள் ஏற்படும். எடுக்கும் எந்த முயற்சியும் வெற்றியைத் தராது. சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். கணவன்—மனைவி உறவு சுமூகமாக இராது. குடும்பத்தில் நிறையச் செலவுகள் உண்டாகும் திடீர் கடன் வாங்கும் பயணம் ஏற்படும். அதனால் நற்பலன் உண்டாகாது. சில பிரச்சனைகளால் வருத்தமும் சங்கடமும் ஏற்படும். சிலருக்கு திடீர் தன விரயம் உண்டாகும்.

## நட்சத்திரப் பலன்கள்:

### அவிட்டம் நட்சத்திரம் 3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்:

ஆலயத் திருப்பணிகளிலும், தர்ம காரியங்களிலும் ஈடுபடுவீர்கள். வருமானம், எதிர்பார்ப்பிற்கும் அதிகமாகக் கிடைக்கும். தேக ஆரோக்யம் சீராக இருக்கும். சமூகத்தில் உயர்ந்தவர்களின் நட்பும், ஆதரவும் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து வரும் நல்ல செய்திகள் உங்களின் செவிகளைக் குளிர்விக்கும்; ஆதாயமும் நல்கும். உங்களின் சுய முயற்சியின் அடிப்படையில் செயற்கரிய காரியங்களைச் செய்வீர்கள். உங்களால் சகோதர, சகோதரிகளுக்கும் நன்மை உண்டாகும்.

**சதயம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்:** செய்தொழிலில் தினமும் வருமானம் வந்துக்கொண்டே இருக்கும். இந்த இராசி வாசகர்களில் சிலருக்குப் புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். உங்கள் உழைப்புக்கு மேல் இரு மடங்கு வருமானத்தைத் தருவார்; மற்றவர்களைத் தலைமை தாங்கி வழி நடத்திச் செல்லும் அளவிற்கு உயர்வீர்கள்.

### பூரட்டாதி நட்சத்திரம் 1,2,3ஆம் பாதங்களில் பிறந்தவர்கள்:

கல்வி, கேள்விகளில் அரிய சாதனைகள் புரிய வாய்ப்பு கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். செல்வத்தோடு செல்வாக்கும் உயரும். எதிர்பாராத இடங்களிலிருந்து தக்க உதவிகளைப் பெறுவீர்கள். உங்களின் தன்னம்பிக்கை உயரும். பேச்சில் வசீகரமும், நடையில் கம்பீரமும் ஏற்படும். தத்துவ ஆராய்ச்சிகளில் ஈடுபட மனம் விழையும். உங்களின் செயல்களை முறைப்படுத்திச் செய்வீர்கள்.

## பரிகாரம்:

இலட்சுமி வழிபாடு செய்யவும். கோ பூஜை செய்யவும். கனகதார சுலோகம் படிக்கவும். தோஷங்கள் யாவும் விலகி நன்மைகள் யாவும் நல்கிடும். பிரச்சனைகள் விலகி வாழ்க்கையின் பிடியில் வளம் பெறலாம்.


முழுவதும் விந்தையான நினைத்ததை நிறைவேற்றும்

அற்புத சித்த மோதிரம் இலவசம்



அப்படி தாங்கள் ஏதேனும் துயரால் சிக்கியிருப்பின் கவலைப்பட வேண்டாம். உடன் எங்கள் ஆசிரம மோதிரம் பெற்று அணிந்தாலோ அல்லது உடன் வைத்திருந்தாலோ நீங்கள் விரும்பும் ஆண் / பெண் இதயத்தை கவரும், யாருடைய பெயரை உச்சரிக்கின்றீரோ அவர் எத்தனை கல்நெஞ்சம் படைத்தவராயிருப்பினும் தங்கள் காலடியில் வந்து விழுவார். மேலும் தங்கள் விருப்பத்தின்படி பணிந்து நடப்பர், வியாபாரத்தில் லாபம், பரீட்சையில் வெற்றி, மனதுக்கேற்ற திருமணம், புத்திரபாக்யம், லாட்டரி சீட்டில் பரிசு, வீட்டில் சண்டை சச்சரவு, நோய் நொடி, கடன் பிரச்சனை முதலான குறைகளிலிருந்து விடுதலை. ஆரோக்கியத்தில் அனுகூலம், நினைவாற்றல் கூடுதல், வேலையில் பதவி உயர்வு, வழக்குகளில் வெற்றி, இழந்த பொருட்கள் திரும்ப கிடைத்தல், இவ்வாறு நாளொருமேனி பொழுதொரு வண்ணம் முன்னேற்றம் அடைந்து எல்லா காரியம் வெற்றியுடன் நடந்து முடியும். இந்த அற்புத சித்த மோதிரம் தற்போது எங்களது ஆசிரம விசே யாகத்தை முன்னிட்டு சில நாட்களுக்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படும். பெற விரும்புவோர் பெயர், விலாசம் மற்றும் ஒன்றிலிருந்து ஒன்பதுக்குள் ஓர் எண்ணையும் மறக்காமல் எழுதவும். **தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

N. SUBRAMANI THANTRIC
VENKATAPURAM, GUDIYATHAM (VELLORE) - 632 602.
PH : 04171 - 229015, CELL : 98653 71667

ADVT




இராசி மண்டலத்தில் 12 வது வீடு மீனம். குருவின் ஆட்சி வீடு. நமது விண்ணின் 330 முதல் 360 பாகைகளைக் குறிக்கும் இராசியாகும். 12வது இராசி மீனம். குருவின் ஆட்சி வீடு மீனம். புதன் நீசம் ஆவதும் சுக்கிரன் உச்சமாவதும் இந்த மீன இராசியில் தான்.

அமைதியான குணத்திற்கு பெயர் போனவர்கள் யார் என்றால் அது மீன இராசியில் பிறந்தவர்களுக்கும் பொதுவாக பொருந்தும். அடாவடித்தனம் என்பது பொதுவாக இவர்களுக்கு ஆகாது. தேவ குரு இவர்கள் இராசிக்கு அதிபதியாக இருப்பதும் ஒரு காரணமும் கூட. கிரகங்களின் நன்மை அதிகம் செய்பவர் தேவ குரு மட்டுமே. நல்ல செயல்களும் நன்மைகளை மட்டுமே செய்யத் தெரிந்தவர் தேவ குரு. எனவே இவர் அதிபதியாக இருக்கும் இராசி கட்டத்தில் பிறந்த மீன இராசிக்காரர்கள் அது போன்ற குணத்துடன் இருப்பார்கள் என்பது பொதுவான விதி. ஆனால் முக்கியமான முடிவுகளை சுயமாக எடுப்பதற்கு இவர்கள் சரியானவர்கள் அல்ல. அப்படி சுயமாக இவர்கள் முடிவு எடுத்தாலும் அந்த முடிவுகள் பெரும்பாலும் தவறாகத் தான் முடியும். அதே நேரத்தில் முக்கியமான முடிவுகளை எடுக்கும் போது தங்கள் மீது மிகவும் அக்கறை கொண்ட குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களை கலந்து எடுத்தால் அந்த முடிவுகள் இவர்களுக்கு சாதகமாக முடியும். மற்றவர்கள் மீது அதிகம் இரக்கம் காட்டுவார்கள். இரக்க குணம் அதிகமாக இருக்கும். அதனால் தான் தானதர்மம் செய்வதில் மிகுந்த ஆர்வமுடையவர்களாக இருப்பர்.


சனி பகவான் திருக்கணிதப்படி 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி மாதம் 16ஆம் தேதி இரவு 8:54 மணிக்கு துலாம் இராசியில் இருந்து விருச்சிக இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். வாக்கியப்படி 16—12—2014 அன்று பெயர்ச்சி ஆகிறார்( திருநள்ளாறு விஷேசம்).

இதுவரை 8இல் சஞ்சரித்து வந்த சனி இப்போது உயர்வான பாக்கியஸ்தானமென்னும் 9ஆம் இடமான விருச்சிக இராசியில் சஞ்சரிப்பது சனியைப் பொறுத்தவரையில் நல்லதுதான். இதுவரை இந்த இராசியினரை பிடித்திருந்த அஷ்டமத்துச்சனி விலகிவிட்டார். எனவே 8ஆம் இடத்து சனியைவிட 9ஆம் இடச் சனி எவ்வளவோ மேல் என்றுதான் சொல்லவேண்டும்.

இதன்மூலம் இந்த இராசியினர்கள் அஷ்டமச்சனியின் பிடியிலிருந்து விடுதலை பெறுவதில், மிக்க மகிழ்ச்சிதான்.இனிமேல் வீணாக கவலையோ,கலக்கமோ படவேண்டாம். ஓரளவு அதிர்ஷ்டகரமான பலன்களைப் பெறப்போகிறீர்கள்.கணிசமாக பணம் வரும். உங்கள் எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும். அனைத்து விஷயங்களையும் நல்ல கண்ணோட்டத்துடன் காண்பீர்கள். பங்கு வர்த்தகத்தில் இலாபம் குவியும். அந்த இலாபத்தை எதிர்காலத்திற்காகச் சேமிப்பீர்கள்.ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக்கொள்வீர்கள். தந்தை வழியில் சில அனுகூலங்களைக் காண்பீர்கள். உங்களை எதிர்த்தவர்கள் அடங்குவார்கள். உத்யோகஸ்தர்களுக்கு விரும்பிய பணி உயர்வு கிடைக்கும். இதனால் ஊதியம் உயரும். மேலதிகாரிகள் உங்களை நம்பிப் புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உடலில் இருந்த சோர்வும், மனதிலிருந்த குழப்பமும் மறையும். இதனால் உங்கள் தோற்றத்தில் பொலிவு உண்டாகும். சக ஊழியர்கள் உங்களிடம் பகை மறந்து நட்பு பாராட்டுவார்கள். அலுவலகத்தில் சிறப்பான பயிற்சிகளைக் கற்றறிந்து வெற்றியடைவீர்கள்.

### சனிப்பெயர்ச்சி பார்வைப் பலன்கள்:

உங்கள் இராசிக்கு 10ஆம் இடத்தில் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை இராசிக்கு 4, 7, 12 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் எல்லாம் மாற்றமடைகின்றன.




### 3ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

உங்களின் எண்ணங்களும், செயல்களும் உங்களுக்கு வாழ்வில் உயர்ந்த இடத்தைப் பெற்றுத் தரும். கடினமாக உழைக்க வைக்கும் இராகு பகவான், அதற்கேற்ற பெரும் பலனைத் தருவதற்கும் தயங்க மாட்டார். அதேநேரம் ஓய்வெடுக்க முடியாமல் போவதால் உடலில்

சோர்வு உண்டாகும். எனவே சரியான நேரத்தில் ஆகாரத்தை உட்கொண்டு உடல் வலிமையைத் தக்க வைத்துக் கொள்ளவும். அதே வேளையில் சனி உங்களின் உடல் ஆரோக்யத்தில் சிறு பாதிப்புகளை ஏற்படுத்த முயல்வார்.

### 6ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

உத்யோகஸ்தர்களுக்கு அலுவலகப் பணிகள் சிறப்பாக முடியும். எதிர்பார்த்த பதவி உயர்வும், ஊதிய உயர்வும் பெறுவீர்கள். சிலருக்கு விரும்பிய இடமாற்றங்களும் கிடைக்கும். சக ஊழியர்களின் ஆதரவாலும், நட்பாலும் அலுவலகத்தில் உங்களின் அந்தஸ்து உயரும். சில முக்கியப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பீர்கள். மற்றபடி உங்கள் வேலைகளை முன் கூட்டியே யோசித்துச் செய்தால் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

### 11ஆம் இடத்தை சனி பார்ப்பதால் ஏற்படும் பலன்கள்:

திட்டமிட்ட வேலைகளைத் தள்ளி வைக்க வேண்டிய சூழ்நிலை, சில நேரங்களில் உருவாகலாம். எனவே உங்கள் காரியங்களில் கவனமாக இருக்கவும். மற்றபடி நேர்மையான எண்ணங்களால் உங்களின் வாழ்க்கைத் தரம் உயரும். அலுவலகத்தில் புதிய பொறுப்புகளை ஏற்று நடத்த நல்வாய்ப்பு உருவாகும். இதனால் மனதில் இருந்த காரணமில்லாத வருத்தங்களும், குழப்பங்களும் மறையும்.

### சனி பகவான் 2.11.2014 முதல் 28.11.2014 வரை விசாகம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

குருவின் நட்சத்திரமான விசாகத்தில் சனி சஞ் சரிக்கும் காலத்தில் முடிவுக்கு வராமல் இருந்து வந்த பழைய விவகாரங்களும் இழுபறியாக இருந்து வந்த நீண்டகால முயற்சிகளும் கைக்கூடும். செய்தொழில், வியாபாரம், வணிகம், ஜீவனம் சம்பந்தப்பட்ட வகையில் நெருக்கமாக இருந்து வந்த பார்ட்னர்கள் தனியாகப் பிரிந்து சென்று சுயமாக செயல்பட வேண்டியிருக்கும்.குடும்பத்தில் இருந்து வரும் சிக்கல் சிரமங்கள் மறைந்து முக்கியத்துவம் என்ற அளவில் நல்ல மாறுதலான திருப்பம் ஏற்படுவதற்கான அறிகுறிகளும் சிந்தனைகளும் தெரியும்.

### சனி பகவான் 29.11.2014 முதல் 26.12.2015 வரை அனுசம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

சனியின் நட்சத்திரமான அனுசத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் பணப்பிரச்சனை, சிக்கல் சிரமங்கள் உண்டாகலாம். போட்டி,பொறாமை, எதிர்ப்புகளை சமாளிக்க வேண்டியும் வரலாம். வம்பு, வழக்கு, வியாஜ்ஜியம் கோர்ட் விவகாரங்களில் பலவகையான தொந்தரவுகளைச் சமாளிக்க வேண்டி வரும். அரசாங்க சம்பந்தப்பட்ட விஷயங்களில் இருந்த பல வேண்டாத விஷயங்களும் விவகாரங்களும் மனோவியாக்கூலங்களும் பூர்வீகம் அல்லது தந்தை




வழி சொத்துக்களிலும் இக்கட்டுகளோ இடைஞ் சல்களோ நேரலாம்.

### சனி பகவான் 27.12.2015 முதல் 24.01.2017 வரை கேட்டை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்:

புதனின் நட்சத்திரமான கேட்டையில் சனி சஞ்சரிக்கும் இந்தக் காலத்தில் பூர்வீக ஸ்திர சொத்துக்களில் இருந்து வந்த பிரச்சனைகள் அனுகூலமாக தீர்வு காணும். செய்தொழில், வியாபாரம், வணிகம், ஜீவனம் எதுவானாலும் அபிவிருத்தியும், கணிசமான இலாபகரமான வருமானப் பெருக்கமும் புரண்டுக்கிட்டிருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரிகளிடம் மதிப்பும் மரியாதையும் தனி முக்கியத்துவமும் உயரும். பெண்கள் வகையில் மட்டும் கொஞ்சம் கவனமும் எச்சரிக்கையும் தேவை.

**தொழிலாளர்கள்:** அஷ்டம சனி விலகுவதாலும், சனி பகவான் 9இல் சஞ்சரிப்பதாலும் கொடுக்கல் வாங்கலில் அனுகூலமும் எதிர்பார்த்த பொருள் வரவும், உண்டாகும். சிலருக்கு பண வரவில் அசையா சொத்து உண்டாகும். பிறருக்கு கடன் கொடுப்பது தவிர்க்கவும். செல்வம் செல்வாக்கு உண்டாகும். வருவாயினால் நல்ல பலன்கள் ஏற்படும். இரும்பு மற்றும் ஏனைய உலோக வியாபாரிகள் விஷேஷ இலாபம் எதிர்பார்க்கலாம். புதிய முயற்சிகள் யாவும் வெற்றியைத் தரும். காண்ட்ராக்ட், ஏஜென்சி இலாபகரமாக இருக்கும்.

**பணியாளர்கள்:** அஷ்டமச் சனி விலகுவதாலும், சனி பகவான் 9இல் சஞ் சரிப்பதாலும் உத்தியோகத்தில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். எதிர்பாராத ஆதரவும் ஊதிய உயர்வும் உண்டாகும். மேல் அதிகாரிகளின் கெடுபிடி குறையும். வெளியூர், பயணத்தால் இலாபம் கிடைக்கும். வேலையில்லாத இளைஞர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். வெற்றி கிடைக்கும்

**கலைஞர்கள்:** அஷ்டமச் சனி விலகுவதாலும், சனி பகவான் 9இல் சஞ்சரிப்பதாலும் கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்களின் மூலம் வாய்ப்புக்கள் கிடைத்து ஒரு திருப்புமுனையைத் தோற்றுவிக்கும். பிரமாதமான வாய்ப்புகள் தேடி வரும் புதிய கலைக்கருவிகள் வாங்கும் யோகம் உண்டாகும்.

**அரசியல்வாதிகள்:** அஷ்டமச் சனி விலகுவதாலும், சனி பகவான் 9இல் சஞ்சரிப்பதாலும் உங்களுக்கு மக்கள் மத்தியில் நல்ல பெயர் புகழ் கூடும். வெளியூர், பயணம் உண்டாக வாய்ப்பு உள்ளது. நீங்கள் எதிர்ப்பார்த்த உதவி உங்களுக்கு கிடைக்கும். பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். அரசியலில் உங்கள் செல்வாக்கு கூடும். திடீர் தனவரவு உண்டாகும்.

**மாணவர்கள்:** அஷ்டமச் சனி விலகுவதாலும், சனி பகவான் 9இல் சஞ்சரிப்பதாலும் நல்ல மதிபெண்கள் பெற்று நற்பெயர் எடுப்பீர்கள். ஆசிரியர் பெற்றோர் ஆதரவு நன்றாக இருக்கும். சக நண்பர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். ஒருசில மாணவர்களுக்கு வெளியூர், பயண யோகம் கிட்டும். சிலர் மேல் படிப்புக்காக வெளிநாடு செல்வீர்கள்

**விவசாயிகள்:** அஷ்டமச் சனி விலகுவதாலும், சனி பகவான் 9இல் சஞ்சரிப்பதாலும் விவசாயிகளுக்கு கடன்கள் குறையும். பயிர் நிலையில் மனத் திருப்தி உண்டாகும். தொல்லைகளைத் திறமையுடன் சமாளித்து விடுவீர்கள்.தானிய உற்பத்தியால் கனிசமான ஆதாரம் உண்டாகும்

**பெண்கள்:** அஷ்டமச் சனி விலகுவதாலும், சனி பகவான் 9இல் சஞ்சரிப்பதாலும் குடும்பத்தில் புதிய அனுகூலம் உண்டாகும். திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறும். புத்திர வழியில் மகிழ்ச்சி உண்டாகும். சகோதர வழியில் நற்பலங்கள் உண்டாகும். சிலருக்கு வெளியூர், பயணங்கள் திடீரென்று உண்டாகும். அந்தப் பயணங்கள் மூலம் உயர்வும் நற்பலனும் ஏற்படும். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். புதிய பொருள் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். கணவனுக்கு தொழிலில் ஏற்றமும் உயர்வும் கொடுக்கும். சிலருக்கு புத்திர பாக்கியம் ஏற்படும். குடும்ப ஒற்றுமை சிறப்பாக இருக்கும். வேலை தேடும் பெண்களுக்கு வேலை கிடைக்கும்

## சனி வக்கிரப் பலன்கள்:

**15.03.2015** முதல் **02.08.2015** வரையும் **26.03.2016** முதல் **12.08.2016** வரையும் இரண்டு முறை வக்கிரத்தில் சஞ்சரிக்கிறார்.

பொருளாதார வசதிகள் தேவைக்கு அதிகமாகவே இருந்து வரும். எதிர்பாராத வகையில் அதிர்ஷ்டகரமான வாய்ப்புகளும் எதிலும் திறமையும் பேரும் புகழும் அதிகரித்துக் கொண்டிருக்கும். குடும்பத்தில் பெண்கள் சம்பந்தமான சுபகாரிய முயற்சிகள் கூடி வரும். பெண்களாலும் அனுகூலமோ, ஆதாயமோ சந்தோஷமோ கிட்டிடும். பணப் பிரச்சனையும் கடன் கஷ்டமும் உடல் உபாதையும் நிவர்த்தியாகும். சொத்து சம்பந்தமான பிரச்சனைகளும் விவகாரங்களும் அனுகூலமாக பகைமை உணர்ச்சி மறந்து போகும்.



## நட்சத்திர பலன்கள்:

**பூரட்டாதி நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் பிறந்தவர்கள்:**

கொடுக்கல் வாங்கலில் அனுகூலமும் எதிர்பார்த்த பொருள் வரவும், உண்டாகும். சிலருக்கு பண வரவில் அசையா சொத்து உண்டாகும். பிறருக்கு கடன் கொடுப்பது தவிர்க்கவும். செல்வம் செல்வாக்கு உண்டாகும்.

**உத்திரட்டாதி, நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்:**

உத்தியோகத்தில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். எதிர்பாராத ஆதரவும் ஊதிய உயர்வும் உண்டாகும். மேல் அதிகாரிகளின் கெடுபிடி குறையும். வெளியூர், பயணத்தால் இலாபம் கிடைக்கும். வேலையில்லாத இளைஞர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். வெற்றி கிடைக்கும்.

**ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்:**

மக்கள் மத்தியில் நல்ல பெயர் புகழ் கூடும். வெளியூர், பயணம் உண்டாக வாய்ப்பு உள்ளது. நீங்கள் எதிர்ப்பார்த்த உதவி உங்களுக்கு கிடைக்கும். பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். அரசியலில் உங்கள் செல்வாக்கு கூடும். திடீர் தனவரவு உண்டாகும்.

## பரிகாரம்:

இலட்சுமி நாராயண பூஜை செய்யவும். ஸ்ரீசூக்தம் படிக்கவும். சுகமான வாழ்வுக்கு சிறப்பான நன்மைகள் யாவும் கிடைத்திடும். காற்று உள்ளபோதே தூற்றிக் கொள்ளலாம். கனவில் கூட கடவுளைச் சரணடையுங்கள் சங்கடங்கள் யாவும் நீங்கி இங்கிதத்தோடு இனிதே வாழ்ந்திடலாம்.